
www.tamilarangam.net

# எரிமலை

பெப்ரவரி 2001



“நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்”

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பாதுகாப்புப் பெட்டகம். எனக்குத் தொடர்ந்து எரிமலை படிக்க ஆவலாக உள்ளது.

ந.பாலசுப்பிரமணியம்
ஈரோடு
தமிழ்நாடு

நான் சின்ன வயதிலிருந்து ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து அவர்களுடைய நியாயமான போராட்டத்தை என்றும் ஆதரிப்பவன். சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களைப் பழிவாங்கும் போக்கால் நாள்தோறும் என் மனதில் வேதனைக் குமுறல்கள் எழும். எனது சட்டக்கல்லூரி நண்பர் வாயிலாக எரிமலை இதழ்களைப் படித்து வருகின்றேன். எமது இரத்தத்தின் இரத்தங்களின் சாதனைகள் வார்த்தைகள் எத்தனையோ இருந்தும் நன்றி மட்டும் கூறுகின்றோம்.

ச.பிரபாகரன்
கொட்டமடிங்கின்
ஜேர்மனி.

எரிமலை தமிழினத்தின் உணர்வுகளையும் தமிழீழத்தின் அவலங்களையும் எடுத்துக்காட்டுகின்றது. தமிழகத்தில் செய்தித்தாள்கள் சில ஈழ விடுதலையைப் பற்றித் தப்பான செய்திகள் வெளியிட்டு வருகின்றன. அந்த இருள்கரங்களுக்கு மத்தியில் எரிமலை சுடரும் சூரியனாக ஒளிர்கின்றது.

த.ஞானம்
தர்மபுரி
தமிழ்நாடு

# அக்கறைப்பூக்கள்

எரிமலையின் கட்டுரைகளை நூலகத்திலிருந்து படித்து வருகின்றேன். நவம்பர் 2000 இதழை முழுதாகப் படிக்கும் வாய்ப்பு இப்போதுதான் கிடைத்தது. தம்பியின் மாவீரர் நாள் உரை களத்தினை உணர்த்திய எழுச்சி மிகு உரை. யாழ்ப்பாண மீட்புச் சூளுரை எம் போன்றோர்க்கு தமிழுணர்வு ஊற ஒரு தூண்டல். சிங்களப் பயங்கரவாதங்களைச் சுட்டும் கட்டுரை எம் நெஞ்சங்களை நெகிழ வைக்கின்றது.

ஓயாத அலைகள் ஒளிப்படத் தொகுப்பு அருமை. பெண்களின் பங்கேற்பு இன்றைய கருத்தியல்கட்கு வடிவந்தருவது போல அமைந்துள்ளது. காண்டீபனின் கவிதை மாவீரர் நாள் நினைவுகட்கு சிகரம். போராடப் பிறவிகள் கோரும் இறுதி வரிகள் ஈழம் வெகுதொலைவல்ல எனும் பெரு நம்பிக்கையை ஊட்டியது.

அஜிதா
சேலம்
தமிழ்நாடு

விடுதலை வெல்ல எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள். கடந்த மாதம் சென்னையில் கன்னிமாரா நூலகத்தில் எரிமலையைப் படிக்க நேர்ந்தது. களப் போராளிகளின் சாகசங்களை, வீரச்செயல்களை நேரில் பார்த்தது போல இருந்தது. அழகான நேர்த்திய தமிழைப் படிக்கப் படிக்க ஆவல் உண்டானது. அற்புதமான காணக்கிடைக்காத செவ்விகள், புகைப் படங்கள் என எரிமலை ஏடு ஒரு கண்டு வியப்பிலாழ்ந்து போகின்றேன். அவர்களது மாவீரத்திற்கு தலை வணங்குகின்றேன்

ம.ரவி முத்தமிழ்வேந்தன்
தர்மபுரி
தமிழ்நாடு

நான் எரிமலையின் நீண்ட நாள் வாசகி. இங்கே நாங்கள் வெகு ஆர்வத்தோடு எரிமலை இதழை வாசித்து வருகின்றோம். தாயகத்தோடு எம்மை இணைக்கும் ஊடகமாக எரிமலை விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை. எரிமலையின் விடுதலைக்கு உரமூட்டும் செயற்பாட்டிற்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள். வருகின்ற எரிமலை இதழ்களின் முகிழ்ப்பில் தாயக வீச்சைக் காண ஆவலோடு காத்திருக்கின்றேன்.

எஸ்.ஆர். செல்வி
லெபனான்

எரிமலையில் வரும் அத்தனையும் தவறவிடாமல் படிப்போம். எல்லா ஆக்கங்களும் வரவேற்கக்கூடியவை. எரிமலையில் வரும் அத்தனை அட்டைப்படங்களும் தமிழீழத்தை நோக்கி இழுத்துச் செல்கின்றன. நாம் புலம்பெயர்ந்த மண்ணில் வாழ்ந்தாலும். எம் ஈழமண்ணில் நாம் இருந்து கொண்டு படும் வேதனையைப் போல எரிமலையைப் படிக்கும்போது கண்ணீர் ஆறாக ஓடுகின்றது. எம் தாயக நினைவுகள் தாங்கி வரும் எரிமலைக்கு நன்றி கூற

நவம்பர், டிசம்பர் எரிமலை நன்றாக உள்ளது. குறிப்பாக நவம்பர் எரிமலையின் சிறப்பு இணைப்பு வெகு நன்றாக உள்ளது. என்னுடன் தொழிற்சாலையில் வேலை செய்யும் வெளிநாட்டவர்கள் ஆங்கிலேயர்கள் அனைவரையும் பிரமிக்க வைத்துவிட்டது. இன்றும் அவர்கள் வியப்புடன் நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். புகைப் படங்களுக்கு ஆங்கிலத்திலும் விளக்கம் கொடுத்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். உலகத் தமிழரின் இன எழுச்சிக்கு எரிமலையின் பங்கு அளப்பரியது.

ச.சசிதரன்
கென்ற்
ஐக்கிய இராச்சியம்

தை மாத எரிமலை இதழ் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. கிட்டண்ணாவின் ஓவியத்தை அட்டையில் தாங்கி வந்த எரிமலையைப் பார்த்த வேளையில் கிட்டண்ணாவே நேரில் வந்ததுபோல இருந்தது. பெண் காவல்துறையினரின் செயற்பாடுகளை விளக்கும் முகமாக அமைந்திருந்தது செவ்வி, அது மாத்திரமின்றி தமிழீழ நிர்வாகத்தின் சீரிய தன்மையை புலப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. முதற் பெண் தளபதி சோதியாவின் நினைவில் நிறையச் செய்த எரிமலைக்கு நன்றிகள்.

பா.ஜெயராஜ்
பாரிஸ், பிரான்ஸ்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உள்ளே...

## கட்டுரை

நாணயப் பெறுமதியை மிதக்கவிடும் அரசின் இயலாமையின் வெளிப்பாடு பக்கம் - 8
சிறீலங்காவின் பொருளாதார வளர்ச்சி குறித்து முரண்படும்... பக்கம் - 16
நிழல் ஆக்கிரமிப்பு பக்கம் - 18
எரிமலையின் பெருநிலம் பக்கம் - 22
பிரிட்டனின் விருப்பு என்ன? பக்கம் - 28
சித்தாந்த உறவு பக்கம் - 29
புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம்.... பக்கம் - 30
போரிடுங்கள் பேசுங்கள்... பக்கம் - 34
போர்நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரிக்க விரும்புவது ஏன்? பக்கம் - 37
மிருசுவில் படுகொலை இனப்படுகொலையின் இன்னொரு சாட்சி பக்கம் - 38
எல்லாம் அவன் செயல் பக்கம் - 44
அடைகாத்த வனமும் அலையெழுந்த விதமும் பக்கம் - 46
ஆங்கிலேயர் தமிழர் உறவில் நிகழ்ந்த துக்கநாள் பக்கம் - 50

## அணையாத தீபங்கள்

மேஜர் கேடில்ஸ் பக்கம் - 48

## சிறுகதை

அம்மாவுக்குத் தெரியும் –ஆ.ந பொற்கோ பக்கம் - 32
அரசனின் வருகை –உமா வரதராஜன் பக்கம் - 40

## கவிதை

காலங்களற்ற அதிசயம்- சூரியநிலா பக்கம் - 09
இயற்கையே நீயுமா?- அ.அன்ரனி பக்கம் - 15
எம் விடுதலையைப் பாடியபடி காற்று வரட்டும், மழை வரட்டும்..... -வியாசன் பக்கம் - 20
வாசகர் கவிதைகள் பக்கம் - 39

## தொகுப்பு

பொங்குதமிழ் பக்கம் - 26
தமிழர் வரலாற்றில் பெப்ரவரி மாதம் பக்கம் - 43
பதிவுகள் பக்கம் - 49
மீள்பார்வை ஜனவரி பக்கம் - 51
கண்கள் கூறும் வார்த்தைகள் பக்கம் - 52

04 53வது சுதந்திரதினம்....



06 புலிகளின் போர்நிறுத்தம் சிங்கள அரசின் போர்வெறி



10 கால்கள் சேற்றில் புதைய கைதடி நோக்கிய ஒரு பயணம்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது

எமது தேசிய சுதந்திரப் போராட்டம் இன்று முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஒரு உள்நாட்டு நெருக்கடியாகத் தோன்றிய எமது பிரச்சினை இன்று உலகத்தை ஈர்க்கும் ஒரு சர்வதேச நெருக்கடியாக விஸ்வரூபம் கொண்டுள்ளது. சிங்கள அரசானது எம்முடன் தனித்து நின்று போராடவில்லை. ஏகாதிபத்திய நாசகார சக்திகள் அனைத்தையும் தனக்குப் பக்கபலமாக அணிதிரட்டி எமது மக்களுக்கு எதிராக ஒரு இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகிறது.

எமது கோரிக்கை என்ன? எமது அரசியல் இலட்சியம் என்ன? என்பதில் நாம் மௌனமாக இருந்துவிடவில்லை. எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிய திட்டம் ஒன்றை நாம் முன்வைத்தோம். நாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலும், வரலாற்று ரீதியாக அமைந்த எமது பாரம்பரியத் தாயக பூமி எமது சொத்துடமை என்பதாலும், எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை எமக்குண்டு. இந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே எமது தனியரசுப் போராட்டம் அமைந்திருப்பதால் எமது போராட்டம் நியாயமானது என்பதை விளக்கியிருந்தோம். தேசிய சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டம் நீண்ட வரலாற்றையுடையது. பல வடிவப் போராட்டங்களால் பரிணாமம் பெற்றது. காந்தியப் பாதையில், அமைதிவழிப் பாதையில், மொழிஉரிமை கோரி, சமஉரிமை கோரி, சமஸ்டி கோரி நடைபெற்ற அகிம்சை வடிவப் போராட்டங்கள் அனைத்துமே எதிரியின் இராணுவ ஒடுக்குமுறையால் அடக்கியொடுக்கப்பட்டன. இறுதியில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தனியரசுக் கோரிக்கை பிறந்து, அது புரட்சிகர ஆயுதப் போராட்ட வடிவம் பெற்றது. இப்படியாக தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றின் உச்சக்கட்டமாகவே தமிழீழக் கோரிக்கையும் அதனை அடையும் மார்க்கமாக ஆயுதப்போராட்டமும் பரிணமித்தது என்பதை விளக்கியிருந்தோம். தமிழீழ மக்களின் தேசியத்திற்கும், தாயகத்திற்கும், தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் உத்தரவாதமளிக்கப்படாத எந்த ஒரு தீர்வையும் நாம் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதே நமது உறுதியான நிலைப்பாடாக இருந்தது. ஆனால், சிங்கள அரசு எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

சிங்கள இனவாத ஆட்சியாளர் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தெட்டத் தெளிவாகியுள்ளது. எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் பூதமாகத் திரித்துக்காட்டி, சுதந்திரப் போராளிகளை வன்முறைப்பித்தர்களாகச் சித்தரித்துக் காட்டி, இராணுவரீதியாக எம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். இந்த இலக்கில் அவர்கள் முழுச்சிங்கள தேசத்தையுமே இராணுவமயமாக்கி வருகிறார்கள். பெரியதொரு இனயுத்தத்திற்கு ஆயத்தங்கள் செய்து வருகிறார்கள்.

தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது. அதுவே எமது பலம். அதர்மமும், பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றது. அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்வது நாம். ஏனெனில் என்றும் அழியாத தர்மம் எமக்குப் பக்கபலமாக இருக்கின்றது.

**– தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.**

(திம்புப் பேச்சுவார்த்தையின்போது 1985ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து...)






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைவாசல்




**கலை பண்பாட்டு**

**அரசியல் சமூக ஏடு**

★

இருபதாம் ஆண்டு

பெப்ரவரி

**2001**

திருவள்ளுவர் ஆண்டு 2032

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும்
தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:erimalai@freesurf.fr

## அவர்களைத் திருத்துங்கள் அல்லது எங்களை அங்கீகரியுங்கள்!

பொங்குதமிழ் நிகழ்வுகள் ஒருபுறமும், தமிழர்களின் தேசிய தலைமைப் பாத்திரத்தை பகிரங்கமாக வெளிக்காட்டும் மக்கள் எழுச்சிகள் மறுபுறமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒரு பெரும் மக்கள் போராட்டமாக மேலும் செழுமைப்படுத்தியுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில்கூட தமிழீழ மக்கள் வெளிக்காட்டும் துணிச்சலும் - அரசியல் விழிப்பும் தமிழீழ விடுதலைப் போரை எதிர்த்துச் செயற்படும் பல தரப்பையும் வாய்மூட வைத்துள்ளது. ஏமாற்றுகரமான தேர்தல்கள், திசைதிருப்பும் அறிக்கைகள் என்பனவற்றின் துணை கொண்டு புலிகளினதும், தமிழர்களினதும் அரசியல் நிலைப்பாட்டை பலவீனப் படுத்த முயன்ற சிங்களத் தலைமை மற்றுமொரு பூகம்பம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மையம் கொள்வதைக் கண்டு வருகின்றது. தனது படைகளின் நேரடியான அச்சுறுத்தல், ஈபிடிபி போன்ற அடியாட்படைகளின் பீதியூட்டும் எச்சரிக்கைகள் என்பனவற்றையும் மீறி "பொங்குதமிழ்" போன்ற நிகழ்வுகள் இலங்கைத் தீவினைப் பிடித்து உலுப்பி வருகின்றது.

மறுபுறம், புலிகளைத் தடை செய்யக் கோரும் ஊர்வலங்களிலும், ஆயுதக் குவிப்பிலும், ஆட்சேர்ப்பிலும் தீவிரமாக சிங்களம் ஈடுபட்டுள்ளது. புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்த அறிவிப்பை சிங்களத்தின் இன்றைய போர்த்தேவதை சந்திரிகா பலவீனம் என்கின்றார். வழமையான பொய்கள் பூசப்பட்ட செவ்விகளிலும், அறிக்கைகளிலும் இனவெறித் தீயை அம்மையார் தூண்டிவிட்டு வருகின்றார்.

இம் முரண்பாடுகளை அண்மையில் கொழும்பு சென்ற ஐரோப்பிய பாராளுமன்றத் தூதுக்குழுவினர் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளனர். இரு தேசிய இனங்களுக்கும் இடையேயுள்ள வெறுப்பும் - பகைமையும் மிக ஆழமானது என அவர்கள் கூறுகின்றனர். யாழ்ப்பாணத்தில் வாழ்வது திறந்தவெளிச் சிறையில் வாழ்வதைப் போன்றது என யாழ்.வாசியொருவர் தம்மிடம் சொன்னதாக அவர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய ஆழமான - வரலாற்றுபூர்வமான முரண்பாட்டிற்குத் தீர்வு காணமுயலும் நோர்வே அரசு, பேச்சுக்களுக்கான ஆரம்பப் படிகளையே தாண்ட முடியாதவாறு சிங்களத்தால் தடுக்கப்பட்டு வருகின்றது. நோர்வேயின் சிறப்புத் தூதுவர் பிரேரிக்கும், புரிந்துணர்வுக்கான உடன்பாட்டில் கையொப்பமிட புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆனால், சந்திரிகா அவ்உடன்பாட்டில் கையொப்பமிடாது காலத்தை இழுத்தடித்து வருகின்றார். தமது இராணுவத்தைப் பலப்படுத்தும் பணியில் மட்டுமே முழுமூச்சாக ஈடுபட்டுள்ள சந்திரிகா, புலிகளின் அரசியல் நகர்வுகளுக்கு ஈடுகொடுப்பதற்காகவே நோர்வேயின் முயற்சிகளைப் பாவிக்கின்றார் என்பதற்கான சகல ஆதாரங்களும் மிகத் தெளிவாக உள்ளன.

இதனை புலிகளின் 3வது போர்நிறுத்தத்திற்கான அழைப்பு கோடிட்டுக் காட்டியுள்ளது. சிங்களத்தின் போர்வெறியை தடுத்து நிறுத்தி அவர்களைப் பேச்சுக்களுக்கு இழுத்துவர உதவுமாறு புலிகள் இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய சமூகம் என்பனவற்றைக் கேட்டுள்ளனர். யாழ்.குடாநாடு தமிழர்களால் மீட்கப்படும் எல்லையை அடைந்தபோது தலையிட்டு உதவிய தரப்பினர், இப்போது பேச்சுக்களுக்கும் - இணக்கத்திற்குமான உண்மையான சந்தர்ப்பம் உருவாகியுள்ள சூழ்நிலையில் தமது பகிரங்க ஆதரவைக் கொடுக்க வேண்டிய கட்டத்தில் உள்ளனர். சிங்களத்தை தம்மால் திருத்த முடியாதுவிடின், எமது தேசிய விடுதலைப் போரை அங்கீகரித்து தமிழீழ மக்களின் விடுதலைக்கு இந்நாடுகள் உதவிட வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

53வது ஆண்டு



விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்தில்
அபார நம்பிக்கை கொண்டதன் பயனாக நிம்மதியாக நடந்தேறிய

# சிறீலங்காவின் சுதந்திரதினம்

மொறிஸ் தர்மபாலன்

## 1948 – பெப்ரவரி – 04

### முதலாவது சுதந்திரதினம்.

"ஒரு துளி இரத்தம்கூட சிந்தாமல், இவ்அதிகார மாற்றத்திற்கு அடிகோலியதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இரத்தம் சிந்துதல் என்பது இலங்கையின் பெருந்தொகை பௌத்தர்களின் மதத்துக்கே விரோதமானது"

இக்கூற்றானது, இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்பட்ட இலங்கைத் தீவின், முதலாவது சுதந்திரதினத்தன்று, அதாவது பிரிட்டிஸ் முடியாட்சியிலிருந்து இலங்கையின் ஆட்சி அதிகாரம், பெரும்பான்மையினராக விருந்த சிங்கள இனத்தவர்களின் கைகளில் மாறிய 1948 பெப்ரவரி 04 அன்று, அப்போது ஏக பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட டி.எஸ் சேனநாயக்க அவர்களால் சிங்கக்கொடியை ஏற்றி வைத்த பின் கூறப்பட்டது. *(இங்கு ஏற்றப்பட்ட சிங்கக் கொடியை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அது பற்றிப் பிறிதோர் இடத்தில் கவனிப்போம்.)*

இனி 52 ஆண்டுகளைக் கடந்து 2001-பெப்ரவரி-04ந் திகதிக்கு வருவோம்...

### 53வது சுதந்திரதினம்

"1815 மார்ச் இரண்டாம் நாள் எமது நாடு பிரித்தானிய முடியரசின் முழுஆதிக்கத்துக் குட்பட்டபின், வணக்கத்துக்குரிய வாரியபொல சிறீசுமங்கல தேரர் தலைமையில் குருமாரும், ஏனையோரும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதன் விளைவாகவே நாம் பிரிட்டிஸ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டோம். சுதந்திரப் போராட்டத்தில் தமது உயிர்களை அர்ப்பணித்த எமது தியாகிகளை இத்தருணத்தில் நாம் நினைவு கூர்வது எம் தலையாய கடனாகும்"

இது கந்தகநெடி மணக்கின்ற இன்றைய சிறீலங்காவில் அதி வணக்கத்திற்குரிய சிறீ தம்மதீஸ்வர ரத்னபால புத்தரகித்தாபிதான தேரர் அவர்களால் இவ்வாண்டு சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்ட கூற்றாகும்.

*(மேலே டி.எஸ்.சேனநாயக்க கூறிய கூற்றை இவ்விடத்தில் மீண்டுமொருமுறை வாசித்துப் பார்க்கவும்)*

இரண்டுக்குமுள்ள முரண்பாடுகள் இப்போது உங்களுக்கு தெளிவுபட்டிருக்கும் என நினைக்கிறேன். இம்முரண்பாட்டிற்கு வலுச் சேர்க்கும் இன்னொரு ஆதாரத்தையும் கவனியுங்கள்.

3ஆண்டுகள் பின்நோக்கிச் செல்வோம்....

## 1998 பெப்ரவரி 04

### 50வது சுதந்திரதினம்.

சுதந்திர இலங்கையின் 50 ஆண்டுகால நிறைவினைக் கொண்டாடும் சுதந்திரதினப் பொன்விழா. யாரும் மறந்திருக்க வாய்ப்பில்லை. காரணம் பௌத்த புனிதத்தின் கொழுகொம்பாம் கண்டி தலதா மாளிகைக் குண்டுவெடிப்பு. "ஜெயசிக்குறுவினால் கண்டிவீதியைத் திறந்து, யாழ்ப்பாணப் படையினருடன் மக்களையும் நான் கண்டியில் நின்று வரவேற்பேன் பொன்விழா நாளில்" என்று கூறியிருந்தார் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த. புலிகளின் ஓயாத அலையினால் ஜெயசிக்குறு கிளிநொச்சி, ஆனையிறவென சாவகச்சேரி வரை நாறிப்போன சிங்களப்படைகளின் பரிதாபக்கதைவேறு. பாதை திறக்கப் போய், இருந்த பாதையையும் இழந்தது அரசு. இது யாவரும் அறிந்ததே. அதை விடுத்து நாம் விடயத்துக்கு வருவோம்.


சுதந்திரதினப் பொன்விழா நினைவாக சிறீலங்கா அரசு மத்தியவங்கியினூடாக சில புதிய நாணயங்களையும், நாணயத் தாள்களையும் வெளியிட்டது. இதில் முதன்முறையாக ஓர் 200ரூபா தாளையும் அரசு வெளியிட்டிருந்தது. அதன் பின் பக்கத்தில் சிங்கள மன்னர்கள் பிரித்தானியப் படைகளுடன் சமராடுவதாகவும், பௌத்த மதகுரு ஒருவர் இலங்கைக் கொடியை ஏற்றிவைப்பதுமாக ஓர் ஓவியம் சித்தரிக்கின்றது. இதன் அர்த்தம் என்ன? அதிவண. புத்தரகித்தாபிதான தேரர் அவர்கள் என்ன சொன்னாரோ அதன் அர்த்தம்தான் இது. இவ்விடத்தில் இன்னோர் முக்கிய விடயத்தையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். யாதெனில், இந் நாணயத்தாள் தமிழர்கள் வந்தேறு குடிகள் என அறிக்கைவிட்ட சந்திரிகா அம்மையாரின் காலப்பகுதியில் அவரது ஆட்சிக்காலத்திலேயே வெளியிடப்பட்டது என்பது முக்கியமானதாகும்.

ஒட்டுமொத்தத்தில் கூட்டிக்கழித்துப் பார்க்கின்றபோது, சிங்களப் பேரினவாதமானது முழு இலங்கை நிலமுமே பௌத்தவழிவந்த சிங்களவர்க்கே உரித்து எனச் சொந்தம் கொண்டாட முனைவது வெளிப்படை.

இதன் வெளிப்பாடே 1948இல் இலங்கையின் முதலாவது சுதந்திர தினத்தில் பௌத்தக் கொடி ஏற்றப்படவில்லை என்பதற்காக, பௌத்த மகாசங்கம் சுதந்திரதினத்தைப் பகிஸ்கரிப்புச் செய்தது. இங்கு ஏற்றப்பட்டது சிங்கக் (சிங்களக்) கொடியாக இருந்த போதிலும் அது பௌத்தக் கொடியாகவே இருக்க வேண்டும் என்பதில் ஆரம்பத்திலேயே குறியாய் இருந்தது பௌத்த சிங்களம். இந்த வகையிற் பார்க்கின்றபோது இலங்கையின் முதலாவது சுதந்திரதினத்திலேயே தமிழர்கள் ஓரங்கட்டுப்பட்டு விட்டார்கள் என்பதே வரலாறு. இத்தகைய ஓரங்கட்டல்களின் பரிணாமவளர்ச்சியினூடே இன்று சிறீலங்கா தனது 53வது சுதந்திரதினத்தைக் கொண்டாடியிருக்கின்றது.

கடந்த கால வளமைகளைப் போலல்லாது இம்முறை சிறீலங்கா அரசானது தனது 53வது சுதந்திரதினத்தை எந்தவிதப் பயப்பீதியுமின்றி, அதிக பாதுகாப்புக் கெடுபிடிகளின்றி, துணிந்து சிறப்பாகக் கொண்டாடியிருக்கின்றது. கடந்த காலங்களில் ஜனாதிபதியோ, அன்றிப் பிரதமரோ ஏன் முப்படைத் தளபதிகளோகூட சுதந்திரதின வைபவங்களில் நேரடியாகக் கலந்து கொள்ளுவதில்லை. பாதுகாப்பான ஓரிடத்தில் இருந்து கொண்டு தொலைக்காட்சியூடாக நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்கள். ஆனால் இம்முறை நேரடியாகச் சென்று இராணுவ மரியாதையை ஏற்று உரையாற்றியிருக்கின்றார் ஜனாதிபதி. என்றுமில்லாதவாறு பாராளுமன்ற உறுப்பினர்களும் பெருந்

1948 பெப்ரவரி 04 - முதலாவது சுதந்திரக் கொடியேற்றும் டி.எஸ். சேனநாயக்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொகையில் நிகழ்வுகளில் கலந்துகொண் டுள்ளார்கள். இந்தத் திடீர் மாற்றமும், நம் பிக்கையும் அரசிடம் இருந்து எப்படிப் பிறந் தது என்று யாரிடமும் கேட்கவேண்டியதில்லை. ஏனெனில் இதற்கெல்லாம் காரணம் விடுத லைப் புலிகளின் யுத்தநிறுத்தமே, என்பது அனைவருக்கும் தெரிந்த சங்கதி.

இவ்வாறே சிறீலங்கா அரசும் விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்தில் அபார நம்பிக்கை கொண்டதன் விளைவாகவே சுதந்திரதின வைபவங்களில் எந்தவித அச்சமும் இன்றி கலந்து கொண்டுள்ளது. இதன் பின்னணியில் சிறீலங்கா அரசானது ஓர் உண்மையை ஒப்புக் கொண்டது மட்டுமன்றி, அதைத் தனது செயற்பாடுகளின் மூலம் வெளிநாடுகளுக்கும் உணர்த்தியுள்ளது. யாதெனில் 'விடுதலைப் புலிகள் சொன்னால் சொன்னதுதான்' யுத்த நிறுத்தம் என்றால் எக்காரணத்துக்காகவும் அதை மீறிச்செயற்படமாட்டார்கள் என்ற இந்த உறுதியான நம்பிக்கை அரசிடம் இருந் திருக்கின்றது. இந்த நம்பிக்கையின் பிரகா ரமே ஜனாதிபதி உட்பட அனைத்து முக்கிய பிரமுகர்களும் சுதந்திரதின விழாக்களில் நேரடி யாகப் பங்கு கொண்டமை. இதன் மூலம் தனது வாயாலேயே சிறீலங்கா அரசானது வெளிஉலகிற்குச் செய்து வந்த போலிப்பிரச் சாரம் பிசுபிசுத்துப்போயுள்ளது. " விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தம் கபடத்தனமானது. அவர்களை நம்ப முடியாது" என ஜனாதிபதியும், அவரது சகாக்களும் வெளிஉலகிற்குக் கூறி வருகின்ற அதேவேளை, சுதந்திரதின வைப வங்களில் வளமை போலல்லாது இம்முறை நேரடியாகக் கலந்துகொண்டதன் மூலம், தமது வாய்க்குத் தாமே பூட்டுப்போட்டுக் கொண் டுள்ளனர்.

மேற்குறித்த முரண்பட்ட அரசின் செயற் பாடுகள் மூலம் மிக இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியது யாதெனில் 'அரசு சமாதா னத்தை விரும்பவில்லை' என்பதே. மனதார புலிகள் மீது நம்பிக்கை வைத்துக்கொண்டு, பேச்சளவில் அவர்களைப் பொல்லாதவர்கள் என்று சாடி வருகிறது.

இது இவ்வாறிருக்க, தமிழ் மக்களோ சிறீலங்காவின் சுதந்திரதினத்தை வழமை போல துக்கதினமாகவே அனுட்டித்து வருகின் றனர். 53வது சுதந்திரதினத்தை துக்கதின மாகவே அனுட்டிக்கும்படி யாழ், மட்டு பல் கலைக்கழகங்கள் நாட்டு மக்களையும் மாண வர்களையும் கோரியிருந்தனர். அதன்படியே பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்புப்பட்டி யணிந்து, பொதுமக்களுக்கும் விநியோகித்து, பல்கலைக்கழக சூழலில் கறுப்புக் கொடிகள், வாழைமரங்கள், சுவரொட்டிகள் என்பவற்று டன் 'சிறீலங்காவின் சுதந்திர நாள், தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கு சாவு மணியடித்த நாள்' போன்ற வாசகங்களுடன் பதாகை களும் கட்டப்பட்டு முழு அளவிலான துக்ககர மான நிகழ்வாக சிறீலங்காவின் சுதந்திரதினம் அனுட்டிக்கப்பட்டது. இதேநிலையே மட்டக் களப்பிலும்.

உண்மையில் சிறீலங்காவில் சுதந்திரம் என்பதே கேள்விக்குறியான ஒன்று. சிறீலங்கா



2000 பெப்ரவரி 04
நாட்டின் தலைவர்கள் பயத்தில் பதுங்கிவிட சுதந்திரமின்றி சுதந்திரக் கொடியேற்றும் சபாநாயகர் கே.பி. ரத்நாயக்க.

அரசோ சரி, சிங்கள மக்களோ சரி, நினைத்த படி எதையும் செய்ய முடியாது. தமிழர்களைப் பொறுத்தவரை 1948இல் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதே தவிர தமிழர்களுக்கு சுதந்திரமென் பது கிடைக்கவில்லை என்பதே பொருத்தம். சிங்களவருக்கோ இன்று சுதந்திரதினத்தைக் கொண்டாடவே சுதந்திரமில்லை. அந்த அள விற்கு யுத்தம் நாட்டை ஆக்கிரமித்துவிட்டது. இதற்கு ஓர் நல்ல, அழிவற்ற முறையில் தீர்வைக் காண விடுதலைப் புலிகள் ஒரு தீர்க் கமான முடிவை எடுத்து யுத்த நிறுத்தத்தையும் கடைப்பிடித்து வருவதுடன், அதனை மேலும் மேலும் நீடிப்புச் செய்து அரசின் நல்ல பதிலுக்காக சந்தர்ப்பம் வழங்கி வருகின்றார் கள். ஆனால் அரசோ நாட்டை யுத்த அழிவுப் பாதையிலேயே கொண்டு செல்ல முனைகிறது. சமாதானத்துக்கான சந்தர்ப்பங்களை தட்டிவிடு கிறது. புலிகளின் பலத்தைப் புரிந்து கொள்ளாது மீண்டும் மீண்டும் தப்புக் கணக்குப் போடுகிறது.

நடப்பாண்டுப் பாதீட்டில், பாதுகாப்புச் செலவிற்கென 6338 கோடியே 90இலட்சத்து 23 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கி, சண்டைக்குத் தயாராகின்றது- சிறீலங்காவின் ரூபா நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்து கொண்டு போக பாதுகாப்புச் செலவோ கடந்த ஆண்டு 8ஆயி ரம் கோடி ரூபாவாக உயர்வடைந்தது போன்று இவ்வாண்டு 10ஆயிரம் கோடி ரூபாவாக அதி கரிக்கலாம் என நம்பப்படுகிறது. சந்திரிகா அம்மையார் அவர்கள் ஆட்சிபீடமேறிய பின்னர், முதலாவது பாதீட்டில் (1995) 25 பில்லியன் ரூபாவாக இருந்த பாதுகாப்புச் செலவு 10,000 கோடி ரூபாவாக நடப்பாண்டில் உயரலாம் என்பதே பல ஆய்வாளர்களின் கருத்து. இது நாட்டை எந்த அளவுக்கு பொருளாதாரப் படுகுழியில் தள்ளிவிடப் போகிறதென்பதை உணர்ந்து கொண்டும், அடிக்கடி புலிகளின் பாய்ச்சலுக்கு அள் ளுண்டு இரையாகிப் போகும் பலவீனமான படையினையும் நம்பிக்கொண்டு, "யுத்தமூலமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தப் போகின் றோம்" என சந்திரிகா அரசு கொக்கரித்து வரு வது பரிதாபத்திற்குரியது.

விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையாக 3வது மாதமாக யுத்தநிறுத்தம் நீடிப்பு செய்யப்பட்ட இந்நிலையில், இதற்கும் அரசு ஏதாவது சாக்குப் போக்குகளைக் கார ணம் காட்டக்கூடும். ஆனால் அவற்றை வெளி நாடுகளும் அப்படியே நம்பிக் கொண்டிருக்கு மானால், காலப்போக்கில் மீண்டும் மூழப் போகின்ற பாரிய யுத்த நடவடிக்கையினால் மேலும் பல ஆயிரம் உயிர்கள் மண்ணில் புதைய வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடும். இந்த உயிரிழப்பின் பெரும்பகுதி சிறீ லங்காப்படைகளின் தலைகளிலேயே கவிழும் என்பதும் திண்ணம்.

எனவே யாவற்றையும் கவனத்தில் கொண்டு சிறீலங்கா அரசானது 'சுதந்திரம்' என்கிற சொல் லுக்கு அர்த்தமேற்படக்கூடிய விதத்தில் தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். சமாதானத்திற்கு கைலாகு கொடுத்து, சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சுதந் திரத்தில்தான், சிங்கள மக்களினது சுதந்திரம் தங்கியிருக்கின்றது என்பதனைக் கருத்திற் கொண்டு, சிறீலங்கா ஆட்சிபீடம், ஓர் தீர்க்க மான முடிவை எடுக்கவேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசரமான அவசியமாகிறது.

2001 பெப்ரவரி 04
இந்த ஆண்டிலாவது தனது நாட்டில் சுதந்திரக் கொடியேற்றும் பாக்கியம் கிட்டிய ஜனாதிபதி சந்திரிகாவும் அவரின் படைத்தளபதிகளும்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் இயக்கம் அறிவித்த போர்நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரித்துவிட்டது. எனினும், அறிவித்தபடி புலிகள் உண்மையாகவும், நேர்மையாகவும் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு உதவுவதுடன், சமாதானச் சூழலை உருவாக்குவதற்கான முன்முயற்சியாகவும் ஒருமாதகால போர்நிறுத்தத்தை புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது. உடனடியாகவே சர்வதேச நாடுகள் அதை வரவேற்று, புலிகளைப் பாராட்டியிருந்தன. 'இது அமைதியை நோக்கிச் செல்லத்தக்கது' என பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை தெரிவித்தது. நோர்வே அரசும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தது. பிரித்தானியாவின் பி.பி.சி. வானொலி, அமெரிக்காவின் சி.என்.என். தொலைக்காட்சி உட்பட மேற்குலகின் தொடர்புச்சாதனங்கள் புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தியைப் பிரபலப்படுத்தின.

புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பிற்கு சிங்கள அரசு சாதகமாகப் பதிலளிக்கவேண்டும் என்ற சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு ஒருசில நாட்களிலேயே சுக்குநூறாகியது. சிறீலங்காவின் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் கூட்டாக அறிக்கைவிடுத்து, போர்நிறுத்தத்தை நிராகரித்தனர். சர்வதேச சமூகத்தின் கண்டனக்கணைகளைத் தவிர்க்கும் தந்திரோபாயத்துடன் முதலில் மௌனத்தைக் கடைப்பிடித்த ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பின்னர் போர்நிறுத்தத்தை நிராகரித்தார்.

தலைவரின் சமாதான அழைப்பிற்குக் காத்திரமான வகையில் பதிலளிக்காமலே, உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பில் கலந்துகொள்ள, சந்திரிகா அம்மையார் தனது தலைமையில் ஒரு அமைச்சர் பட்டாளத்தையும் துணைக்களைத்துக்கொண்டு பாரிஸ் சென்றிருந்தார்.

அம்மையாரின் வழமையான உதட்டளவுச் சமாதானப்பேச்சு, இம்முறை பாரிஸ் மாநாட்டில் எடுபடவில்லை. மாறாக அவரது அரசாங்கமும் அதன் ஆட்சியும் பலத்த கண்டனத்திற்கும், அதிருப்திக்கும் உள்ளாகியது. பிந்துநுவெவ சிறைப்படுகொலைக்காகவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கத்தவறியதற்கும் அம்மையாரின் அரசாங்கம் கடும் கண்டனத்திற்குள்ளானது. பொருளாதாரத்தடை உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல், ஜனநாயக உரிமை மறுப்பு என்பவற்றிற்காகவும் அரசாங்கம் கண்டனத்திற்குள்ளானது. அத்துடன், நடந்துமுடிந்த தேர்தலில் அரசசார்பில் நடந்த மோசடிகளும், தேர்தல் தில்லுமுல்லுகளும், இந்த முறைகேடுகளுக்குப் பொறுப்பான அரசியல்வாதிகளுக்குப் புதிய அரசாங்கத்தில் வழங்கப்பட்ட முக்கிய பதவிகளைச் சுட்டிக்காட்டி, தமது அதிருப்தியையும் மாநாடு தெரிவித்தது என கொழும்புப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டிருந்தன.



# புலிகளி... சிங்க...

– எல்லாளன் –

"விடுதலைப்புலிகள்" தை-2001

நோர்வேயின் சிறப்புத்தூதர் திரு. எரிக் சொல்ஹெய்ம் நவம்பர் 1ஆம் திகதி தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பின்போது, சமாதானத்தைக் காண்பதற்கான தனது நல்லெண்ணத்தை தலைவர் வெளிப்படுத்தியிருந்தார். நவம்பர் 27, மாவீரர்நாள் உரை மூலம் அமைதிக்கான தனது நல்லெண்ணத்தை மீண்டும் வலியுறுத்தியும், சிங்கள அரசுடன் பேச்சுக்களைத் தொடர்வதற்கான முட்டுக்கட்டைகளை அகற்றி சமாதானப் பாதையைத் திறந்துவைத்தார். டிசம்பர் 24ஆம் திகதியிலிருந்து ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை ஒரு மாதத்திற்கு அறிவித்து, சமாதானத்திற்கான முன்முயற்சியைச் செயலிலும் காட்டியுள்ளார்.

தலைவர் பிரபாகரனைச் சந்தித்த எரிக் சொல்ஹெய்ம், சந்திரிகா அம்மையாரையும் சந்தித்து தலைவர் பிரபாகரனின் சமாதான நல்லெண்ணத்திற்கு சாதகமாகப் பதிலளிக்கும்படி கேட்டிருந்தார். மேற்கு நாடுகளும் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்படி சந்திரிகா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தன.

இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவியின் அளவிற்கும், சிறீலங்கா அரசு எடுக்கவிருக்கும் சமாதான முயற்சிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக பாரிசில் கூடியிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பும் சந்திரிகா அரசாங்கத்திற்கு உணர்த்தியிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதில் சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான சிறீலங்காப் பிரதிநிதிகளிடமிருந்து கிடைக்காததினால், வழங்கப்படவேண்டிய நிதிபற்றி அறிவிக்காமலே மாநாடு மொட்டையாக முடிவடைந்தது. வழங்கப்படவிருக்கின்ற நிதியின் அளவு பற்றியோ அல்லது அதற்கான நிபந்தனைகளோ பகிரங்கமாகவில்லை. பதிலாக, சில ஊகங்களே வெளியாகியுள்ளது. நிதியுதவி குறைந்தளவில் வழங்கப்பட்டுள்ளது என்றும் சமாதான முன்னெடுப்புக்களின் படிநிலைகளைப் பொறுத்து, நிதியுதவி கட்டம் கட்டமாக வழங்கப்படும் என்றும் ஊகங்கள் கூறப்படுகின்றன. எனினும், உதவி வழங்கும் நாடுகளின் அவதானியாளர் குழுவொன்று இலங்கை வந்து நிலமைகளை அறிந்து, அறிக்கை சமர்ப்பித்த பின்னரே நிதியுதவி பற்றிய உத்தியோகபூர்வ முடிவு தெரியவருமென செய்திகள் தெரிவிக்கின்றன.

பாரிஸ் மாநாடு சிறீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவகையில் தோல்வியில் முடிவடைந்துவிட்டது என்பதே பொதுவான கருத்தாகும்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது, சர்வதேச நாடுகளை ஆச்சரியப்படுத்தும் வகையில், தலைவர் பிரபாகரன், அவர்கள் ஒரு மாதகால போர்நிறுத்த அறிவிப்பை ஒருதலைப்பட்சமாக விடுத்தார். இந்த முயற்சியை சமாதானத்திற்கான ஆக்கபூர்வ நடவடிக்கை என சர்வதேச சமூகம் பாராட்டியது. போர்நிறுத்த அறிவிப்பை சிங்கள



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசு நிராகரித்த பின்னரும், புலிகள் இயக்கம் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க எடுத்த முடிவு சர்வதேச உலகிற்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் கொடுத்துள்ளது.

அமைதிப் பேச்சுவார்த்தைக்கும், அரசியல் வழிமுறையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கும் புலிகள் இயக்கம் எதிரானது என்றே சிங்கள அரசு இதுவரை காலமும் பரப்புரை செய்தது. ஆனால், இருதரப்பினருக்கும் இடையேயான அமைதிப்பேச்சிற்கு மூன்றாந்தரப்பு மத்தியத்துவம் தேவையென புலிகள் அரசியல் நிலைப்பாடெடுத்தபோது சந்திரிகா அரசின் அரசியல் சாணக்கியம் நிலைதடுமாறத் தொடங்கியது.

புலிகள் இயக்கம் கோரியபடி மத்தியத்துவப் பாத்திரத்தை நோர்வே வகிக்கத்தொடங்கியதும், அமைதிப் பேச்சுக்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் ஈடுபடத் தொடங்கியது. இப்போது, ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்த அறிவிப்பைச் செய்ததுடன், இதற்குச் சாதகமாக சிங்கள அரசு பதிலளித்தால் இதை மேலும் நீடிக்கத் தயாராக இருப்பதாகவும் புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது.

செய்துகொண்ட உடன்படிக்கைகளை, நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை செல்லாக்காசாக்கியது சிங்கள அரசே என்ற உண்மை தெரியவரும். பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து யாழ்ப்பாணப் பேச்சுவார்த்தை வரை இந்த அரசியல் உண்மையைக் காணலாம்.

ஆயினும், 'அங்கீகரிக்கப்பட்ட அரசு' என்ற அரசியல் சலுகையை வைத்துக்கொண்டு சிங்கள அரசு, ஒவ்வொரு தடவையும் தனது அமைதிக்கெதிரான செயற்பாட்டை நியாயப்படுத்துவதுடன், அரசியல் தீர்வை எட்டமுடியாததற்கான பொறுப்பை தமிழர்தரப்பு மீது அபாண்டமாகச் சுமத்தியும் வருகின்றது.

சிங்கள அரசின் அநீதியான இந்த அரசியல் பரப்புரையை சர்வதேச உலகமும், அனுதாபக் கண்ணுடன் செவிமடுத்துவருவது துரதிஸ்டவசமானது.

இந்த நிலையில், தமிழ்-சிங்கள இனமுரண்பாடு பற்றிய சர்வதேசத்தின் நோக்குநிலையில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

# ன் போர்நிறுத்தம் - ள அரசின் போர்வெறி

## சர்வதேசத்தின் நோக்குநிலையில் மாற்றமேற்படுமா!

சமாதானத்தை நோக்கிய அறிவிப்பை சிங்கள அரசு நிராகரித்தது மட்டுமல்ல, போரைத் தொடரப்போவதாகவும் புலிகள் ஒடுக்கப்படும் வரை போர் தொடரும் என்றும் சிங்கள அரசு வலியுறுத்திக் கூறிவருகின்றது.

சமாதான முகமூடியுடன் இதுவரை காலமும் உலகை வலம்வந்துகொண்டிருந்த, சிங்களத்தின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரும் போர்முரசு கொட்டிவருகின்றார்.

புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சிற்குத் தயாராகிய பின்னரும் சந்திரிகா அம்மையார் தனது சமாதானத்திற்கான போரைத் தொடரும் திடசங்கற்பத்துடன் உள்ளார்.

போரை நிறுத்தி, சமாதானத்தை நிலைநாட்டல் என்ற விடயத்தில் பந்து இப்போது சிங்கள அரசின் பக்கமே உள்ளது என்பது அனைவரினதும் கருத்து.

இலங்கைத்தீவில் இரத்தக்களரியுடன் நடைபெறும் இனப்போரை முடிவுக்குக் கொண்டுவந்து, இங்கே அமைதியை நிலைநாட்டத் தடையாகவுள்ளது சிறீலங்கா அரசு என்பதை பகிரங்கமாகக் கூறும் கடப்பாட்டுடன் சர்வதேச நாடுகள் இன்று ள்ளன.

சிங்கள அரசின் போர் இயந்திரத்திற்கு தீனியிட்டு, அது தன் போர்க் கொள்கையைப் பேணுவதற்கு ஏதுவாக உலகநாடுகள் சிலவற்றின் நிதியுதவியும், ஆயுத உதவியும்தான் அடிப்படையாகவுள்ளது என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் பொது உண்மை.

இந்தச் சர்வதேச உதவி சிங்கள அரசுக்குக் கிடைக்காதுபோகுமாயின் அதனால், தனது போர்க்கொள்கையைத் தொடரமுடியாது.

கடந்த 50 வருடகால இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால் தமிழரின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சிங்கள அரசும், தமிழர் தரப்பும்



'ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டு, அமைதி வழியில் நீதியான முறையில் ஒரு அரசியல் தீர்வை சிங்கள அரசு வழங்கும் என நாம் நம்பவில்லை' என்ற தலைவர் பிரபாகரனின் தீர்க்கதரிசனமான கருத்தை சர்வ தேச சமூகமும் புரிந்துகொள்ளவேண்டிய தருணம் வந்துவிட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாணயப் பெறுமதியை மிதக்கவிடும் அரசின் இயலாமையின் வெளிப்பாடு!

- கெல்மன் - ஈழநாதம்



நாணயப் பெறுமதி இறக்கத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் ஐக்கிய தேசியக் கட்சியினர்.

சிறீலங்கா அரசாங்கம் ரூபா நாணயத்தை நிதிச்சந்தையில் மிதக்கவிடுவதென ஜனவரி 22ஆம் திகதி முடிவுசெய்துள்ளது. நாணயப் பெறுமதி தொடர்பான அரசாங்கத்தின் இம்முடிவு சிறீலங்கா சுதந்திரமடைந்ததன் பின்னரான கடந்த 52 ஆண்டுகால வரலாற்றில் பொருளாதாரத் துறையில் முக்கியமானதொரு முடிவாகும். அரசாங்கத்தின் இம்முடிவானது, எவ்வாறான பொருளாதாரத் தளத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது என்பதே இங்கு முக்கியமானதாகும்.

அதாவது, பலமான பொருளாதாரப் பின்னணியுடனும், முறையான திட்டத்துடனும் நாணயம் தொடர்பான இம்முடிவு எடுக்கப்பட்டதா? அன்றி இயலாமையின் வெளிப்பாடாக கைவிடப் பட்டதா? என்பதிலேயே, இதன் விளைவு சாதகமாக அமையுமா? பாதகமாக அமையுமா? என்பது தங்கியுள்ளது.

'பணவெளியீட்டு மட்டத்துக்கு இசைவாக மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்தால் பொது விலைமட்டம் உயராது' என்ற தத்துவத்தின்படி பார்க்கும்போது, சிறீலங்காவில் தொடர்ச்சியான பொது விலைமட்ட அதிகரிப்பும் தொடர்ச்சியான பணவீக்க அதிகரிப்பும் அதன் பொருளாதாரப் பின்னடைவையே காட்டுகின்றது.

ஜனவரி 22ஆம் திகதிக்கு முன்னர் ஆறு மாதங்களில் நான்கு தடவைகள் நாணயப்பெறுமதி இறக்கத்தைச் செய்யவேண்டிய நிலைக்கு சிறீலங்கா அரசாங்கம் தள்ளப்பட்டது. இவ்வாறான பின்னணியிலேயே 1994ஆம் ஆண்டில் 55 ரூபாவாக இருந்த டொலர் தற்போது 100 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதாவது, சர்வதேச சந்தையில் தாக்குப் பிடிக்க முடியாத அரசு, நாணயத்தின் பெறுமதியை தொடர்ந்து குறைக்க வேண்டிய நிலையிலுள்ளது. இதன் தொடர் நடவடிக்கையாகவே அரசின் தற்போதைய முடிவு அமைந்துள்ளது எனக் கூறுவதில் தவறில்லை.

தனது ரூபா நாணயத்தின் பெறுமதியை சந்தைக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, தானே நிர்ணயித்து வந்த அரசாங்கம் காலத்திற்குக் காலம் அதன் மீதிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வந்து, தற்போது நெருக்கடியின் உச்சக்கட்டமாக நாணயத்தின் பெறுமதியைத் தீர்மானிக்கும் பொறுப்பை சந்தைச் சக்திகளிடம் முழுமையாக விட்டுள்ளது எனலாம்.

இந்த முடிவினையடுத்து வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களை முன்கூட்டியே அறிவிக்கும் நடைமுறையைக் கடைப்பிடிக்க முடியாமல், ஜனவரி 23ஆம் திகதி முதல் மத்தியவங்கி கைவிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இம்முடிவானது, ஒருவகையில் நாணயத்தின் பெறுமதியை நிதிச் சந்தை நடவடிக்கை மூலம் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கமுடியாததன் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டும். பலவீனமான பொருளாதாரத் தளத்திலிருந்து எடுக்கப்பட்டதாகவே கொள்ளவேண்டும்.

சந்தைச் சக்திகளால் ரூபா நாணயத்தின் பெறுமதியில் ஏற்பட்டுவந்த வீழ்ச்சியை அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை என்பது சிறீலங்காவின் வைப்புப் பொருளாதார செயற்பாட்டில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு வலுகுறைவடைந்து செல்லும் போக்கு முக்கியமானதொரு கட்டத்தைத் தொட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

நாணயத்தை சந்தையில் மிதக்கவிட்டுள்ள இந்த நடவடிக்கையினால் பொது விலைமட்ட உயர்வையோ, பணவீக்க அதிகரிப்பையோ அல்லது மக்கள் மேலும் வறுமை நிலையை நோக்கி வேகமாக நகர்த்தப்படுவதையோ தாமதப்படுத்தக்கூட அரசாங்கத்தினால் முடியாதுபோகும். ஏனெனில் பலவீனமாகவுள்ள ரூபா நாணயப் பெறுமதியில் தொடர்ந்து வீழ்ச்சிப் போக்கைக் கொண்டிருக்கும்போது இறக்குமதிப் பொருட்களுக்கான விலை அதிகரிக்கும். அத்துடன், ஏற்றுமதிப்பொருட்களுக்கான விலை உள்ளூரில் அதிகரித்து ஏற்றுமதியாளருக்குக் கிடைக்கும் இலாப வீதம் குறைவடையும். அத்துடன், பொருட்களுக்கான உற்பத்திச் செலவு அதிகரித்து உற்பத்தியாளருக்கு இலாபம் குறைவடையும் நிலை ஏற்பட்டு, உற்பத்தி வீழ்ச்சி ஏற்படும். இது பொது விலைமட்டம் உயர்வடைந்து, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை உண்டுபண்ணும். அரசின் கட்டுப்பாடு இல்லாத இதன் தொடர்ச்சியான விளைவு மக்களை மீளமுடியாத வறுமை நிலையை நோக்கிய பாச்சலிற்கே தள்ளும். அது மட்டுமல்ல, அரசாங்கம்கூட அரசாங்க செலவீனங்களை ஈடுகட்ட ஏற்கெனவே வரவு செலவுத்திட்டம் மூலம் மதிப்பீட்டு அடிப்படையில் ஒதுக்கீடு செய்த தொகைகளில் பற்றாக்குறை ஏற்படும். இதன் விளைவாக அரசாங்கம் தனது செலவுகளை ஈடுசெய்ய மக்களுக்கான மானியக் கொடுப்பனவுகள் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளை நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும்.


சிறீலங்காவின் உள்ளூர் சந்தைகளில் தீர்மானம் எடுக்கும் சக்திகளாக வெளிநாட்டவர் மாறும் நிலையைத் தோற்றுவிக்கும். 'ரூபா நாணயத்தை மிதக்கவிட்டதால் அதன் பெறுமதியில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சி காரணமாக, சிறீலங்காவுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துள்ள நாடுகள் சிறீலங்காவின் உள்ளூர்ச் சந்தையை பூரணமாக கைப்பற்றும் சூழ்நிலை உருவாகலாம்' என சிறீலங்காவில் வணிகர் கழகங்கள் அச்சம் தெரிவித்திருந்ததும், இதன்பின்னணியிலேயே 'சுதந்திரமடைந்த பின்னர் இப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் பாரிய பின்னடைவையும், கடும் நெருக்கடிகளையும் சந்தித்துள்ளது. சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் நாடு பாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

ரூபாவின் பெறுமதியை சந்தையில் சுதந்திரமாக மிதக்கவிடுவதென்ற சந்திரிகா அரசாங்கத்தின் முடிவு வாழ்க்கைச் செலவு மற்றும் வரிச்சுமை காரணத்தால் பாதிப்படைந்துள்ள மக்கள் மேலும் நசுக்கப்படுவார்கள். ரூபாவின் மதிப்பை சந்தையில் மிதக்கவிடுவதற்கு சக்திவாய்ந்த பொருளாதாரப் பின்னணியும், முறையான திட்டமும் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாத நிலையிலும் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றிருக்கும் நிலையிலும் ரூபாவின் மதிப்பை சந்தையில் மிதக்கவிடுவதானது ரூபாவின் பெறுமதி கட்டுப்படுத்தமுடியாதளவு வீழ்ச்சியுற்றுச் செல்லும்'

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இவ் எச்சரிக்கையானது, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஆட்சியாளரின் நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் என்ற அடிப்படையிலானதாக இருப்பினும்கூட பொருளாதார முன்னுணர்வுடனும், யதார்த்தபூர்வமானதாகவும் அவரின் இவ் எச்சரிக்கை அமைந்துள்ளதை மறுப்பதற்கில்லை.

ஏனெனில், நாட்டில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் பொது விலைமட்ட அதிகரிப்பும், அரசாங்கம் மேலும் பல அரச நிறுவனங்களை தனியாரிற்கு விற்பனை செய்வதற்கு எடுத்து வரும் முயற்சிகளும், மக்களுக்கான மானியங்களை நிறுத்திவரும் நடவடிக்கைகளும், வருடாந்தம் அரசாங்க ஊழியர்களுக்கான ஒய்வூதியத் திற்கென பெருந்தொகை நிதியை ஒதுக்க வேண்டியுள்ளதாகக் கூறி, ஒய்வூதியத்திட்டத்தை அடுத்த ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியை ஒத்த திட்டத்திற்குள் கொண்டுவருவதற்கு ஆலோசித்துவரும் அரசின் நடவடிக்கைகளும், அரசாங்க செலவீனங்களை சமாளிப்பதற்கும், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும், தினசரி அதிகரித்துச் செல்லும் வட்டிவீதத்தைக் குறைப்பதற்கும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் எனக் கூறி அரசாங்கம் அவசர கடனாக சர்வதேச நாணய நிதியத்திடம் இரண்டாயிரத்து ஐந்நூறு கோடி (2500) ரூபாவை தற்போது கோரியுள்ளதும், சந்திரிகா அரசாங்கத்தின் எதிர்கால பொருளாதார அவலத்தையே தொட்டுநிற்கின்றது.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலங்களற்ற அதிசயம்



அண்ட சராசரம் முழுவதுமே
அசைவற்று நின்றிருக்காது
இயங்கிக் கொண்டேயிருந்தது
அதனுள் உயிர் வாழ்வனவும்
உயிரற்றனவும் கூட
ஏதோ ஒரு வகையில்
அசைவுற்றுக் கொண்டேயிருந்தன
ஆனாலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
பின்வாங்குதல் ஒரு முடிந்த முடிவென்று
புலி பதுங்குவது பயத்தினாலன்று
ஆயினும் உண்மை அதுவாயிருக்கவில்லை
தர்க்கவியல் முடிவுகளையெல்லாம்
தகர்த்தெறிந்தபடி
பின்வாங்குதல் செயல் மாற்றம் பெற்றது
அலைகள் ஓய்வற்ற முன்னேற்றமாய்...
ஓங்கியடித்த அலைகளின் வீச்சில்
அவற்றினது இலக்குகள்
அள்ளுண்டும் தள்ளுண்டும் போயின
பின்வாங்குதலையும் ஓர் போர்வழிமுறையாய்
உள்வாங்கத் தயாரற்றிருந்த கருத்துலகம்
இப்போது ஓயாது பேசிக்கொண்டிருக்கின்றது
அலைகளைப் பற்றி அலையலையாய்...
இது எப்படிச் சாத்தியமானது
என்றெழுந்த வியப்புக் குறிகளின் வரிசை
முடிவற்றுத் தொடர்கிறது.
சில ஆண்டுகளுக்கு முன்னர் முழுதுமாய்
முற்றுப் பெற்ற(?) எங்கள் கதையின்
அத்தியாயங்கள் மீண்டும் தொடர்வது பற்றி
அபிப்பிராயங்கள் அநேகம் எழுகின்றன.
இது எவ்வாறு நிகழ்வுற்றது என்ற தேடலில்
ஆழ்ந்து போயிருப்பவர்களை
இதை விடவும் அடியாழத்திற் சேர்க்க
இன்னும் வரவிருக்கின்றன அலைகள்

அடிமை இருளை அகற்ற
ஆதியில் முயன்ற போது
முயன்ற எம் முன்னவர் மீதே
இனவாதத் தீயின் சுவாலைகளொளிர்ந்தன.
அந்த வரலாறுகளின் படிப்பினைகளால்
ஒரு ஒளி வெள்ளமே உருப்பெற்றெழுந்தது
அந்தப் பிரபாகரப் பிரவாகத்தினால்
கற்கோட்டைகள் மட்டுமல்ல
மனக் கோட்டைகளையும் தகர்க்க முடிந்தது
முரண்பாடுகள் முடிவுக்கு வந்தது.
தேசத்தை மையமாக்கித் தேசியமே இயங்கிற்று
அது ஒன்றும் அவ்வளவு இலகுவானதல்ல
ஒவ்வொரு தனிமனிதக் கோட்பாடுகளையும்
அதனது சுயநலத் தாழ்ச்சியிலிருந்து
மீட்டெடுத்து ஒன்றிணைப்பது என்பது
வரையறைக் கோணங்களிற்கப்பாற்பட்ட
வெவ்வேறான கோணங்கள் குறித்த
துல்லியமான பார்வையினடிப்படையில்
ஓயாத வெற்றிகள் ஈட்டப்படுகின்றன
துல்லியமான பார்வை!
ஆதி, அந்தம் என்ற வார்த்தைகளை
தன் வரலாற்றில் அது கொண்டிருக்காது
உலகின் கோடிக்கணக்கான பார்வைகளை
அந்த ஒரு பார்வை மாற்றியது
ஆண்டுக்கணக்கான ஆய்வுகளின்
அடிப்படைகளை
அது ஒரேயொரு நாளில் தலைகீழாக்கிற்று
வல்லரசுகளின் கழுகுப் பார்வைகளுக்கு
அஞ்சாது அப்பாற்பட்டது அது.
காற்று நுழையக் கூடிய இடமெல்லாம்
நுழைய முடியும் என்ற
தன்னம்பிக்கையின் அடிப்படையிலானது
அந்தப் பார்வை அதன் துல்லியம் என்பன
அவற்றை நேசிப்போருக்கு
மனநிறைவையும் மகிழ்வையும் அளிக்கின்றன.
உவமை ஏணிப் படிகளின்றியே
உச்சத்திலிருக்கும் தலைமையை
உள்ளங்கள் உறுதியுடன் தொடர்கின்றன
இந்த இரு நூற்றாண்டுகளின் அதிசயமல்ல
காலங்களற்ற அதிசயம்
இந்த அதிசயமொன்றிற்காகவே
மனங்கள் எல்லையற்ற பெருமிதமடைகின்றன
எங்கள் தேசியக் கொடி மட்டுமல்ல
முற்றுமுழுதாக நாங்களுமேயென்று.

சூரிய நிலா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### போரினால் அழியுண்ட யாழ் - கைதடி கிராமத்துக்குச் சென்று திரும்பிய ஒருவரின் அனுபவப் பகிர்வு

# கால்கள் சேற்றில் கைதடி நோக்கிய

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அழகான-அமைதியான-வளங்கொழிக்கும் சிறு கிராமங்களில் ஒன்று கைதடி.

அந்தக் கிராமத்தில் பிறந்து-வளர்ந்து-வசித்துக் கொண்டிருந்த எங்களை கடந்த மே மாதம் நடந்த யுத்த அவலங்கள் விரட்டியடித்தன. 27ஆம் திகதி எங்கள் கால்களை அந்த ஜென்மபூமியில் பதித்தோம்.

படையினர் வசம் உள்ள இந்தப் பகுதிக்குச் செல்வதற்கு இடம்பெயர்ந்த எவருக்கும் உத்தியோகபூர்வமாக அனுமதி கிடைக்கவில்லை.

ஆனால், சொந்த ஊரைப் பார்க்கும் ஆவல் உயிராபத்தைப் பற்றிய கவலையை துறந்து செல்லவைத்தது. அதனால், நீர்வேலித் தரவை ஊடாக கால்கள் கடற்சேற்றில் புதையப் புதைய பல மைல் கடந்து இடுப்பளவு தண்ணீரில் இராணுவத்தினரின் கண்களில் படாமல் உயிரைப் பணயம் வைத்து 27ஆம் திகதி காலை ஆபத்தான பயணத்தை ஆரம்பித்தோம்.



அந்தத் தரவை மற்றும் கடற்பகுதியெங்கும், பொதிகளை சுமந்துவரும் மனிதர்களினால் நிரம்பி வழிந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 1990களில் கொம்படி வெளியூடாக நடந்ததை இந்தப் பயணம் நினைவூட்டியது.

தென்மராட்சிக்குள் சென்று திரும்பி வருபவர்கள், நீர்வேலியிலிருந்து தென்மராட்சிக்குச் செல்பவர்களைப் பார்த்து 'கரைக்குப் போக விடுகினமே?' என்று கேட்க, நீர்வேலியிலிருந்து தென்மராட்சிக்குச் செல்பவர்கள் 'உள்ளே எப்படி நிலைமை, பிரச்சினை தருகினமே?' என்று கேட்க, சொந்த மண்ணில் அகதி வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியது அப்பிரதேசம்.

நாங்கள் சென்றதுக்கு முதல் நாள் தென்மராட்சிக்கு வீடு பார்க்கச் சென்ற நூற்றுக்கணக்கான மக்கள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு நீண்ட நேரம் மறித்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதனால், முன் ஏற்பாடாக உள்ளே இருக்கும் சூழ்நிலைகளை உளவறிவதில் எல்லோரும் ஆர்வம் காட்டினார்கள்.

அந்தத் தரவை முழுவதும் முழத்துக்கு முழம் சிறு சிறு குளங்கள் காணப்பட்டன. அவற்றில் நிறையத் தண்ணீரும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

படையினரால் ஏவப்பட்ட பல்குழல் எறிகணைகள் விழுந்த இடங்களே இவ்வாறு காணப்பட்டதை உணரமுடிந்தது.

## வெடிக்காத நிலையில் எறிகணைகள்

எறிகணைகளின் சிதறல்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்பட்டன. வெடிக்காத நிலையில் எறிகணைகள் அங்கு சேற்றுக்குள் குத்துண்டு கிடந்தன.

தரவையின் சில இடங்களில் ஆண்கள் பெண்கள் எனப் பலர் குந்தி இருந்துகொண்டு, உணவும் தேநீரும் அருந்திக் கொண்டிருந்தனர்.

இவர்கள் அதிகாலையிலேயே வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் இருந்து தென்மராட்சியிலுள்ள தமது வீடுகளைப் பார்க்க வந்தார்கள்.

இந்தப் பயணத்தின்போது, இனம் புரியாத பய உணர்வு ஏற்பட்டபோதும், சன நடமாட்டமும், பல நாள்களின் பின்னர் கிராமத்துக்குச் செல்கிறோம் என்ற உணர்வும் எம்முள் உற்சாகத்தை ஏற்படுத்தின.

நீர்வேலியிலிருந்து நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கின்றோம் பற்றைகள், தாழை மரங்கள் நீர்வேலியை மறைத்தன.

ஆனால், நீர்வேலிக் கரையில் முழத்துக்கு முழம் அமைக்கப்பட்டிருந்த பல காவல் அரண்களை மட்டும் காணமுடிந்தது.

இன்னும் வந்த அளவு தூரம் செல்ல வேண்டும் என்று எம்முடன் வந்தவர்கள் சொன்னபோது ஆயாசம் ஏற்பட்டது.

ஏற்கனவே பல கிலோ மீற்றர் தூரத்தை நடந்து களைத்துப்போன நிலையில் சைக்கிள்கள் சேற்றில் புதையப் புதைய தள்ளிக் கொண்டு தொடர்ந்து முன்னேறினோம்.

'தூரம் அதிகம் இல்லை, அதோ தெரியுது பார் எல்லை' என்ற புதுவை இரத்தினதுரையின் கவி வரிகள் அந்தப் பிரதேசம் எங்கும் ஒலிப்பது போல் இருந்தது.

எங்கள் கிராமத்தின் எல்லைக்கு வந்துவிட்டோம். நாங்கள் விளையாடி மகிழ்ந்த மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் நடத்திய, அந்தப் புல்லுத்தரவை யுத்த அரசுகளின் கோரத் தாண்டவத்தால் சீரழிந்து கிடந்தது.

ஆம்! பச்சை நிற மெத்தைகளை விரித்தது போல் காட்சி தரும் அந்தப் புல்தரையில், ஷெல் விழாத இடங்களே இல்லை என்னும் அளவுக்கு எங்கும் கிடங்குகளும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைதடி–சாவகச்சேரி பிரதான வீதியில் பல்குழல் எறிகணை செலுத்திகள் ஏவிய எறிகணைகளால் சிதைந்து போன தமிழரின் வாழ்விடங்கள்.

# தைய... ஒரு பயணம்...

- சாரதி - உதயன்

பள்ளங்களும் காணப்பட்டன. துப்பாக்கிகளின் வெற்றுரவைகளும், ஷெல்களின் வெற்றுக் குழாய்களும் வைத்த ஒவ்வொரு அடியையும் உறுத்தின.

மிதிவெடிகளின் அச்சுறுத்தல் அந்தப் புல்லுத்தரவையில் விரும்பிய இடங்களில் கால்களை வைப்பதற்குத் தடையாக இருந்ததால் சைக்கிள்கள் மற்றும் மனித காலடிகள் பட்ட ஒற்றையடிப்பாதைகள் ஊடாக ஊரை நோக்கிச் சென்றோம்.

## மயானம் எங்கே?

நாங்கள் சென்றுகொண்டிருந்த பகுதியில் முன்னர் ஒரு மயானம் இருந்தது ஞாபகம் வரவே, அந்த மயானத்தைத் தேடிப் பார்த்தேன். மயானத்திலிருந்த மடத்தின் கூரை மட்டும் பற்றைகள் இடையே எட்டிப் பார்த்து, யுத்தம் முடிந்ததா? என்று கேட்பது போல் காட்சியளித்தது.

கல் ஒழுங்கைக்கு இரு மருங்கிலும் நின்ற தாழை மரங்கள் எங்களை வரவேற்றன. இந்த ஒழுங்கையின் ஒடு பக்கத்தில் மண் மூடைகள் அடுக்கப்பட்டு கைவிடப்பட்ட காவலரண் ஒன்று காணப்பட்டது.

இது விடுதலைப் புலிகளினுடைய காவலரண் என்று பார்த்ததும் தெரிந்தது.

## அநாதரவாக நின்ற மாட்டு வண்டில்கள்

ஆங்காங்கே பல மாட்டு வண்டில்களும் அநாதரவாக நின்றன.

அந்த கல் ஒழுங்கை ஊடாக எங்கள் கிராமத்தின் பிரசித்தி பெற்ற கயிற்றசிட்டி கந்தன் ஆலயத்தின் பின்பக்க வீதியை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது, அந்த வீதியிலிருந்த கிராமச் சங்கக் கட்டடம் ஷெல் கொடூரத்தினால் கற்குவியலாகக் கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன்.

சரமாரியாக ஷெல் தாக்குதல்கள் நடந்த போது, அந்தக் கிராமத்து மக்களுக்கு அடைக்கலம் தந்த முருகன் ஆலயத்தின் அருகே சென்றோம்.

பல்குழல்கள் பொழிந்த ஷெல்கள் ஆலய சூழலில் விழுந்து வெடித்ததால், கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த யாழ். மத்திய கல்லூரி மாணவன் கண்ணன் உட்பட பலர் துடிதுடித்துப் பலியான சம்பவம் மனதில் நிழலாடியது.

இந்தச் சம்பவத்தையடுத்தே இங்குள்ள ஆயிரக் கணக்கான மக்கள் உடுத்த உடுப்புக்களுடன் உயிரைக் காப்பாற்ற வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளுக்கு ஓடினார்கள்.

இவ்வாறு ஓடியவர்களில் சிலர் நீர்வேலியில் வைத்துப் படையினரால் சுடப்பட்டு உயிரிழந்த கொடுமையும் ஞாபகம் வந்ததால் மனம் கனத்தது.

பலரைக் காவு கொண்ட இந்தச் சம்பவத்தினை நினைத்துப் பார்த்த எமக்கு ஆலயத்தின் முன்பக்கம் செல்ல அச்சமாக இருந்தது. 'இறைவா நீ தான் துணை' என்று ஆண்டவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நகர்ந்தோம்.

ஆலயத்தின் பின்வீதியில் இருந்த பிரதம குரு கணேஷ் ஐயாவின் வீடு உடைந்து சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

1996ஆம் ஆண்டு காணாமல் போனவர்களில் பிரதம குருவின் மகனும் ஒருவராவார். காலம் எல்லாம் இறைவனுக்கே சேவை செய்துவரும் இவருக்கா இந்தக் கதி என்று பலரும் வேதனைப்பட்டதுண்டு.

நமது வீட்டிற்குச் செல்லும் பிரதான வீதிக்கு வந்தபோது, இருமருங்கிலுமுள்ள சில வீடுகளிலும் ஷெல் அரக்கன் தனது கோரப்பற்களைப் பதித்து இருந்தான்.

## மனதை உருக்கும் சம்பவங்கள்

அப்பொழுது நம்முடன் வந்த ஒருவர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net



சிறீலங்கா விமானப்படையின் மிக்–27 தாக்குதலால் தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட பெருங்குழி

இடம்பெயர்ந்த சமயம் நடந்த சம்பவம் ஒன்றை விவரித்தார்;

இடம்பெயர்ந்து சனம் வெளியேறிய சமயம், லிங்கம் என்பவர் சைக்கிளில் எதனையோ பின் கரியரில் வைத்துக் கட்டிக் கொண்டு வந்தார். அவருக்குப் பின்னால் அவரது மனைவியும் மகளும் அழுதபடி வந்தார்கள்.

'எங்கே போகிறீர்கள் என்று அவர்களிடம் கேட்டபோதுதான் பின்கரியரில் ஷெல் பட்டுச் சிதறிய அவரது மகளின் சடலம் கட்டப்பட்டுக் கிடந்தது தெரியவந்தது' என்று அன்று நடந்த சோகச் சம்பவத்தைத் தெரிவித்தார்.

தனது உயிரான மகளின் சிதைந்த உடலை சைக்கிளின் பின் பக்கமாக வைத்து ஒரு தந்தை, கட்டிச் சென்ற காட்சி எல்லோர் மனதையும் உருகச் செய்ததை அன்று உணர்ந்தோம். தமிழருக்கு நேர்ந்த சாபக் கேட்டை எண்ணி நொந்தபடி எமது வீட்டிற்கு அருகில் சென்றோம். உடன் வந்தவர்களும் பிரிந்து தத்தமது வீடுகளுக்குச் சென்றனர்.

வீட்டுவளவுக்குள் காலடி எடுத்து வைத்த பொழுது, முற்றத்தில் நின்ற வேப்ப மரம் சரிந்து கிடந்தது. தென்னைகள் மற்றும் நல்லின மரங்கள் எல்லாம் ஷெல் தாக்குதல்களால் சீவி எறியப்பட்டிருந்தன.

பிள்ளை போல் வளர்த்த வேப்ப மரம் சரிந்து கிடந்த காட்சி கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

இந்த வேப்பமரம் அமரர் 'மில்க்வைற்' கனகராசா ஐயா எமது கிராமத்தில் நடைபெற்ற விழா ஒன்றிற்கு வந்தபோது அன்பளிப்பாக வழங்கியதாகும்.

இந்த மரம் தறிக்கப்பட்ட இடத்தில் இருந்து தற்பொழுது துளிர்த்து வருவது ஆறுதல் அளித்தது.

## சிதிலமாகிக் கிடந்த சொந்த வீடு

அந்நியர்போல் எமது வீட்டை நாமே சுற்றிப் பார்ப்பதை எண்ணி மனம் வலித்தது. குடியிருந்த எமது சொந்த வீடு சிதிலமாகிக் கிடந்ததைக் கண்டு கண்ணீர் வடிந்தது. வீட்டின் கதவு திறந்திருந்தது. உள்ளே யாராவது இருப்பார்களோ என்ற அச்சத்தால் இருமல் சத்தம் ஏற்படுத்தினோம். ஆளரவம் எதுவும் தென்படவில்லை.

துணிவை வரவழைத்துக்கொண்டு உள்ளே சென்றோம். நாம் முதலில் சென்றது பத்திரிகைகள், புத்தகங்கள் சேகரித்து வைத்திருந்த அறைக்குத்தான். அங்கே கண்ட காட்சி பெரும் வேதனையைத் தந்தது.

சிறுகச் சிறுக சேமித்து வைத்த புத்தகங்கள் 'பைண்டிங்' செய்து வைத்திருந்த பத்திரிகைக் கட்டுகள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அனைத்தும் அறையின் மத்தியில் குவிக்கப்பட்டிருந்ததுடன், செல்லரித்தும் காணப்பட்டன.

சூட்கேஸ்கள் வெளியே இழுத்தெடுக்கப்பட்டு அவற்றுக்குள் இருந்த உடைகள் மற்றும் பொருட்கள் வெளியே இறைந்து கிடந்தன.

கறையான் பிடித்திருந்த அவற்றுக்குள் ஏதாவது நல்ல நிலையில் மிச்சமாக இருக்காதா? என்ற ஆவலில் தேடினோம். பல உடைகள் மற்றும் பொருட்கள் காணாமல் போயிருந்தது அப்போது தெரிந்தது.

குசினி உட்பட மற்றைய அறைகளில் பார்த்தபோது எந்தப் பொருட்களுமே பாவிக்கும் நிலையில் இல்லை. பல பொருட்கள் காணாமல் போயிருந்தன.

வீட்டுக்குள் முன்னர் பலர் வந்து சென்றிருப்பதற்கான அடையாளங்களும் காணப்பட்டன.

எம்முடன் தத்தமது வீடுகளைப் பார்க்க வந்திருந்தவர்கள் அந்தச் சமயத்தில் திடீரென்று ஓடி வந்து பதற்றத்துடன் 'இராணுவம் வீடுவீடாக வந்து ஆட்களைப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். நாங்கள் உடனடியாக இங்கிருந்து வெளியேற வேண்டும்' என்றார்கள்.

வியர்த்து விறுவிறுக்க வீட்டைவிட்டு வெளியேறி மறைவான இடம்தேடி ஒளிந்தோம். இராணுவம் வந்துசென்ற பின்னர் எமது சொந்த மண்ணைப் பிரிய முடியாமல் கிராமத்தினை ஒருதடவை சுற்றிப் பார்த்தோம்.

அங்குள்ள வீடுகள் அனைத்துமே திறந்த நிலையிலேயே காணப்பட்டன. தென்னைகளின் கீழ் தேங்காய்க் குவியல்கள் காணப்பட்டன. அவற்றில் பல முளைத்தும் காணப்பட்டன. நாம் சுற்றிப் பார்த்ததில், 2000ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதிக்குப் பின்னர் அந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் அங்கு வாழ்வதற்கான சூழ்நிலையே அற்றுப்போய்விட்டதை உணர்ந்துகொண்டோம்.

இதனால், அங்கிருந்து இடம்பெயர்ந்த 2 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட குடும்பங்களின் நிலைமை கவலையளித்தது.

12 கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கைதடியில் முழுப்பகுதிகளையும் சுற்றிப் பார்க்க முடியவில்லை. இருந்தபோதும், பிரதான வீதிகளில் இருந்த பெரும்பாலான வீடுகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் யுத்தம் பதித்த கொடூர அடையாளங்கள் மற்றப் பகுதிகளின் நிலையைத் தெட்டத் தெளிவாக உணர்த்தியது. எழுத்தில் வடிக்க முடியாத அளவிற்கு போர் அந்த அழகிய கிராமத்துக்கு பெரும் அழிவுகளையும், சேதங்களையும், இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருட இறுதியில் கட்டிமுடிக்கப்பட்ட புது மெருகு குலையாத வீடுகள் புராதன சின்னங்கள் போல் சேதமடைந்திருந்தன. சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து, அந்த வீடுகளைக் கட்டி முடித்தவர்கள் இன்று அவற்றைப் பார்த்தால் எப்படித் துடிதுடித்துப் போவார்கள். புது வீடுகளில் அவர்கள் குடியிருப்பதற்கு முன்னரே அவை அழிக்கப்பட்டதை அறியும்போது அவர்கள் உயிர்தங்குமா?

யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருபுறம் இருக்க, அங்கு எஞ்சியுள்ள பொருள்களை சுருட்டிக் கொள்வதிலும் பலர் ஈடுபட்டு வருவதாக அங்கு தமது வீடுகளைப் பார்வையிட வந்தவர்கள் தெரிவித்தனர்.

நெல் மூடைகள், மிளகாய் மூடைகள், எரிபொருட்கள், வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், மருந்து தெளிக்கும் கருவிகள், ஜெனரேட்டர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட பெறுமதியான பொருட்கள் பலவும் திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அழிவின் விளிம்பில் தமிழன் நிற்கும்போது அகப்பட்டதை சுருட்டுபவர்களை எண்ணி உள்ளம் கொதித்தது.

மீளக் குடியமர்வதற்கான முறையான அனுமதிகள் வழங்கப்படாத போதிலும் சிலர் வேறு வழியின்றித் தத்தமது வீடுகளில் தங்கியிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

ஒழுங்கைகள், தோட்டங்கள், பற்றைகள் நிறைந்த பகுதிகளில் ஆங்கில எழுத்துகளுடன் இலக்கங்கள் பொறிக்கப்பட்ட தகடுகள் தடிகளில் கட்டப்பட்டுள்ளன.

இவைகள் வெடிகுண்டுகள் உள்ள இடங்களாக இருக்கலாம் என்பதனால் இவற்றுக்கு அருகில் எவருமே செல்லவில்லை. வீதிகளில் போட்டோ அல்பங்கள், போட்டோக்கள், வீடியோ ஓடியோ நாடாக்கள் விசிறியடிக்கப்பட்டிருந்ததைப் பொதுவாகக் காணமுடிந்தது.

விவசாயிகளை அதிகமாகக் கொண்ட இங்கு பலரும் கோழிகள், ஆடுகள், மாடுகள் ஆகியவற்றை வளர்த்து வந்தனர். இடம்பெயர்ந்தபோது விட்டுச் சென்ற அந்தக் கால்நடைகள் பலவும் இப்போது மாயமாக மறைந்துள்ளன.

சில மாடுகள் மட்டும் தப்பிப்பிழைத்து மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றுக்கு இருந்த சுதந்திரம்கூட நமக்கு இல்லை என்பதை உணர்ந்தோம்.

## ஆலயங்கள் மூடப்பட்ட நிலையில்

ஊரைக்காக்கும் தெய்வங்கள் குடியிருக்கும் கந்தசுவாமி ஆலயம், பிள்ளையார் கோயில், வைரவர் கோயில், அம்மன் கோயில் உட்பட ஆலயங்கள் இருந்த பகுதிகளைப் பார்வையிட்டபொழுது தெய்வங்களும் இடம்பெயர்ந்ததாகவே தோன்றியது.

மூன்று காலப் பூஜைகள் ஒழுங்காக நடைபெற்று வந்த ஆலயங்கள் பூட்டப்பட்டிருந்தன.

இந்த ஆலயங்கள் எப்போது திறக்கப்படும்? பூஜைகள், மகோற்சவங்கள் நடைபெறுமா? என்ற கேள்விகள் எம்மைக் குடைந்தன.

நிர்மான வேலைகள் நடைபெற்று வந்த கண்டிவீதிப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்வதற்கு எண்ணியபொழுது அங்கு இப்பொழுது செல்வது உசிதமல்ல என்று மற்றவர்கள் எச்சரித்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டோம்.

அந்த ஆலயம் சந்திப் பகுதிக்கு அண்மித்ததாக அமைந்துள்ளது. முன்னர் மக்கள் வெள்ளம் நிரம்பிவழியும் அந்தச் சந்தி இப்போது சன நடமாட்டமற்ற சூனியப் பிரதேசமாக இருந்தது.

ஒரு காலத்தில் விவசாயப் பயிர்கள் விளைந்திருந்த நிலங்களை சற்றுத்தூரத்தில் நின்று நோட்டமிட்டோம் தற்போது செம்மண் பூமியெங்கும் புல்கள், பூண்டுகள், பற்றைகள் மண்டியிருந்தன.

இந்தப் புல் பூண்டுகள் பாதீனியம் களையாகவும் இருக்கலாம். அவற்றுக்கு அருகில் செல்வதற்கு கண்ணிவெடிகள் அச்சமூட்டின.

வயிற்றில் பசி எடுக்கத் தொடங்கியதால் வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது வீதியோரம் மூன்று இளநீர் தேங்காய் பிடுங்கி வைக்கப்பட்டிருந்தன.

அந்த வீதியில் சுற்றுமுற்றும் பார்த்தோம். சன நடமாட்டம் எதனையும் காண வில்லை. அருகில் 4-5 இளநீர்கள் வெட்டிக் குடித்துவிட்டு வீசப்பட்டிருந்தன.

அங்கே இராணுவத்தினரின் சப்பாத்து அடையாளங்கள் காணப்பட்டன. இராணுவம் அந்த வீதியில் சற்று முன்னதாக ரோந்து சென்றிருக்கலாம் என்ற நினைப்பு அச்சமூட்டியது.

மீண்டும் வீட்டிற்குச் சென்றால் இழந்தவற்றை எண்ணி கவலையை வளர்த்துக் கொள்ள நேரிடும் என்பதால் அங்கிருந்து மீண்டும் பி.ப. 2 மணிக்கு நீர்வேலித் தரவையை நோக்கித் திரும்பத் தொடங்கினோம்.



பல்குழல் எறிகணை செலுத்திகளினதும், மிக் விமானங்களினதும் கோரத்தனத்தால் சிதையுண்டு போன சாவகச்சேரி நகர் பகுதி ஒன்று.

## வேறு வழியால் திரும்பினோம்

திரும்பிவரும்போது வேறு பாதையால் வந்தோம். அந்தப் பாதையிலும் குறுக்கே முறிந்து விழுந்து கிடந்த மரங்கள் வழிமறிப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தன.

இரு மருங்கிலுமுள்ள காணிகளில் நின்ற தென்னைகள், பனைகள் எல்லாம் வட்டுடன் முறிந்து மின்கம்பங்கள் போல காட்சியளித்தன.

பதுங்குகுழிகளும், பாதுகாப்பு அரண்களும் அங்கு காணப்படுவதுடன் பெறுமதியான உடுபுடைவைகள், போர்வைகள், சாறிகள் சிதறிக்கிடந்தன.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெறுமதிமிக்க சூட்கேசுகள் வெறுமையாக வீசப்பட்டிருந்தன. சில்வர் பாத்திரங்களும் ஆங்காங்கே அநாதரவாகக் கிடந்தன.

99 வீதமான வீடுகள் முற்றாகச் சேதமடைந்து காணப்பட்டன. சில குடிசைகள் எரிந்து குடிசைகளின் கப்புகள், வளைகள் கருகியிருந்தன.

## இறந்து கிடக்கும் கால்நடைகள்

பொறிவெடிகளும் ஆங்காங்கே வைக்கப்பட்டிருப்பற்கான தடயங்களும் காணப்பட்டன.

இந்த பொறிவெடிகளில் சிக்கிப் பல கால்நடைகள் இறந்த நிலையில் வீதியோரங்களில் அழுகிய நிலையில் கிடந்தன.

சில இடங்களில் மாடுகள் கூட்டம் கூட்டமாக இறந்து கிடந்தன. இறந்து கிடந்த மாடுகளின் உடலங்கள் உப்பிப் பெருத்து வெடித்துள்ளதால் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

தென்மராட்சி எங்கும் இதே நிலைதான் இருக்கும் என்பதனை உணர்ந்த நாங்கள் அங்கு நிற்கமுடியாமல் மீண்டும் நீர்வேலித் தரவையை நோக்கி பயணித்தோம்.

இடுப்பளவு தண்ணீரில் சைக்கிள்களை தள்ளிக்கொண்டும், தமது வீடுகளில் இருந்து எடுத்து வந்த பொருட்களை சுமந்துகொண்டும் கைதடி கரையில் இருந்து நீர்வேலித் தரவை நோக்கி நூற்றுக்கணக்கானவர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

அந்த கடற்பகுதி ஆழமாக இருந்த போதும், கீழே சேறும் சகதியுமாக இருந்ததினால் சேற்றில் கால்கள் புதையப் புதைய ஒவ்வொரு அடிகளையும் அவதானமாக எடுத்துவைக்க வேண்டியிருந்தது.

சிலர் அந்தக் கடற்பகுதியில் இருந்த பள்ளங்களில் விழுந்து எழும்பிச் சென்ற காட்சி பரிதாபமாக இருந்தது. இவர்களுடன் சேர்ந்து நாமும் 'ஏலேலோ' பாடிக் கொண்டு கடலில் இறங்கினோம்.

கைதடிக்கும் நீர்வேலிக்கும் இடைப்பட்ட தரவைப் பகுதியை அடைந்த நாங்கள் அங்கே எமது சைக்கிள்களை நிறுத்தி அவற்றில் ஒட்டியிருந்த கடற்சேறுகளை கழுவிக்கொண்டோம்.

எங்களைப் போன்று தென்மராட்சியின் பல பகுதிகளுக்கும் சென்றுவந்தவர்கள் அங்கு தாம் கண்டவற்றைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்தனர்.

மட்டுவில் தெற்கில் இருந்துவந்த ஒருவர் சொன்னார், 'எங்கள் கிராமத்தில் சகல வீடுகளும் உடைந்து போயுள்ளன. வீட்டுப் பொருட்கள் எதுவும் இல்லை. வீட்டுத் தளபாடங்கள் சில அங்கு அமைக்கப்பட்டுள்ள காவலரண் பகுதிகளில் கிடந்தன' இவ்வாறு தமது இழப்புகள் தொடர்பாக ஒவ்வொருவரும் அடுக்கிக்கொண்டே போனார்கள்.



பல்குழல் பீரங்கி பாழடித்த சாவகச்சேரி நவீன சந்தை.

## ஏக்கப் பெருமூச்சுகள்

'தென்மராட்சிப் பகுதிக்கு இன்று சென்று வரக்கூடிய நிலைமை இருந்தும் ஏன்தான் எங்களுக்கு அனுமதி தருகிறார்கள் இல்லை. நாம் அங்கு குடியமராது விட்டாலும் மிஞ்சியுள்ள எமது உடைமைகளையாவது மீட்கலாம் தானே' என்று அங்குவந்த அனைவரும் ஆதங்கப்பட்டனர்.

எத்தனை நாட்களாக நீர்வேலித் தரவை ஊடாக அலைந்துகொண்டிருக்கின்றோம் எங்களின் நிலை தொடர்வதை யாராவது கவனத்தில் எடுத்தார்களா?

சட்டவிரோதமாக எல்லோரும் தமது வீடுகளைப் பார்ப்பதற்குச் செல்வதனால் தான் அங்கே திருட்டுகள் இடம்பெறுகின்றன. இவற்றினை யார் தடுத்து நிறுத்துவது? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

தென்மராட்சி மக்களின் எதிர்காலம் மட்டுமல்ல, யாழ். குடாவின் எதிர்காலமே கேள்விக்குறியில்தான் நிற்கின்றது.

யுத்தம், இடப்பெயர்வு இவற்றுக்கு முற்றுப்புள்ளி இடப்படுமா? என்பதற்கு விடை காணமுடியாது எங்கள் கிராமத்துப் பயணத்தை நிறைவு செய்து திரும்பினோம்.



சிறீலங்காப் படைகளால் அழிக்கப்பட்ட நாவற்குழிப் பாலம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயற்கையே நீயுமா?



நெடுந்தூரச் சுமைகள்
ஒன்றன் பின் ஒன்றாய் அழுத்திடவே
மூர்ச்சையாகி முகவரியிழந்தும்
முடிவதில் உறுதியாய்த் தானிருந்தது எம்மினம்
முட்கம்பி வேலிக்குள் முடங்க மறுத்து
நிறைகுடம் சுமந்து திரிந்து
கிடைத்த ஒரு நிழலில் குடிகொண்டது.
மாற்றானிடம் மண்டியிடக்கூடாது
இதுவே அவரது கொள்கையுமானது.
பொலித்தீன் பைகளால் போர்த்தப்பட்ட
குடில்களே அவரது குடியிருப்புகளாயின
படைத்தவரும் பகைவன் பக்கமாவென
இறைஞ்சும் அளவுக்கு காலநிலையும்
கண்டபடி மாறும் இங்கே.
பொட்டல் விழுந்த கூரையூடே
பனியும் வெய்யிலும் கொடிய மழையுமென
வாட்டியது எம்மவரை
போதாக்குறைக்கு ஜந்துக்களின் கொடூரம் வேறு
உலகெல்லாம் பல கோடி உயிரை
விழுங்கியே ஏப்பம் விட்டபடி
கோரப் பசிக்கு இரை தேடும் இயற்கையே
நாம் வாழும் தாயகத்திலுமா தாண்டவமாடுகின்றாய்
எம் இனத்தையே நோகடிக்கின்றாய்
கொடிய போரின் தீ நாக்குகள்
பொசுக்கிய மேனிகளை தழுவியே
தேற்ற மறந்து நீ
கடும் மழை புயலென மாறி
வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுகிறாய்
மீன் பாடும் என் ஊரையும் தீண்டுகின்றாய்
அடிக்கடி அங்கேயுள்ள அரக்கத்தனத்தை
அரங்கேற்றுகிறாய்
கை கூப்பியே வேண்டுகிறேன்
கருணை காட்டி
இனியாவது எம்மைத் தீண்டாதிரு.

**– அ. அன்ரனி.**
**தமிழீழம்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிறீலங்காவின் பொரு
# முரண்படும் கோட்



சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிப் போக்கில் சென்றுகொண்டிருப்பதாகக் கூறி வருகின்றது. யுத்தத்திற்கென பெருந்தொகை நிதி செலவிடப்பட்டு வருகின்றபோதும், அபி விருத்திப் பணியில் பாதிப்பு ஏற்படவில்லை யென்றும் அரசாங்கம் கூறுகின்றது.

அரசாங்கம் கூறும் இந்த வளர்ச்சிப்போக் கிற்கு ஆதாரமாக மத்திய வங்கியின் புள்ளி விபரங்களையும் அது சுட்டிக்காட்டத் தவற வில்லை.

ஆனால், அரசாங்கத்தின் இந்த வெளிப் படுத்துகையுடன் சிறீலங்காவின் பொருளியல் நிபுணர்களோ அன்றி சர்வதேச நிதி நிறுவனங்களின் நிபுணர்களோ ஒன்றித்துப் போகவில்லை.

அரசாங்கத்தின் முடிவுகளுக்கு முரண் பாடான முடிவுகளையே தெரிவிக்கின்றனர். அதாவது, அரசாங்கம் கூறும் பொருளாதார வளர்ச்சி என்பது யதார்த்தபூர்வமானதல்ல எனக்கூறுகின்றனர். அத்துடன் அரசாங்கத்தின் நிதிமுகாமையையும் அவர்கள் கண்டித் துள்ளனர்.

1996 - 30பில்லியன் ரூபாய்கள்

1998ஆம் ஆண்டிலும், 1999ஆம் ஆண்டி லும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாரியளவிலான வெட்டுக் களைச் செய்துவந்த சந்திரிகா அரசாங்கம், கடந்த ஆண்டு முற்பகுதியில் சகல அபி விருத்தித் திட்டங்களையும் நிறுத்துமாறும் பாராளுமன்ற உறுப்பினர்களையும், சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக் கீட்டில் 50 சதவீத வெட்டினை மேற்கொள்ளு மாறும் உத்தரவிட்டிருந்தது. இப் பணிப்பு ரையை ஜனாதிபதியே நேரடியாக விடுத் திருந்தார். அதாவது, அபிவிருத்தித் திட்டங்

1997 - 40பில்லியன் ரூபாய்கள்

களை நிறுத்திய அரசாங்கம் நாட் டின் பொருளாதாரம் வளர்ச்சிப் போக்கைக் காட்டுவதாகக் கூறுவது எந்தவகையில் ஏற்புடையதாக அமை யமுடியும் என நிபுணர்கள் சர்ச்சை யைக் கிளப்பிவிட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த சில ஆண்டுகளாக பணவீக்கம் ஆண் டுக்கு சுமார் பத்து வீதமாக இருந்து வருகின்றது. அத்துடன், பணத்தின் பெறு மதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து, பொது விலைமட்டம் உயர்வடைந்து வருகின்றது. நாட்டின் சர்வதேச வர்த்தகம் பாதகமான நிலையிலிருந்து வருகின்றது. இதனால் வெளி நாட்டுச் சொத்தின் இருப்பு நிலை குறை வடைந்து செல்கின்றது.

நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும் பாகக் கருதப்படும் பங்குச்சந்தையும் தொடர்ச் சியான வீழ்ச்சிப்போக்கையே கொண்டுள் ளது. அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை பலவீனமான நிலையிலும் தொடர்ந்து ஓட்டிச் செல்ல பலமான நம்பிக்கையுடன், பெரும் பிரயத்தனத்துடன் அரசாங்கம் ஊக்கப்படுத் திய வெளிநாட்டு முதலீடுகளும், பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் அரசியல் சூழலில் ஸ்திரமற்ற தன்மைகளால் ஊக்கமிழந்து, முதலீடுகள் குறைவடைந்து, பொருளாதாரத் திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி நிற்கின்றது.

அதுமட்டுமல்ல, வருடாந்தம் வரவு-செலவுத்திட்டத்தில் சுமார் பத்தாயிரம் கோடி ரூபா பற்றாக்குறையை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கடன்கள் வாயிலாக நிவர்த்தி செய்யவேண்டிய நிலையிலுள்ள போதும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் ஐந்திலொரு பங்கை பாதுகாப்புச் செலவீன மாகவும், வருடாந்தம் அரசாங்க நடைமுறைச் செலவில் 25 சதவீதத்தை கடன்களுக்கான வட்டியாகவும் செலுத்திவருகின்றது. வரவு-செலவுத்திட்ட மீண்டெழும் செலவீனத்தில் மிகப்பெரும் தொகையாவும் இது இடம்பிடித்துள்ளது.

1998 - 50பில்லியன் ரூபாய்கள்

இவ்வாறான பொருளாதாரப் பின்னணி யிலேயே சந்திரிகா அரசின் பொருளா தார வளர்ச்சி தொடர்பான வெளிப்படுத்துகை யின் உண்மைத் தன்மை சர்ச்சைக்குள்ளாகி யுள்ளது.

'டொலருக்கெதிரான சிறீலங்காவின் நாணயப் பெறுமதி இறக்கமானது, நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு பலவீனமானதாக வுள்ளது என்பதையே காட்டுகின்றது. நாட் டின் வெளிநாட்டுச் சொத்து தொடர்ந்து குறை வடைந்து வருகின்றது. இதனால் டொலருக் கெதிரான நாணயப்பெறுமதியின் வீழ்ச்சி தொடர்ந்தும் இடம்பெறும்' என சிறீலங்காவின் பொருளியல் நிபுணர்களில் ஒருவரான கலா நிதி ஜே.வி.கொலேகம சிறீலங்கா ஆட்சி யாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2001 - 100பில்லியன் ரூபாய்கள் எதிர்பார்க்கப்படுகிறது

'பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துச் செல்வதால் சிறீலங்காவின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பாரியளவு பின்னடைவைச் சந்திக்கின்றது. அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதோடு, பாதுகாப்புச் செலவீனத்தைக் குறைப்பதும் அவசியமான தேவையாகவுள்ளது' என உலக வங்கியின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

'சிறீலங்காவின் வெளிநாட்டு வர்த்தகம் பாதகமான நிலையிலுள்ளதால், இருப்பிலிருந்து அறுநூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது, சுமார் ஐயாயிரம் கோடி ரூபா இழக்கப்பட்டுள்ளது' என ஆசிய பசுபிக் பிராந்திய அனைத்துலக நாணய நிதியத் திணைக்களத்தின் உயர் அதிகாரி

1999 - 55பில்லியன் ரூபாய்கள்

யான செரமிக் காட்டர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில்தான் உண்மையில் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி அடைகின்றதா? வளர்ச்சியடைவதாகக் காட்டிக் கொள்ளும் வழிமுறை சரியானதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

*ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள், சேவைகளின், உற்பத்தியின் மெய்ப்பெறுமதி அதிகரித்துச் செல்லுதல் பொருளாதார வளர்ச்சியாகும்.

2000 - 84பில்லியன் ரூபாய்கள்

*ஒரு நாட்டில் அனைத்து மக்கள் பெறும் வருமானங்களின் மொத்த மெய்ப்பெறுமதி அதிகரித்துச் செல்லல் பொருளாதார வளர்ச்சியாகும்.

*ஒரு நாட்டிலுள்ள அரசாங்கமும், தனியாரும் தாங்கள் மேற்கொண்ட மொத்தச் செலவுகளின் கூட்டுத்தொகை அதிகரித்தல் பொருளாதார வளர்ச்சியாகும்.

மொத்த உற்பத்தி, மொத்த வருமானம், மொத்தச் செலவு மூன்றும் ஒரு நாட்டில் சமனாக இருக்கும். இந்த மூன்றில் ஏதாவது சம நிலைமெய்ப்பெறுமானம் முன்னைய ஆண்டைவிட குறித்த ஆண்டில் அதிகரித்தால் அது குறித்த ஆண்டுக்குரிய பொருளாதார வளர்ச்சியாகும்.

இது பொருளாதார வளர்ச்சிக்கு தத்துவார்த்தமான விளக்கமே. அதாவது, பொருளாதார வளர்ச்சியை புள்ளிவிபரரீதியாக அறிந்து கொள்வதற்குரிய வழிமுறையேயாகும்.

இதன் அடிப்படையிலேயே பாதுகாப்புச் சேவை, உற்பத்திப் பெறுமதி இவற்றிற்குச் செலவு செய்யும் செலவைக்கொண்டு கணிக்கப்படுகின்றது. எனவே, வருடா வருடம் அரசாங்கம் பாதுகாப்புச் செலவை அதிகரித்தல், பாதுகாப்புச் சேவை உற்பத்தி அதிகரிக்கின்றது எனக் கருதுகின்றது. இந்த உற்பத்தியின் அதிகரிப்பு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்துக் காட்டுகின்றது.

பாரிய தொழிற்சாலைகள் மூலமும், விவசாய நடவடிக்கைகள் மூலமும் உற்பத்தி செய்யப்படும் கைத்தொழில் விவசாயப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்து ஏற்படும் பொருளாதார வளர்ச்சியையும், பாதுகாப்புச் சேவை உற்பத்தி அதிகரிப்பால் காட்டப்படும் பொருளாதார வளர்ச்சியையும் எந்த வகையில் ஒப்பிடமுடியுமென பொருளியல் நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும், சந்திரிகா அரசாங்கம் டாங்கிகள், யுத்தவிமானங்கள், குண்டுகள், புல்டோசர்கள், ஆட்லறிகள், கவசவாகனங்கள் போன்ற இராணுவத் தளபாடங்களிற்கான கொள்வனவை மூலதனச் செலவாகவே கொள்கின்றது. மூலதனச் செலவு என்பது மென்மேலும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு/தூண்டுவதற்கு நிலையாக மேற்கொள்ளப்படும் செலவு ஆகும். சிறீலங்காவில் மேற்குறிப்பிட்ட மூலதனப் பொருட்கள் மென்மேலும் பாதுகாப்புச்சேவை உற்பத்தி அதிகரிப்பிற்குப் பயன்படுகின்றதென அரசாங்கம் கருதி, பாதுகாப்புச் செலவை மூலதனச் செலவாக்கிக்கொள்கின்றது.

ஆனால், ஏனைய நாடுகள் பாரிய துறைமுக வசதிகள், சிறந்த போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், வடிகால் அமைப்பு, பயணிகள் விமான நிலையங்கள் போன்றவற்றிற்கே பெரியளவு நிதியை மூலதனச் செலவாகக் கொண்டு செலவு செய்கின்றன. எனவே, சிறீலங்காவின் பொருளாதார வளர்ச்சியை இந்த நாடுகளில் அரச செலவின் அதிகரிப்பு ஊடாக ஏற்படும் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிடமுடியாது.

ஆதலால் பொருளாதார வளர்ச்சியென உலக அரங்கிலும், உள்நாட்டு மக்களுக்கும் காட்டவேண்டும் என்பதற்காக அரசியல் உள்நோக்கத்துடன் மத்திய வங்கியின் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். அரசாங்கம் கூறும் பொருளாதார வளர்ச்சி என்பது யதார்த்தபூர்வமானதல்ல. பொருட்களுக்கான பொது விலைமட்டம் அதிகரித்து, மக்கள் கொள்வனவு சக்தியை இழந்து வரும் வேளையில் மக்கள் மேலும் வறுமை நிலையை நோக்கித் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கையில் பொருளாதார வளர்ச்சி என்பது யதார்த்தமானதாக இருக்கமுடியாது.

சிறீலங்காவைப் பொறுத்து, பொருத்தமற்ற மூலகங்களைப் பயன்படுத்தி மத்திய வங்கி அறிக்கைகளைத் தயாரிக்கின்றது என்ற பொருளியல் நிபுணர்களின் குற்றச்சாட்டுக்களைப் பார்க்கும்போது, பொருளாதார வளர்ச்சி என அறிக்கைகள் பிரதிபலிக்கும் முடிவுகள் தவறானது என ஏன் கொள்ளமுடியாது.

| | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|
| ஆண்டுப்புரள்வு (மில்லியன் ரூபாவில்) | 18232 | 14842 | – |
| உள்நாட்டுப்புரள்வு (மி.ரூபா) | 12587 | 9792 | – |
| வெளிநாட்டுப்புரள்வு (மி.ரூபா) | 5645 | 5050 | – |
| நாளாந்த சராசரிப்புரள்வு (மி.ரூபா) | 76 | 62 | – |
| பங்கு வியாபாரம் (மி.ரூபா) | 634 | 486 | – |
| கொடுக்கல் வாங்கல் | 329068 | 250759 | – |
| சந்தை மூலதனவாக்கம் (மி.ரூபா) | 116.6 | 112.8 | – |
| சராசரி சந்தை மூலதனவாக்க வீதம் | 14.8 | 12.9 | – |
| பங்கு இலாப விளைவு வீதம் | 4.5 | 5.2 | – |
| அனைத்துப் பங்குகளுக்கான சுட்டி | 597.3 | 572.5 | 438.4 |
| உணர்திறன் சுட்டெண் | 923.1 | – | – |
| லங்கா விலைச்சுட்டெண் | – | 937.5 | 675.2 |

# ளாதார வளர்ச்சி குறித்து
# பாடும் – யதார்த்தமும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிழல் ஆக்கிரமிப்பு



-அன்புமாறன்-

ஓயாத அலைகள் நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிப்பாளரிடமிருந்து மீட்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவத்தின் நேரடி ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட நிலையில் இன்று மக்களின் மீள்குடியேற்றத்திற்கு சவாலாக எழுந்து நிக்கிறது, இராணுவம் மக்களின் வாழ்விடங்களில் புதைத்துவிட்டுச் சென்ற மிதிவெடிகளினதும், சூழ்ச்சிப் பொறிகளினதுமான வெடிபொருட்களின் ஆக்கிரமிப்பு.

பல்லாயிரக் கணக்காக வன்னியின் நிலப்பகுதியெங்கும் புதையுண்டு கிடக்கும் வெடிபொருட்களினால் உணரப்படும் அபாயம் மிகப்பெரியது. இறப்புக்களையும், அங்கவீனங்களையும் ஏற்படுத்தும் இவற்றின் தாக்கத்திற்கும் அப்பால் எமது சமுதாயத்தில் குறிப்பாக மீள்குடியேறும் மக்களின் மத்தியில் இவை ஏற்படுத்தும் உளவியல்ரீதியிலான தாக்கமும், கொல்லப்பட்ட, அங்கவீனமடைந்தோரின் குடும்பத்தில் ஏற்பட்டுள்ள சுமைமிகுந்த வாழ்வும் குடும்பத்தின் உழைப்பாளர்களை இழந்துவிட்டு நட்டாந்தெருவில் நிற்கும் மக்களின் பரிதவிப்பும் காலத்தால் நீளுவதால் எதிரி ஏற்படுத்திய இவ்வெடிபொருள் ஆக்கிரமிப்பின் கனபரிமாணத்தை அதன் விளைவுகளோடு விளக்குவதாய் உள்ளது.

இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதாக, மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதாக இயல்பு வாழ்விற்கான ஏதுநிலை தோற்றுவிக்கப்படுவதாக அரசு பிரச்சாரப்படுத்துகின்றது. அங்கெல்லாம் தனது இராணுவம் புதைத்துவிட்ட கண்ணிவெடிகளைக்கூட பெரும் பொருளாதார செலவீனங்களுடன், ஆட்பல மற்றும் உயர் தொழில்நுட்ப கருவிகளைக்கொண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP) போன்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் துணையுடன் அகற்றுவதாக அரசு காட்டுகின்றது. ஆனால், அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு பின் புலிகளால் மீட்கப்பட்டுவிட்ட எம் மக்களின் பூர்வீக நிலங்களில் சிறீலங்கா இராணுவம் பெருமளவான நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுச் சென்றுள்ளது. மீட்கப்பட்ட எம் தாயக பூமியின் பிரதான நகரங்கள், வீதிகள், உற்பத்தி நிலங்கள் எல்லாம் கண்ணிவெடிகளால் சூழப்பட்ட நிலையில் அங்கே எம் மக்கள் மீளக் குடியேற ஏதுவாக சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் தன்னும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவதற்கு அரசு அனுமதி மறுத்துள்ளது. சிறீலங்கா அரசு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடாக இருந்தும்கூட அந்நிறுவனத்தின் 'கண்ணி வெடிகள் தடை' பற்றிய தீர்மானங்களை உதாசீனப்படுத்தி வருகின்றது.



வன்னிப் பெருநிலப்பரப்பின் பெரும்பான்மைப் பிரதேசங்கள் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட நிலையில், 'மக்களைக் காப்பதற்காக யுத்தம்' செய்யவந்த படையினர் திட்டமிட்டு விதைத்துவிட்டுச் சென்ற மிதிவெடிகளும், சூழ்ச்சிப் பொறிகளும் தொடர்ந்தும் எம்மக்களின் உயிர்களைப் பறிக்கின்றன. தம் சொந்த நிலங்களில் மீள்குடியேறத் துடிக்கும் மக்களிற்கு அரசு கொடுக்கும் நிவாரணம் அல்லது புனர்வாழ்வு-புனர்நிர்மாண உதவி மரணங்களும், அங்கவீனங்களும் மட்டுந்தான்.

கடந்த 1998 தொடக்கம் 2000 புரட்டாதி வரையிலான வன்னியின் வைத்தியசாலைக் கணக்கெடுப்புக்களின்படி சிறீலங்கா அரச படைகளின் மிதிவெடிகளிலும், பொறிவெடிகளிலும் அகப்பட்டு 20ற்கும் மேற்பட்ட எம் மக்கள் பரிதாபகரமாக கொல்லப்பட்டுள்ளனர். 175ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஒரு காலையேனும் இழந்த நிலையில் அங்கவீனமாகியுள்ளனர் என்கிறது 'வெண்புறா' நிறுவன அறிக்கை. ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னால் ஏற்பட்ட வெடிபொருட்களின் அச்சுறுத்தலால் எம்மக்கள் அனுபவித்த அவலங்களின் நேரடிச்சாட்சியங்களே இவை.

அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை, அங்கவீனமடைவதையிட்டு பாராமுகமாக இருக்கும் அரசு, அங்கவீனமானவர்களுக்குத்தன்னும் மருத்துவ வசதிகள் வந்தடைவதைத் தடைசெய்து இறுக்கமான மருத்துவ தடையிருந்தும் பொருட்கள் வெட்டு என மக்களின் மீதான வாழ்வியல் அழுத்தங்களை உயர்த்திச் செல்கின்றது.

இந்நிலையில் கண்ணிவெடிகளால் ஏற்படுத்தப்படும் விபத்துக்களைத் தகர்க்கும் பொருட்டு சர்வதேச தமிழர் சமூகத்தின் ஆதரவுடன் இயங்கிவரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனமான வெண்புறா நிறுவனம் முன்னெடுத்துவரும் செயற்திட்டங்கள் மீள்குடியேறத் துடிக்கும் எம் மக்களின் மனங்களில் புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றது. இரண்டாயிரமாம் ஆண்டின் முதலிரண்டு காலாண்டுகளையும் கண்ணிவெடிகளிற்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் காலப்பகுதியாக வரித்துக்கொண்ட வெண்புறா நிறுவனம், சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் ஆதரவுடன் கட்டங்கட்டமாக 'கண்ணிவெடி விழிப்புணர்வு' தொடர்பான பணிகளை வன்னிவாழ் மக்களின் மத்தியில் முன்னெடுக்கத் தொடங்கியது.

முதற்கட்டமாக கண்ணிவெடி விழிப்புணர்வு பற்றிய வகுப்புக்கள் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு போதனாசிரியர்களுக்கு வழங்கப்பட்டு பின் அவர்கள் மூலம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்னிப் பிரதேசம் எங்கும் பாடசாலைகள், அரச திணைக்களங்கள், பொது அமைப்புக்கள், மக்கள் குடியேற்றங்கள் என விரிவாக்கப்பட்டன. இருநூற்றுக்கும் மேற்பட்ட வெண்புறா கண்ணிவெடி விழிப்புணர்வு போதனாசிரியர்களால் பயிற்றுவிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கானவர்கள் தாம் சார்ந்திருந்த கிராம நிறுவன அமைப்புக்களின் ரீதியில் கண்ணிவெடி விழிப்புணர்வுப் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

இவற்றின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் 2000ஆம் ஆண்டின் ஆனி 18 தொடக்கம் ஆனி 24 வரை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வெண்புறா நிறுவனத்தால் கண்ணிவெடி விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இக்காலப் பகுதியில் 'கண்ணிவெடி விழிப்புணர்வு விரிவாக்கற் பணிகள்' ஆரம்பமாகின.

இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் இனங்காணப்பட்ட 'கண்ணிவெடி வயல்கள்' என சந்தேகிக்கும் பிரதேசங்கள் அபாயப் பிரதேசங்களாக இனங்காட்டப்பட்டன. இவற்றின் மூலம் கண்ணிவெடி அபாயப் பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் தவிர்க்கப்பட்டது. மக்கள் மீள்குடியேறும் இடங்களில் கண்ணிவெடி அபாயம் குறித்த எச்சரிக்கைப் பலகைகள், அறிவுறுத்தற் சுவரொட்டிகள் என்பன ஏற்படுத்தப்பட்டன. மக்கள் கண்ணிவெடி பற்றிய எச்சரிக்கை உணர்வுடையவர்களாக மாற்றப்பட்டனர். வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் உள்ள பாடசாலைகளுக்கு வெடிபொருட்களின் மாதிரிகள் வழங்கப்பட்டன. இவற்றின் மூலம் மாணவர்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு வெடிபொருட்களை இனங்காணும் தன்மை உருவாக்கப்பட்டதுடன், அவற்றைக் காணும் போது மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் விளங்கப்படுத்தப்பட்டன. இவ்வாறு வன்னி மக்கள் தம் வாழ்நிலம் தழுவிய நிலையில் வெண்புறா நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட கண்ணிவெடி விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் பங்கெடுத்தனர்.

இறுதியாக நிலக்கண்ணிவெடிகளை அகற்றுதல், செயலிழக்கச் செய்தல் தொடர்பான செயற்திட்டங்கள் ஆரம்பமாகின. சிறீலங்கா அரசு வன்னியில் மக்களின் வாழிடங்களில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிகளை அகற்றுவற்கான அனுதியை மறுத்தது. சர்வதேச தொண்டர் நிறுவனங்களோ கண்ணிவெடி அகற்றும் பணியில் தாம் எதுவுமே செய்யமுடியாதெனக் கைவிரித்தன. இந்நிலையில் கண்ணிவெடி விபத்துக்களைத் தவிர்த்து, மக்களை மீள்குடியேற்றம் செய்ய ஏதுவான சூழலை ஏற்படுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகளின் நிபுணத்துவம்சார் வாழிகாட்டலுடன் வெண்புறா நிறுவனத்தின் 'கண்ணிவெடி அகற்றும் பணியாளர் குழு' (Deminig group) உருவாக்கப்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முற்றான நிதி அனுசரணையுடன் வெண்புறா நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட கண்ணிவெடி அகற்றும் பணி இரண்டாயிரமாம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம் வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் விரிவுபடுத்தப்பட்டது.

யாழ். குடா உள்ளிட்ட இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் பெரும் தொகையான பொருளாதார செலவுடன் உயர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும் நிலையிலும், மீட்கப்பட முடிந்த கண்ணிவெடிகளது அளவு மிக அற்பமாகவே இருந்தநிலையில், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் மிகக்குறைந்த ஆட்பலத்துடன் செயற்பட்ட வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் குறுகிய காலப் பகுதியில் ஏராளமான பிரதேசங்களை எதிரியின் வெடிபொருள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டனர்.

கடந்த ஆறுமாதங்களில் மட்டும் 72,000ற்கும் மேற்பட்ட மிதிவெடிகளை, 3500ற்கும் மேற்பட்ட எறிகணைகளை, 150ற்கும் மேற்பட்ட வாகன எதிர்ப்புக் கண்ணிவெடிகளை மற்றும் பலவித சூழ்ச்சிப்பொறிவெடிகள் உள்ளிட்ட வெடிபொருட்களை இராணுவத்திடமிருந்து வெற்றிகொள்ளப்பட்ட பிரதேசங்களில் இருந்து அகற்றினர். இதன் மூலம் மக்கள் அப்பிரதேசங்களில் மீளக் குடியேற்றஞ் செய்வதற்கு சாத்தியமானதொரு புறச்சூழலைத் தோற்றுவித்தனர்.

வெடிபொருட்கள் பற்றிய நிபுணத்துவ பயிற்சிகளைப் பெற்றிருப்பினும்கூட அபாயகரமான இந்தப் பணியை தேசத்திற்கான கடமையாக செயற்படுத்தி வரும் இவர்களின் அபாரமுயற்சி பாராட்டுக்குரியது. மக்களிற்கான இப்பணியின்போது தமது உயிரைத் தியாகம் செய்த பணியாளர்கள் இருவரும் மற்றும் அங்கவீனமடைந்தோரும் என்றும் எம்மக்களின் நினைவிற்கும், நன்றிக்கும் உரியவர்கள்.

இன்று மக்கள் மீளக்குடியேறுவதற்காக தம் சொந்த நிலங்களை நோக்கிச் செல்கின்றனர். தமது மீள்குடியேற்றப் பகுதியில் அமைந்துள்ள வெண்புறா தொடர்பகத்தை நாடுகின்றனர். தமது பிரதேசத்தில் காணப்படும் வெடிபொருட்கள் பற்றிய அபாயத்தை கேட்டு அறிகின்றனர். மக்கள் குடியேற விரும்பும் இடங்களில் கண்ணிவெடி அபாயம் காணப்படும் பட்சத்தில் வெண்புறா கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் சேவைக்கு அழைக்கப்படுகின்றனர். கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களால் பிரதேசம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னர் மக்கள் மீள்குடியேறுகின்றனர். இவை இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட எம் பிரதேசங்களில் நாம் காணும் காட்சிகள்.

ஆக சர்வதேச தொண்டர் நிறுவனங்களால்கூட மீள்குடியேறும் நிலங்களில் எம் மக்களின் வாழ்விற்கான கோரிக்கைகள், நிறைவு செய்யப்படாத நிலையில், அடக்குமுறையாளர்களிடமிருந்து எதையுமே எதிர்பார்க்க முடியாத சூழலில் இன்று தாமாகவே கட்டியெழுப்பிவிட்ட மக்கள் அமைப்புக்கள் மூலம் எம்மக்கள் தம் தேசத்தில் தமது வாழ்விற்கான தடைகளை நீக்கத் தொடங்கிவிட்டனர். இதுவே விடுதலைக்காக போராடும் மக்களின் செயற்பண்பு ஆகும்.

## சிறீலங்காவிற்கு நான்காவது இடம்

உலகிலே அதிகளவில் கண்ணிவெடி பாவிக்கின்ற நாடுகளில் சிறீலங்கா நான்காவது இடத்தில் உள்ளதாக உலநாடுகளுக்கான கண்ணிவெடி தொடர்பான கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டு வரை 6000மில்லியன் மிதிவெடிகள் சிறீலங்கா அரசால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 98 சதவீதமானவை தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான இலங்கைத்தீவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியிலேயே புதைக்கப்பட்டுள்ளன.

50ஆண்டுகள் வரை உயிர்ப்புடன் இருந்து பாதிப்பை ஏற்படுத்த வல்லதாக உள்ள பிளாஸ்ரிக் மிதிவெடிகளே அரசபடைகளால் பயன்படுத்தப்படுகின்றன. சிறீலங்காப்படைகள் புதைக்கும் மிதிவெடிகளால் கூடுதலாக யாழ் குடாநாடு மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பு வாழ் தமிழர்கள் பெரிதும் பாதிப்புறுகின்றனர். குறிப்பாக குறைந்த நிலப்பரப்பில் அதிகம் கூடுதலான மிதிவெடிகள் சிங்களப்படைகளால் விதைக்கப்பட்ட பிரதேசமாக மீட்கப்பட்ட கிளிநொச்சி பிரதேசம் விளங்குகின்றது. 60சதுர கிலோமீற்றர் பரப்பளவிலான பிரதேசத்தை ஆக்கிரமித்து நின்ற சிறீலங்காப்படைகள் ஒரு சதுரக் கிலோமீற்றருக்கு 3000 பொறிவெடிகள் என்ற வீதத்தில் பரப்பிச் சென்றுள்ளன.

இதுவரையில் கடந்த ஒன்றரையாண்டுக் காலப்பகுதியில் 20வரையான தமிழர்கள் பொறிவெடிகள் காரணமாக உயரிழந்துள்ளனர். வன்னியிலும், யாழ் குடாநாட்டிலுமாக நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் அவயங்களை இழந்தும் படுகாயமும் அடைந்துள்ளனர். 2001ஆண்டின் முதல் மாதத்தில் யாழ் குடநாட்டில் மாத்திரம் 10ற்கும் மேற்பட்டோர் மிதிவெடிகளால் தமது அவயங்களை இழந்துள்ளனர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கிருந்தோ ஒரு புண்ணியவாளன்
எம் வாசலுக்கு வந்துள்ளார்.
மீண்டும் எம் கதவுகள் தட்டப்படுகிறது.
அழைப்புமணிச் சத்தத்தில் எத்தனை ஆனந்தம்.
வாசல்வர யாருமற்றிருந்ததால்
தூசி படிந்துள்ளது தூமணிக்கபாடம்.
எண்ணையற்ற பூட்டும், பிணைச்சலும்
இறுகிக் கிடக்கின்றது.
ஆயினும் எம் மனங்களைப்போல
கதவுகளை அகலத் திறக்கின்றோம்.
குசலம் விசாரிக்க வருவோரில்லாததால்,
கோலமற்றுப் போனது எம்முற்றம்.
காற்று வரட்டும்
என விடுதலையைப் பாடியபடி,
விடுதலைக்கு வீரியம் கொடுத்தபடி
மழை வரட்டும்.
எம் ஜீவனின் இசையைக் கூவிக்கொண்டு
குயில்கள் வரட்டும்.
நாமிழந்த வாழ்வின் கீதத்தை முணுமுணுத்தபடி
உலக நாடுகள் ஓடிவரட்டும்.
எம் ஆத்மாவின் ராகத்தை ஓலித்தபடி
ஐந்து கண்டங்களும்
அவற்றைச் சுற்றிய சமுத்திரங்களும் வரட்டும்.
வருக நண்பரே!
எரிக் சொல்ஹெய்ம்.
உச்சரிக்கும்போதே உதடுகள் நன்றி சொல்கின்றது.
பனிவிழும் தேசத்து மனிதருக்கு எம்பணிவு.
அனல் தகிக்கும் வனத்திடை வந்த அன்புக்கு
ஆயிரம் வணக்கங்கள்.
நோர்வே தேசமே!
உன்னை நெஞ்சார வாழ்த்துகிறோம்.
நீலவிதானமே நெருப்பிற்குளிக்க
நேற்றுவரை வானப்பிசாசுகள் வந்து போயின.
குண்டள்ளிச் சொரிந்து குதூகலித்தன.
தூரத்தே பீரங்கிவாய் துடித்தலற
துப்பித் தொலைத்தன எறிகணைகள்.
உங்கள் வரவறிந்து போலும்
இன்றெல்லாம் வாயடைத்துப் போயின.
நாம் பட்டதுயருக்குப் பட்டியல் தேவையில்லை
'ஓஸ்லோ' வீதிகளிற் திரியும்
ஒரு தமிழனைக் கேளுங்கள்.
தன் கால்கள் தீப்பிடிக்க ஓடிய கதை சொல்வான்.
தொப்பிள் கொடிசுற்றித் தூங்கிய கருவறையை
குண்டுகள் பிளந்த குரூரம் கூறுவான்.
உடன் பிறப்பை ஓநாய்கள் பிடித்தேகிக்
கடித்துக்குதறிய கதை சொல்லுவான்.
கண்ணீரில் எங்கள் வாழ்வு மிதப்பதை
புலம்பெயர்ந்து போன பிள்ளைகளிடம் கேளுங்கள்.
இங்கே பாதையோரத்தில் கிடக்கும்
பட்டினி வயிறுகளைக் கேளுங்கள்.
சின்னக் குடிசை வாசலிற் தொங்கும்
தூளி முடிச்சு ஒவ்வொன்றும்
எம் துயரம் சொல்லும்.
எழுந்து நின்று சத்தியம் செய்கின்றோம்.
இத்தனைக்குப் பின்பும்
சமாதானத்துக்கு நாங்கள் சாட்சிகளாகின்றோம்.
பேச்சுவார்த்தை மேசைக்குப் போக வேண்டுமா?
அதற்கும் நாங்கள் ஆயத்தம்
'உங்கள் பக்கத்தில் நீதியுளது' என்று
ஓரேயொரு உத்தரவாதம் தாருங்கள்.
எங்கள் கையிருந்து பறிக்கப்பட்ட வாழ்வை
எமக்குப் பெற்றுத்தாருங்கள்.
எங்கள் காலாற நடந்த ஊர்களை
எமக்கு மீட்டுத்தாருங்கள்.
எவரின் வாசலுக்கும் சென்று யாசிக்காத நிமிர்வை
எமக்கு வழங்குங்கள்.
இங்கு வீசும் காற்று எமக்கானதாய்,

— வியாசன் —

# எம் விடுதலையைப் பாடியப
# காற்று வரட்டும்
# மழை வரட்டு
# உலகநாடுகள் ஓடிவரட்

www.tamilarangam.net



பாடும் குருவிகள் எமக்கானதாய்,
பூக்கும் மலர்கள் எமக்கானதாய்,
விளையும் வயல்களும்,
அசையும் நதிகளும் எமக்கானதாய்,
எல்லாம் எமதான வாழ்வைப் பெற்றுத்தாருங்கள்.
நாம் நாமாக வாழ்வோமெனும் நம்பிக்கையை
முதலில் எமக்கு வழங்கச் சொல்லுங்கள்.
நாம் பல்லக்குக்காவிகள் என்ற நினைப்பை
அவர்களை மாற்றச் சொல்லுங்கள்.
ஈழத்தமிழர் ஏதோ இழிபிறப்பென்ற
ஆழப்படிமத்தை அகற்றச் சொல்லுங்கள்.
நாங்கள் கூண்டுப் பறவைகள் அல்ல.
அடையாள அட்டை சுமக்கும் அந்நியரல்ல.
கொல்லவும்,
கொன்று புதைக்கவும்,
வழியிற் பிடிக்கவும்,
வல்லுறவில் வதைக்கவும்
எமக்கெழுதிய விதியை அழிக்கச்சொல்லுங்கள்.
இது எம் தாயின் மடி எம்மைக் கர்ப்பத்தில் சுமந்த
கருக்குழி.
இந்த மண்ணின் ஒவ்வொரு துகள்களிலும்
எம் முந்தையரின் மூச்சுப்படிந்துளது.
இங்கு விசாலித்த மரங்கள் ஒவ்வொன்றிலும்
எம் பரம்பரையின் குருதி செறிந்துளது.
ஓடிவருகின்ற உலக நதிகளே!
நீங்களே முன்னின்று நீதி வழங்குங்கள்.

அவர்களின் பூமியில் ஒரு அங்குலமாயினும்
எமக்கு வேண்டாம்.
அவர்களின் உரிமத்தில் ஒரு துகளளவேனும்
எமக்கு வேண்டாம்.
எமக்கானதை மட்டுமே கேட்கின்றோம்.
தருவதில் அவர்களுக்கென்ன தயக்கம்?
சண்டைக்கும் சமாதானத்துக்குமான
இடைவெளி
ஒரு நூலிழைதான்.
நண்பர்களாகப் பேசலாம்
அல்லது பகைவர்களாகப் போரிடலாம்.
நின்று கைகுலுக்குவதில் தொடங்கும்
மற்றொன்று கவசம் தரிப்பதில் ஆரம்பமாகும்.
நெருப்பில் கருக்கொண்டவர்களை
நெருப்பென்ன செய்யும்?
நண்பரே!
அத்தினாபுரத்துக்குத் தூது போனான்
அனந்தசயனன்.
ஒன்றுமே கிட்டவில்லை
யுத்தத்துக்குத் தேதிகுறித்தான் யுவராஜன்.
குருஷேத்திரத்தில்
அதர்மம் தலைகவிழ தர்மம்
தலைநிமிர்த்தியது.
மீண்டுமிந்த வரலாறா முளைக்க வேண்டும்?
வேண்டாம் ஐயனே!
நாங்கள் பேசவே விரும்புகின்றோம்.
உங்களின் முன்னிலையில்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிமிர்வின் பெருநிலம்

அ.பார்த்தீபன்



நாங்கள் காடுகளுக்குள் துரத்தப்பட்டுவிட்டோம். நகரங்களிலிருந்து மட்டுமல்ல காடுகளுக்குள் வைத்தும் நாங்கள் துரத்தப்பட்டுக்கொண்டே இருப்பதாய் சிங்களம் கூறிக்கொண்டிருந்தது. தமது யாழ்ப்பாணப் பறிப்பின் பின் பெரும்பான்மை மக்களின் தொடர்பை எமது போராட்டம் இழந்துவிட்டதாய் மார்தட்டிக்கொண்டது சிங்களப் படைத் தலைமை. அதனால், தொடரும் போரில் நாம் முற்றாக அழிக்கப்பட்டுவிடுவோம் என அவர்கள் சூழுரைத்தார்கள். எங்களது இறுதி மூச்சை எடுப்பதற்கான காலக்கெடுக்களைக் கூட அவர்கள் நிர்ணயித்தார்கள். இவற்றையெல்லாம் ஒரு எல்லைவரை உலகமும் நம்பிக்கொண்டுதான் இருந்தது.

ஆனாலும், வீழ்ந்துவிடுவார்களென எல்லோரும் பார்த்திருக்க எம்மினம் நிமிர்ந்துகொண்டது. எல்லோரும் ஆச்சரியப்படும்படியாய் எம் எல்லோருக்கும் இப்படியொரு நிமிர்வு எப்படி வந்தது! மற்றவனின் துணையின்றி எழுந்து நடக்கவே முடியாதென்பதே நியதியாகிப்போன இவ்வுலகில் நின்று, எங்களுக்கென்று எவருமே இல்லாது நின்ற மக்கள் நாம் எப்படி நிமிர்ந்துகொண்டோம்! உறுதிகொண்ட எங்கள் தலைவனின் அருகிருந்து எம்மினத்தை நிமிரவைத்த அந்த மாபெரும் சக்தி எது!

வன்னி! அதுதான் அந்த மாபெரும் சக்தியை எமது விடுதலைப் போருக்குத் தந்தது. இந்தப் போரின் அதியுச்சமான வரலாற்றுக்கட்டம் வன்னியில்தான் சுழல்கின்றது. தமிழீழத்தின் அனைத்துப் பிரதேச மக்களினதும் கலவையாய் நிற்கும் வன்னிதான் அதன் சுமையைத் தாங்கிக்கொண்டது. தன் வரலாற்றைப் பறிகொடுத்து வெறுங்கையராய் நின்ற எம்மினத்திற்கு உலக வரலாற்றில் அதியுயர் அத்தியாயங்களைப் பெற்றுக் கொடுத்த போரின் சுமைகளை வன்னியில் வாழ்ந்த மக்கள்தான் சுமந்துகொண்டார்கள். அப்படியொரு நிமிர்விற்காய் எம்மக்கள் இரத்தக் கண்ணீர் வடித்த நாட்கள், நினைவுகளுக்கு எவ்வளவு கடினமானவை.

எங்கள் மக்களை எதிரி என்றைக்குமே புலிகள் இயக்கத்திலிருந்து வேறுபடுத்திப் பார்த்தது கிடையாது. மக்களிலிருந்து புலிகளை வேறுபடுத்தித் தனிமைப்படுத்துதல் என்ற போர்வையில் நின்றுகொண்டு, மக்களையும் புலிகளையும் ஒன்றாகவே உலகிலிருந்து தனிமைப்படுத்த முனைந்தார்களேயன்றி, வேறெதையும் அவர்கள் செய்யவில்லை, செய்ய நினைக்கவும் இல்லை. அதுவும் வன்னியில் வாழும் அத்தனை மக்களையும் அது முழுப் புலிகளாகவே பார்த்தது. அதன் வெளிப்பாடுகள் ஒவ்வொன்றும் அதையே சுட்டிநின்றன.

1999இல் தமக்கு ஏற்பட்ட இராணுவத் தோல்வி ஒன்றிற்காக மந்துவில் கிராமத்தில் குண்டு வீசி சிறுவர்களையும், வயோதிபர்களையும் கொன்று குவித்தபோது, உண்மையை வெளியிட்ட சர்வதேச தொண்டர் நிறுவனத்திற்கு 'உங்களுக்கு மலேரியாவைத் தடுப்பதும், நுளம்புகளையும், பூச்சிகளையும் ஒழிப்பதும்தானே இங்கு வேலை. அதை மட்டும் பார்த்துக்கொண்டு இருங்கள்' என சிறீலங்கா அரசு மிரட்டல் விடுத்திருந்தது. உணவுப்பொருட்கள் தடுக்கப்பட்டு, இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்தையும் சிறீலங்கா அரசு தடுத்தவேளை, உலகெங்கும் சேவைபுரியும் மனித உரிமை அமைப்பிடம் உதவி கேட்டபோது 'உங்களுக்கு உணவுப்பொருட்கள் வழங்குவதற்கு எமக்கு இங்கு அனுமதியில்லை' எனத் தன் இயலாமையை வெளியிட்டிருந்தது. இவை இரண்டையும் மட்டுமே வைத்துப் பாருங்களேன். இப்படியொரு வாழ்வியல் மறுப்பிற்குள் நின்றுதான் வன்னியில் மக்கள் தமது போராட்டப் பழுவையும் சுமந்தார்கள், சுமக்கின்றார்கள்.

உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துத் தமது சுதந்திர தேசத்திற்காய் போராடிய மக்கள் புரிந்த அர்ப்பணிப்புக்கள் புனிதம் வாய்ந்தவை. சோவியத் மக்கள் லெனின்கிராட்டிலும், ஸ்ராலின்கிராட்டிலும் எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டபோது வெளிப்படுத்திய உறுதி, கடந்த நூற்றாண்டின் உலக வரலாற்றில் பெருமையுடன் பேசப்பட்டது. கோடாலிகள், கத்திகளுடன் மக்கள் போர்க்களம் சென்றதும், உண்ண உணவின்றி பட்டினியால் வாடிய மக்கள் தமக்குக் கிடைத்த சொற்ப உணவையும் தேசம் காக்கும் தம் வீரர்களுக்காய் அனுப்பிவைத்துவிட்டு, பசித்திருந்து காத்திருந்ததும், தமது நகரை எதிரி வீழ்த்தும் வேளை வந்தால் தமது வீடுகள், கடைகள், கோவில்கள் எல்லாவற்றையும் தமது கைகளாலேயே அழித்துவிடத் தயாராய் வெடிமருந்துகளைப் பொருத்திவிட்டு காத்திருந்ததும், மனித உணர்வுகளை உலுக்கியெடுக்கும் வரலாறுகள் ஆயின.

வல்லரசுகளின் ஆக்கிரமிப்பிற்குள் சிக்குண்ட வியட்நாம் மக்கள் வயது வேறுபாடின்றி எல்லோருமே ஆயுதமேந்தி பெரும் சக்தியாய் ஒன்றுதிரண்டு போரிட்டதும், கொடிய பட்டினியால் வதங்கிய போதெல்லாம் தமது விடுதலை ஒன்றையே இலக்காக்கி எரித்திரிய மக்கள் பணியாது போரிட்டதும், அடக்குமுறையாளர்களை எதிர்த்துப் போராட வழியின்றித் தவித்த பாலஸ்தீன சிறுவர்களும், பெரியவர்களும் தாமே கிளர்ந்தெழுந்து கற்களால் எறிந்தே எதிரியை கலங்க வைத்ததும், விடுதலைக்காகப் போராடிய எல்லா மக்களையுமே பெருமை கொள்ள வைத்தன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்னியில் எமது மக்களை அவர்களின் வாழ்வியற் சக்தியிடமிருந்து பிரித்தெடுப்பதற்காய் எத்தனை தந்திரங்களையெல்லாம் எதிரி கையாண்டான். கொடுமைகளால் மட்டுமே பணியவைக்கும் தோல்வி கண்ட பழைய தந்திரத்திற்குப் பதிலாய் கவர்ச்சிகரமான சலுகைகளையும்கூடவே கொண்ட புதிய தந்திரத்தால் அல்லவா எமது மக்களை பணியவைக்க முயன்றான். துன்பங்களாலும், வேதனைகளாலும் நிரம்பிய முற்றுகையை வன்னியின் மக்கள் மீது ஏற்படுத்தி மறுபுறம் வசதியான வாழ்வு எனும் சலுகையைக் காட்டி எதிரி எம் மக்களின் ஆன்மதிடத்தின் மீது போர்தொடுத்தான். மீன்பொரியலின் ஈர்த்தெடுக்கும் வாசனையின் பின்னால் எதிரி ஒளித்து வைத்த பொறியை எம் மக்கள் நன்றாகவே இனங்கண்டுகொண்டு, எதிரியையும் அவன் சார்ந்தவர்களையும் வெட்கித்தலைகுனிய வைத்தார்கள். அப்படித்தான் எமது விடுதலைப் பயணத்தை வன்னியில் எம்மக்கள் விரித்துச்செல்ல வேண்டியிருந்தது. எதிரி தன் வலையை மேலும் மேலும் இறுக்கிய படியே இருந்தான்.

'ஜெயசிக்குறுய்' எனும் பெயரில் எதிரி பெரும் படையெடுப்பொன்றை செய்த காலங்கள், வன்னி மக்களின் வாழ்வாதாரமாய் எஞ்சி நின்ற கானகத்து நகரங்களை ஒவ்வொன்றாய் விழுங்கியபடி எதிரியின் 'வெற்றி உறுதி' நீண்டது. இறுதி நம்பிக்கையாய் நின்ற வன்னி மண்ணை எதிரி முழுமையாய் விழுங்கிவிடாதபடி போராளிகள் போரிட்டார்கள். அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, மைத்துனன், சித்தி என ஒரே உறவுகள் தம் தேசத்திற்காய் போராடுவதற்கென புறப்பட்டு வந்தார்கள். அந்தக் காலப்பகுதியில், வன்னி பட்ட துன்ப துயரங்கள் எழுதி மாழாதவை. தமது ஒவ்வொரு பின்னகர்வின் பின்னாலும் தமது மக்கள் சுமக்கப்போகும் வேதனைச் சுமைகளை எண்ணி ஒவ்வொரு புலிவீரனும் கண்ணீர்வடித்தான். அதனால் உறுதிபெற்றான். அத்தனைக்கும் மத்தியில் 'நிவாரண வெட்டு, மக்கள் அவதி' என செய்தி கூறும் பத்திரிகைத் தாள்களில் சுற்றியபடியே மக்கள் தமது வயிற்றையும், வாயையும் கட்டி அனுப்பிவைக்கும் உலருணவுகளை உண்ணும்போதும், அவற்றுள் முகம் தெரியாத தம் மைந்தர்களிடம் சுகம் விசாரித்து அவர்கள் அனுப்பிவைக்கும் கடிதங்களை வாசிக்கும்போதும் ஒவ்வொரு புலிவீரனும் தன் மக்களை எண்ணி பெருமிதம் அடைந்தான்.

எதிரி மாங்குளத்தின் முன்னால் உறுதியாக மறிக்கப்பட்டிருந்தான். அவனது வெற்றி உறுதியற்று தள்ளாடிக்கொண்டிருந்தது. அந்தக்கடின நாட்கள் நீட்சிபெற்று வருடமாய் மாறியது. தேசத்தைக் காக்கும் அந்த உயரிய போர்க்களத்தின் காவலரண்களுள்ளேயே தம் வாழ்வின் ஒரு வயதைக் கழித்திருந்தார்கள் புலிவீரர்கள். மனதிற்குச் சுமை தரும் அந்த யுத்தகளத்திற்கு போராளிகளை அரவணைக்கும் ஆசைகொண்டு மக்களெல்லாம் எழுச்சிகொண்டு, அணிதிரண்டு வருவதாய் செய்திவந்திருந்தது. அதை அறிந்ததும் களத்தில் எம் வீரர்களெல்லாம் அடைந்த ஆனந்தம் எல்லையற்றது. ஆனாலும், அந்தக் கொடியகளம் அன்று எம் உறவுகளின் சங்கமத்தைத் தடுத்தது. போராளிகளை அந்தக் காவலரண்களிலிருந்து அசையவிடாதபடி எல்லா முனைகளிலும் எதிரி தாக்கினான். உயிராபத்துக்கள் ஏற்படக்கூடாது என்ற ஆதங்கத்தில் அணிதிரண்டு வந்த மக்களையெல்லாம் முறிகண்டியில் வைத்தே மறிக்க வேண்டியதாயிற்று. தம் காவற்தெய்வங்களை ஒருபொழுதுகூட பார்க்கமுடியாது பாவப்பட்ட மக்களாய் திரும்பினர். அந்த நாள் எம் மக்களிடையேயும் போராளிகளிடையேயும் ஏற்படுத்திய சோகத்தின் சுமையை உங்களால் புரிந்துகொள்ள முடியுமானால் புரிந்துகொள்ளுங்கள். ஆயினும், வன்னி மக்கள் தம் புதல்வர்களிடம் அன்று வெளிப்படுத்திய நேசமும் பாசமும் எமது போராட்டத்தை ஆயிரம் மடங்குகள் உறுதியாக்கிற்று.

சிறிது காலத்திலேயே களம் இன்னமும் விரிவுகண்டது. தோல்வி உறுதியாய்த் தெரிவதை உணர்ந்த எதிரி புதிய தந்திரங்கள் வகுத்தான். வன்னியின் எல்லாத்திசைகளும் எதிரியின் இலக்குகளாயின. எமது போராட்டம் இன்னமும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. ஒவ்வொரு போராளியும் தன் சக்திக்கு மீறியதாய் பல மடங்கு சுமைகளைச் சுமந்து கொண்டான். தன் புதிய மூலோபாயத்தால் வன்னியால் இனியும் தாக்குப்பிடிக்க முடியாது என எதிரி புதிய நம்பிக்கை கொள்ளலானான். வன்னிப் பரப்பெங்கும் புலிகள் இயக்கத்தின் பலம் பரப்பப்பட்ட நிலையில் அடுத்த கட்டம் நோக்கிய எம் வரலாறு ஏக்கத்துடன் காத்திருந்த காலகட்டம் அது. அப்போதுதான், எதிரியின் கொலை அச்சுறுத்தலையும் தாண்டி மக்கள் களம் நோக்கி வரத்தொடங்கினார்கள். உணவுப்பொருட்களுடனும், களவேலைகள் செய்வதற்காகவும் எல்லாத் தரப்பட்ட எம்மக்களும் களம் வந்து போராளிகளின் சுமைகளைப் புரிந்து கொண்டார்கள். அங்கிருக்கும் போராளிகளிடம் அவைபற்றி தாமே அறிந்துகொண்டார்கள். இவைதான் வன்னியில் பிறப்பெடுத்த அந்த மாபெரும் சக்தியின் ஊற்றுக்கண்ணாய் அமைந்தது.

'எமது தாயகமாம் தமிழீழத்தை, மண் பறிப்பாளர்களிடமிருந்து' எமது மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி, உறுதியெடுத்துக் கொள்ளும் அந்த நிகழ்வுகள் எங்கும் நம்பிக்கை ஒளியாய் பரவத்தொடங்கியது. 'தமிழர் தாகம் தமிழீழத் தாயகம்' என எம்மக்கள் எழுப்பிய கோஷ ஒலி எங்கும் எதிரொலித்த போது, ஒவ்வொரு புலிவீரனும் தன் தோள்கள் பல்லாயிரம் மடங்குகள் வலிமை பெற்று விட்டதாய் உணர்ந்துகொண்டான். அன்றிலிருந்துதான் எமது வரலாறு உயரிய கட்டம் ஒன்றை நோக்கித் திரும்பத்தொடங்கியது. விரைவிலேயே மக்கள் எல்லோரும் முதியவ





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரென்றும், இளையவரென்றும் வேறுபாடுகளின்றி காவல் நிலைகளை நோக்கி அணிவகுத்தார்கள். எம் வரலாறு சுமந்த தியாகி திலீபனின் இலட்சியப் பசி அடங்கும் நாளை அடைந்துவிட்டதாய் உணர்ந்தோம் அன்று. எமது வரலாறு தன் புதிய பக்கங்களைத் திறந்துகொண்டது.

எதிரியால் மோசமாய் சுமத்தப்பட்ட குடும்பச் சுமைகளைச் சுமந்தபடி போராட்டச் சுமைகளையும் முழுமையாய் சுமக்கத் தொடங்கினார்கள் எம் மக்கள். இறுதியில் அதுவும் அவர்கள் வாழ்வின் ஓர் அங்கமாகவே மாறிக்கொண்டது. நாளாந்தம் உழைத்து குடும்பம் நடத்தும் ஒரு குடும்பத் தலைவன் காவல் நிலைகளுக்கு வந்து போராளிச் சகோதரர்களின் சுமைகளைப் பகிர்ந்துகொண்ட கதைகள் முழுமையாய் இதில் எழுதி முடிக்கக் கூடியவைகள் அல்ல. எமது பெண்கள் சமூக வாழ்விலும், களவாழ்விலும் மாறிமாறி ஈடுபடும் புதிய நிலையும், அவற்றால் எழும் சவால்களுக்கு எதிரான அவர்களின் தனியான போராட்டமும் தனியே எழுதப்படவேண்டியவை. எமது மக்களின் இத்தகைய எழுச்சியின் விளைவாய் ஓயாத அலைகள்- 3 என்ற பெரும் சமர் பிறப்பெடுத்தது. அதற்கான அடிப்படையை வன்னி மக்களின் நேரடிக் களப்பங்கேற்பே பூர்த்தி செய்தது.

1999, நவம்பர், 02 எங்களுக்கெல்லாம் பெருமை தந்த நாள் அது. ஒட்டுசுட்டானில் முதற்சமர் வெடித்து வெற்றியுடன் அது தொடர்ந்தபோது, வன்னியே ஓங்கியெழுந்து ஆர்ப்பரித்தது. காவல் நிலைகளில் நின்ற எல்லைப்படை வீரர்கள் பொறுமையிழந்தவர்களாய் ஆயினர். அவர்கள் தடுத்துநின்ற எதிரிகளை இப்போது தேடிச் சென்று துரத்தியடிக்கும் ஆர்வம் அவர்களுள் எழுந்தது. தளபதி தீபனின் கட்டளையில் மாங்குளத்தில் புதிய முனையொன்று திறக்கப்பட்டபோது மூன்றுமுறிப்பில் நின்ற எல்லைப்படை வீரர்களெல்லாம் தாமும் சண்டையிடப்போவதாக ஆரவாரித்தனர். அதனால், அக்களத்தில் அவர்களையும் தவிர்க்கமுடியாது சண்டையில் இறக்க வேண்டியதாயிற்று. பாதுகாப்பு நிலைகளில் எமது சுமைகளைப் பகிர்ந்து கொள்ளவந்த மக்கள் போராளிகளோடு இணைந்து வலிந்த தாக்குதல் களத்தில் முன்னேறிச் சென்றது, எமது போரில் அடுத்த கட்டங்களில் ஏற்படுத்தப்போகும் பிரகாசமான மாற்றங்களைக் காட்டியது.

ஓயாத அலைகள்-3இன் முதற்கட்டத்தில் எல்லைப்படை வீரர்கள் காட்டிய மூர்க்கமும், ஆர்வமும் அச்சமரின் அடுத்தகட்டங்களில் அவர்களுக்கென முக்கிய இடத்தைப் பெற்றுக்கொடுத்தது. சிறப்பு எல்லைப்படைத் தாக்குதல் அணிகள் எமது போராளிகளுடன் இணைந்து முக்கிய களங்களில் சண்டையிட்டன. நவம்பர் 18ஆம் திகதி ஓயாத அலைகள்-3இன் இரண்டாம் கட்டத்தின் போது பெரியமடுவினூடான முனையில் லெப். கேணல் ராபட்டின் தலைமையில் ஜெயந்தன் படையணியுடனும், மற்றைய முனையான பள்ளமடுவில் லெப்.கேணல் லக்ஸ்மனின் தலைமையில் மாலதி, மன்னார் தாக்குதல் அணிகளுடனும் சிறப்பு எல்லைப்படை அணிகள் சண்டையின் முன்னணி நடவடிக்கைகளில் இறக்கப்பட்டன. வெற்றிகளைக் குவித்துத்தந்த அச்சமர்க் களத்தில் ஏனைய படையணிகளைப் போலவே எல்லைப்படை அணிகளும் தமக்குத் தரப்பட்ட பணிகளையெல்லாம் வெற்றிகரமாய் செய்து முடித்தன. அதுபோலவே, ஓயாத அலைகள்- 3இன் மூன்றாவது கட்டத்திலும் எல்லைப் படையின் சிறப்புத் தாக்குதல் அணிக்கான முன்னணித் தாக்குதல் பணிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. லெப். கேணல் ராபட்டின் தலைமையில் ஜெயந்தன், அன்பரசி படையணிகளுடன் இணைந்து அச்சமரின் வெற்றிக்காய் எல்லா முனைகளிலும் அவர்கள் உழைத்தார்கள்.

இவ்வாறு முதிர்ச்சிநிலை நோக்கிப் பயணித்த வன்னி மக்களின் போர்ப்பங்களிப்பும், எழுச்சியும் ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சிக்கான இறுதிக்கட்டச் சமர்களில் காத்திரமான கட்டத்தை அடைந்தது. தமிழர் வரலாறு உள்ளவரை வாழப்போகும் அந்தப் புகழ் பூத்த சமரில் எமது மக்களின் பங்கு பிரித்துப் பார்க்க முடியாதபடி இரண்டறக் கலந்திருந்தது. எமது மக்கள்படைக் கட்டுமானத்தின் மாணவர் படை, கிராமியப் படை, எல்லைப்படையென எல்லாமே இச் சமருக்கான பணிகளில் பங்கெடுத்திருந்தன. நவீன வசதிகளும், சர்வதேச ஆதரவும் கொண்ட சிறீலங்கா அரசே ஆனையிறவுச் சமரில் காயமடைந்த தன் வீரர்களை பராமரிப்பது உள்ளிட்ட பின்னணி வேலைகளை செய்யமுடியாது திணறியபோது, வசதிகள் ஏதுமற்ற வன்னியில் எமக்கான பின் கள வேலைகள் சிரமமின்றி செய்துமுடிக்கப் பட்டமை எவரையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கக்கூடியவை. அதுவும் களத்தில் காயமடைந்த எமது போராளிகளை பராமரித்துப் பாதுகாப்பதில் எத்தகைய குறையுமின்றி எமது மக்கள் ஈடுபட்டார்கள். அவர்களைச் சிரமமின்றிக் களத்திலிருந்து நகர்த்துவதற்காக பாதைகளைச் சீரமைத்து, இரத்த தானம் செய்து, மருத்துவமனைகளுக்கு வந்து பராமரித்து, அவர்களுக்குத் தேவையான உணவுகள் தயாரித்து எமது மக்கள் செய்த உயரிய பணி எம் போராளிகளிடையே ஆழ்பதிவுகளை ஏற்படுத்தியது. அந்த நாட்களில், வன்னி மக்கள் முழுமையாய் போர்ப் பணிகளிலேயே ஈடுபட்டிருந்தார்கள். இவற்றைவிட அந்தச் சமரின் கடினமான களமொன்றில் எல்லைப்படையின் சிறப்பு அணியொன்று போரிட்டுக்கொண்டிருந்தது.

உலக வரலாற்றிலேயே முக்கிய இடம் பிடித்த ஆனையிறவுச் சமரின் ஊடறுப்பு நடவடிக்கையில் (இத்தாவில்) சிறப்பு எல்லைப் படை வீரர்களின் பங்கு வன்னி மக்களின் பெருமையின் சிகரமாய் ஆனது. சமருக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயமே, சிறப்பு எல்லைப்படை வீரர்கள் தமது குடும்பங்களை நீண்ட எல்லையில் பிரிந்து வந்து உயர் சண்டைப் பயிற்சிகளில் ஈடுபட்டார்கள். எமது முன்னணிப்படையணிகளின் ஓர் அங்கமாகவே சிறப்பு எல்லைப்படையின் அணியும் இணைக்கப்பட்டது. சிங்களத்தின் முன்னணிப் படையணிகளையே திணறவைத்து தோற்கடித்த அச்சமர்க்களத்தில் சிறப்பு எல்லைப்படை வீரர்கள் சளையாது சமரிட்டதும், அதற்காய் தமது உயிர்களை அர்ப்பணித்ததும், வரலாற்றின் சிறப்பான அம்சங்கள். ஆரம்பத்தில் எல்லைப்படை வீரனாய் களம் புகுந்து அச்சமர்க்களத்தில் முழுமையான போராளிகளாய் மாறியவர்களும், எமது போராளிகளையே வழிநடத்தும் அணித் தலைவனாய் அக்களத்திலேயே செயற்பட்ட மாவீரன் கப்டன் லோறன்சின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

# எல்லையின் பெருநிலம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படித்தான் வன்னி மக்களின் முழுமையான போர்ப்பணி வளர்ச்சி கண்டது. எல்லைப்படையில் சண்டைத்தேர்ச்சி மிக்க அணிகள் உருவாகின. எம்மால் திட்டமிடப்பட்ட சண்டைகளில் மட்டுமல்ல எதிரியால் திட்டமிடப்பட்டு நடாத்தப்படும் சண்டைகளை முறியடிப்பதிலும் சாதனை படைக்கக்கூடிய தமது ஆற்றலை, 2000 செப்ரெம்பர் ஒன்பதாம் நாள் நடந்த கடுமையான பாதுகாப்புச் சமரரங்கு ஒன்றில் நிருபித்தனர்.

அன்று அதிகாலை 5.10 மணி 'ரிவிகிரண' என்ற பெயர் சூட்டி, புதிதாய் கொள்வனவு செய்த நவீன விமானங்கள், பீரங்கிகள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டி அரியாலை, தென்மராட்சிப் பகுதிகளில் ஐந்து முனைகளினூடு மிகப்பெரும் நடவடிக்கையொன்றை எதிரி எடுத்தான். இறுதியில் 250ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 1000இற்கு மேற்பட்டோர் காயமடைந்தும் சிங்களப் படைகளுக்கு படுதோல்வியைக் கொடுத்த அந்நடவடிக்கையின் முறியடிப்பிற்கு தலைமை தாங்கிய தளபதி கேணல் சொர்ணம் அவர்கள் சொன்னவை எமது மக்களுக்கு பெருமை சேர்க்கும் வார்த்தைகள்.

'எதிரியின் கடுமையான ஆயுத வலுவுடன் நடாத்தப்பட்ட யுத்த களத்தில் எமது போராளிகள், அணித்தலைவர்கள் காட்டிய நிதானமும், உறுதியுமே அவர்களின் வீரத்திற்கு வெற்றியைத்தந்தது. அதிலும், குறிப்பாக எங்கள் எல்லைப்படை, சிறப்பு எல்லைப்படை வீரர்களின் போராற்றல் இத்தனை தூரம் வளர்ந்திருப்பது வியப்பையும், பெருமையையும் தந்தது. அவர்களின் ஆற்றல் இதில் முழுமையாக நிருபிக்கப்பட்டன என்றுதான் நான் சொல்வேன்' இப்படியேதான் அங்கு தொடர்ந்த மற்றும் பல கடுமையான சமரரங்குகளில் வைத்துத்தான் எமது எல்லைப் படை வீரர்களின் வீரமும், தியாகமும் நிறைந்த எண்ணற்ற அர்ப்பணிப்புக்கள் நிகழ்ந்துமுடிந்தன. அவை தனியே எழுதப்படவேண்டிய உணர்வை உலுப்பும் நீண்ட பக்கங்கள் கொண்டவை.

இவ்வாறு விடுதலைக்கான போர்க்களத்தில் வன்னியில் எமது மக்களின் போர்ப்பங்களிப்பு அதிசயிக்கவைப்பது இத்தகைய களங்களில் எம் மக்கள் சிந்திய குருதி புனிதம் நிறைந்தது. அர்த்தங்கள் பொதிந்தது. எண்ணிப்பார்ப்பதே எவருக்கும் கடினமாய் இருக்கும். இவ்வளவு தீவிரமாய் விடுதலைப் போரை தாங்கி நிற்கும் எம் மக்களின் தேசப்பற்றை அறிய எவருக்கும் ஒரு பெருமைதோன்றும். அத்தனை தூரம் விடுதலை வேண்டி நிற்கும் ஒரு மக்களினம் கொண்டிருக்கவேண்டிய தகுதிப்பாட்டை இன்று எமது மக்கள் எட்டி நிற்கின்றார்கள்.

இப்போது எண்ணிப்பார்க்கின்றோம். எங்களைக் காடுகளுக்குள் துரத்திவிட்டதாக சிங்களம் எக்காளமிட்ட நாட்கள், எங்களின் இறுதி மூச்செடுப்பிற்கான காலக்கெடுக்கள் இவற்றிலெல்லாம் இறுதி முடிவுகாண எதிரி நம்பிக்கையுடன் செய்த ஜெயசிக்குறுய் நடவடிக்கை, இவையெல்லாம் எதிரியின் வெறும் பகற்கனவுகளாய் எவ்வாறு அர்த்தமிழந்து போயின? எமது போராளிகளின் வைராக்கியமும், வன்னி மக்களின் முண்டு கொடுப்பும் இறுதியில் அவர்களின் எழுச்சியால் உருவான எல்லைப்படையணிகளின் போர்ப்பங்கெடுப்பும், எம் தலைவனின் கரங்களைப் பலப்படுத்த எதிரியின் கற்பனைகளெல்லாம் 'கடற்கரையில் கட்டிய மண்வீடுகள்' போலாகின. ஒரு இனத்தின் விடுதலைப்போரை அழிப்பதென்பது அந்த இலட்சியத்தைச் சுமந்தவர்களின் உயிருள்ளவரை முடியாதென்பதை உலகிற்கு ஒருபாடமாக வன்னி மக்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொங்குதமிழ் நிகழ்வையொட்டி பல்கலைக்கழக வாயிலில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த, தமிழராக இருந்து கொண்டு தமிழரழிப்புக்கு உறுதுணையாக விளங்கும் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொடும்பாவி நிகழ்வின் இறுதியில் பல்கலைக்கழக மாணவர்களால் எரியூட்டப்பட்டது.

உணர்வெழுச்சியுடன் பொங்குதமிழ் நிகழ்விற்காக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்றலில் திரண்டு நிற்கும் பல்கலைக்கழக சமூகம்.



உணர்வெழுச்சியுடன் பொங்குதமிழ் நிகழ்விற்காக கி
நிற்கும் பல்கலைக்கழக சமூகம். இம்மைதானத்தில் ெ
சிங்களப்படைகளால் இழுத்துச் செல்லப்பட்டு படுகொலை
தடவையாக பல்கலைக் கழக மைதானம் உரிமை கேட்டு



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொங்குதமிழ் நிகழ்விற்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் சுதந்திரச்சுடரினை ஏற்றும் பதில்துணைவேந்தரும், மாணவர்களும்.





பொங்குதமிழ் நிகழ்வின் போது உரையாற்றும் கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எம்.எஸ் முத்தையா.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடக்கில் இருந்து கிழக்கு வரை ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் உணர்வாகப் பிரவாகித்த "பொங்குதமிழ்"

20.02.2001



...குப் பல்கலைக்கழகத்தின் முன்றலில் திரண்டு ...த்துத்தான் 1990 செப்டெம்பரில் 160 தமிழர்கள் ...செய்யப்பட்டனர். இச்சம்பவத்தின் பின்னர் முதல் ...றப்பட்ட மக்கள் திரளால் நிரம்பி வழிந்தது.

"நாம் ஆயுத வெறிபிடித்த பித்தர்களல்ல, சமாதானத்தினை நேசிக்கின்ற மனிதநேயமுள்ள, மனித உரிமைகளை மதிக்கின்ற மானிடவர்க்கமாகும். நாம் நேசிக்கின்ற சமாதானம் எமது அபிலாசைகளாகிய சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ் மக்கள் தனித்துவமான தேசிய இனம் என்பனவற்றை அங்கீகரிப்பதாக அமைய வேண்டும். இச்சமாதானத்தினை அடைவதற்காக எமது முழுச்சக்தியையும் பயன்படுத்த சித்தமாக உள்ளோம். பொங்குதமிழ் எமது உள்ளக்குமுறல். இது அடங்கும்வரை நாம் பொங்கிக் கொண்டேயிருப்போம்"

*20.02.2001 அன்று கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தார் நடத்திய பொங்குதமிழ் நிகழ்வின் போது வெளியிடப்பட்ட பிரகடனத்தில் இருந்து....*

## பொங்குதமிழ் நிகழ்வில் எழுப்பப்பட்ட கோசங்கள்

*தேரோக்களே பஞ்சசீலக் கொள்கையில் தமிழர் உயிர் குடிப்பதும் ஒரு விரதமா?
*ஐக்கிய இராச்சியமே நீ எம்மிடம் கைப்பற்றிய எமது மரபுவழித் தாயகம் எங்கே?
*சுதந்திரம் எமது பிறப்புரிமை.
*தமிழர்களின் அபிலாசை மரபுவழித் தாயகம்.
*அரசே வன்முறைகளை உடன் நிறுத்து. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு.
* விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளல்ல. தேசிய விடுதலை அமைப்பு.
* பிரித்தானியா புலிகளைத் தடைசெய்யவேண்டாம்.





நிகழ்வில் எழுச்சி உரையினை வழங்கும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்.






↑ கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொங்குதமிழ் நிகழ்ச்சிக்கு ஆதரவாக திருமலை மாவட்ட பட்டதாரிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் திருமலை இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்ட சர்வமதகுருமார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# பிரிட்டனின் விருப்பு என்ன?

"இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமாக தீர்வுகாணும் சந்தர்ப்பத்தைப் பாதிக்கக்கூடிய நட வடிக்கை எதையும் மேற்கொள்ளுதல் வேண்டாம்" எனப் பிரிட்டிஸ் பிரதமரிடம் திருமலையைச் சேர்ந்த முன்னணிப் பிர முகர்கள் நூறுபேர் மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான கோரிக்கை ஒன்றை பிரிட்ட னுக்கு விடும் முதல் தொகுதியினர் அல்ல இவர்கள். ஏற்கனவே பல்வேறு மட்டங்களில் இருந்தும் இவ்வாறான கோரிக்கைகள் பிரிட் டனுக்கு விடப்பட்டுள்ளன. இம்மாத மத்தி யில் பிரிட்டன் அறிவிக்கின்ற தடை செய்யப் படும் அமைப்புக்களின் பட்டியலில் விடுத லைப் புலிகளை சேர்த்துக் கொள்ளுதல் கூடாது என்பதே இவ்அனைத்து மகஜர் களினதும் அடிப்படையாகும்.

இவ்வாறு இடம்பெறுதல் கூடாது என் பதற்குப் பல காரணிகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. தமிழ் மக்களின்- அதாவது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் நியாயப்பாடானது என்பதும்- இலங்கையில் இன்றுள்ள இன நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் பிரிட்டனுக்கும் தார்மீகப் பொறுப்பு உண்டு என்றரீதியிலும் வலு வான காரணிகள் தெரிவிக்கப்படுவதோடு, இலங்கை இனப் பிரச்சினைக்குச் சமா தானத் தீர்வு ஒன்று ஏற்படுவதற்குத் தடை யாக பிரிட்டனின் அறிவிப்பு இருந்துவிடக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டன் விடுதலைப் புலிகள் அமைப்பு மீது கொண்டு வரும் தடையானது இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கொண்டு வரும் சக்தி உள்ளது என யாராவது நம்புவார்களேயானால் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும்- விடுதலைப் புலிகள் குறித்தும் எதனையும் புரிந்து கொள்ளாதவர்களாகவே இருக்க முடியும். ஏனெனில், விடுதலைப் புலி களும், தமிழீழப் போராட்டமும் பிரிட்டனை நம்பித் தொடங்கப்பட்டதும் அல்ல. பிரிட்ட னின் உதவி எவையும் புலிகளுக்கோ, தமிழ் மக்களுக்கோ இது வரையில் கிடைத் ததும் இல்லை.

பிரிட்டனைப் பொறுத்து, அங்கு மக் களுக்குக் கிடைத்துள்ள கருத்துச் சுதந்திரத் தின் அடிப்படையில், விடுதலைப் புலிகளும் அங்கிருந்து தமது கருத்துக்களை வெளி யிடுவதற்குக் கிடைத்துள்ள அனுமதி மட் டுமே பிரிட்டனில் கிடைக்கும் அனுகூல மாகும். இதற்குக்கூட இன்றைய நிலை யில்- அதாவது உலகம் அடைந்துவிட்ட மாபெரும் தொடர்பூடக வளர்ச்சியினால் பிரிட்டனைத் தங்கியிருத்தலின் முக்கியத் துவம் குறைந்துள்ளது என்றே கூறலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யுமாறு பிரிட்டன் மீது சிறீலங்கா அரசு பெரியளவிலான இராஜந்திர அழுத் தத்தைக் கொடுத்து வருகின்றது என்பது வெளிப்படையானது. பிரிட்டனுடனான இராஜீக உறவையே இவ்விடயத்தில் பணய மாக வைக்கும் நிலைக்கு சிறீலங்கா சென்றுள்ளது என்பதை ஆட்சியாளர்களின் பேச்சக்களே வெளிப்படுத்துபவையாக உள்ளன.

இதேசமயம், பௌத்த-சிங்கள அடிப் படைவாத அமைப்புக்கள் வன்முறை மூலம் எச்சரிக்கை விடுத்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளன. அவர்களின் எச்சரிக் கையானது பிரிட்டன் விடுதலைப் புலிகளை தடைசெய்யாதுவிடில் சிறீலங்காவில் பிரிட் டனின் நலன்கள் பாதிக்கப்படும் என்பதை உணர்த்தும் நோக்கிலானவையாகவுள்ளன.

ஆனால் இவை இரண்டும்- அதாவது ஆட்சியாளர்களின் இராஜதந்திர அழுத் தமும், அடிப்படைவாதிகளின் வன்முறை ரீதியிலான எச்சரிக்கைகளும், அத்துமீறிய செயற்பாடுகள் மட்டுமல்ல, பிரிட்டனை அழுத்தத்திற்கு உள்ளாக்கி தீர்மானங் களை மேற்கொள்ளவைக்கும் நோக்கம் கொண்டவையாகும்.

இந்நிலையில் பிரிட்டன் எத்தகைய தீர் மானங்களை எடுத்தல் என்பது அவர்களின் முடிவாகவே இருக்கும். ஆனால், பிரிட்டன் புலிகளைத் தடைசெய்வதாகத் தீர்மானம் எடுப்பின் அது இலங்கைத் தமிழ் மக்கள் விவகாரத்தில் மீண்டும் ஒரு தடவை தவ றான முடிவொன்றை எடுத்ததாகவே தமிழ் மக்களினால் பார்க்கப்படுவதோடு பிரிட்டன் மீதான நம்பிக்கையை அவர்கள் முற்றாக இழக்கவேண்டி வரும்.

இதனைத் தவிர, இவ்வாறான தடை அறிவிப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக்காணும் முயற்சி களுக்குக்கூட குந்தகம் ஏற்பட்டு விடுதல் கூடும். ஏனெனில், விடுதலைப் புலிகள் மீதான தடை மூலம் பிரிட்டன் தமிழ் மக் களின் பிரச்சினையில் சிறீலங்கா சார்பு நிலைப்பாடு ஒன்றை எடுக்கையில் அது யுத்தத்தையே ஆதரிப்பதாக அமைந்து விடும். இதனால் அரசியல் தீர்வு விடயத் தில் சிறீலங்கா மேலும் பின்னடிப்புக்களை யும் தாமதங்களையும் செய்வதற்கும்- யுத் தத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் வாய்ப்பாகிவிடும். இந் நிலையில் பிரிட் டன் புலிகளைத் தடைசெய்யுமாயின் அது யுத்தத்திற்குச் சார்பான சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கையாக இருக்கும் என்று கூறுவது தவறாகாது.






www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# சித்தாந்த உறவு?

இராஜதந்திர சித்தாந்தத்தில் 'நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை' என்பது முக்கியமானதொரு கோட்பாடு. இதற்கு ஏற்பவே உலகநாடுகளின் வெளியுறவுக் கொள்கைகளும் உருவாக்கப்படுகின்றன, மாற்றம் அடைகின்றன. இந்த வகையில், அமையப்பெற்றதே சிறீலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான தற்போதைய உறவுமாகும்.

ஆனால், அடிப்படையில் பகை உணர்வும், அவநம்பிக்கையும் கொண்ட இரு தேசங்கள் இராஜதந்திரரீதியில் நட்புறவு கொண்டவையாக மாறுவதும், அரசியல் உயர்மட்டத்தில் வரித்துக்கொள்ளும் உறவுகள் அடிப்படையில் இரு தேசங்களுக்கு இடையிலான நட்பையும், நல்லெண்ணத்தையும் வளர்த்துக்கொள்ளுமா என்பதுவும் சந்தேகத்திற்குரியதே.

அவ்வாறு இருக்குமானால் இந்தியா குறிப்பாகத் தமிழக மீனவர்கள் மீது சிறீலங்காக் கடற்படையினர் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வரமாட்டார்கள். இதன் விளைவாக, இந்திய மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் சிறீலங்காவுடனான இராஜீக உறவுகளை முறித்துக்கொள்ளுமாறு கோரும் நிலையும் ஏற்பட்டிருக்கமாட்டாது.

சிறீலங்காவைப் பொறுத்து, அதன் 52 வருடகால 'சுதந்திர' வாழ்வில் சீனாவும், பாகிஸ்தானுமே நிரந்தர நண்பர்கள். அதாவது, இந்தியா தனது 'நமது எதிரிகள்' எனப்பட்டியல் இட்டுள்ள தேசங்களில் ஒன்று ஆகும். அண்மைக்காலத்தில் இந்தியாவுடன் சிறீலங்கா, தான் நெருங்கிச் செல்வதாகக் காட்டிக்கொண்டாலும் இந்தியா மீது சிறீலங்கா நம்பிக்கை கொண்டதாக இருக்கவில்லை. இந்திய-சிறீலங்கா நட்பானது புவிசார் அரசியலினால் பெரும்பாதிப்பிற்கு உள்ளானதொன்றாகும்.

இந்தியாவைப்பொறுத்து சிறீலங்கா எப்பொழுதும் எச்சரிக்கை கலந்த முறையிலேயே நடந்து வந்துள்ளது. பிராந்திய வல்லரசுடன் பகைத்துக் கொள்ளுதல்கூடாது. அதிலும் இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று முனைப்புப் பெற்றதாக நடந்து கொண்டிருக்கையில், இந்தியாவுடன் பகைத்துக் கொள்ளுதல் சிறீலங்காவுக்கு அனுகூலமானதாக மாட்டாது. மாறாக அபாயங்கள் விளைவதற்கே சாத்தியங்கள் உண்டு.

இந்நிலையில்தான், இந்தியாவுடன் நெருக்கமானது போன்றதொரு உறவை வைத்துக்கொள்ள சிறீலங்கா அரசு முற்படுகின்றது. அவ்வாறு இல்லாது உளப்பூர்வமானதொரு நட்புறவு சிறீலங்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையில் இருக்குமானால் தமிழக மீனவர்கள் மீது சிறீலங்காக் கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி அவர்களுக்கு உயிர்ச் சேதத்தையும், பொருட் சேதத்தையும் விளைவிக்கமாட்டார்கள்.

மேலும், இவ்வாறான தாக்குதல்கள் தவறுதலாகவோ அன்றிப் புரிந்துகொள்ள முடியாமலோ நடத்தப்படுவதில்லை. அத்தோடு, எதிர்ப்புக்கள் காட்டப்படுவதினாலே நடத்தப்படுபவையுமல்ல. தமிழக மீன்பிடிப் படகுகள் எனத் தெரிந்துகொண்டும் நடத்தப்படுபவையாகும்.

தமிழக மீனவர்கள் தமது கடல் எல்லைகளை மீறி இலங்கையின் கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பது உண்டுதான். ஆனால், அதற்காக துப்பாக்கிச்சூடு நடத்துவதென்பது அடிமட்டத்தில் உள்ள பகை உணர்வின் வெளிப்பாடே ஒழிய வேறில்லை. ஏனெனில், சிறீலங்காவின் கடற்பரப்பிற்குள் தனியாக இந்திய-தமிழக மீன்பிடிப்படகுகள் மட்டும் தான் பிரவேசிக்கின்றன என்பதல்ல. ஜப்பான், தாய்வான், தாய்லாந்து, இந்தோனேசிய மீன்பிடிக் கப்பல்கள்கூடப் பிரவேசித்துள்ளன. ஆனால், சிறீலங்கா ஆயுதப்படை அவற்றின் மீது ஒருபொழுதுமே தாக்குதல்கள் நடத்தியதாக இல்லை.

இந்நிலைக்கு அடிமனதில் ஊறிப்போயுள்ள பகை உணர்வும், இந்தியா இவ்விடயத்தில் காட்டும் அசமந்தப் போக்குமே காரணமாகும். அதாவது, இந்திய அரசியல்வாதிகள் தேசம், மக்கள் என்பதை விடுத்துத் தமது நலன் எனச் செயற்படுவதன் காரணத்தினாலேயே இவ்வாறான அத்துமீறல்களை அவர்களினால் கண்டுகொள்ள முடிவதில்லை.

சிறீலங்கா அரசு இந்தியாவை நட்பு நாடாகக் காட்டிக்கொள்ளவோ அன்றி அதன் பொருளாதார நலன்கள் சிலவற்றிற்கோ ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கலாம். ஆனால், இவையாவும் நிர்ப்பந்தத்தின் பாற்பட்டதாகும். இந்தியாவிற்கென தனித்துவமாகச் செய்யப்பட்டவையல்ல. சிறீலங்காவின் ஒட்டுமொத்தக் கொள்கை மாற்றத்தின் விளைவேயாகும்.

ஆகையினால், அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, எதிரியும் இல்லையென்ற சித்தாந்த அடிப்படையில் உள்ள நட்புறவானது, எத்தகைய நிரந்தரமானது என்பதை ஒரு பிராந்திய அல்லது சர்வதேச நெருக்கடி ஒன்றின் போதே புரிந்துகொள்ள முடியும். ஏனெனில், அவ்வாறானதொரு நெருக்கடியின்போது இராஜதந்திர உறவுகளின் சித்தாந்தங்களைவிட உணர்வுபூர்வ நட்புக்கள் வெளிப்பட்டுவிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தமும் சிங்களத்தின்



கவியழகன்

சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளை சமாதான வழி முறைக்கு எதிரானவர்களாகவும், யுத்தமோகம் கொண்டவர்களாகவும், சமாதானத்தை அடைவதற்கு தடைச்சக்தியென்றும் பிரச்சாரப்படுத்திவந்த சந்திரிகா அரசின் அகமுகம், அது அளிக்கும் வியாக்கியானங்களுக்கு அப்பால் உறுதியான தளத்தில் அம்பலப் பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பும், அரசு அதனை உடனடியாகக் கையாண்ட விதமும் நிரூபித்துள்ளது.

சந்திரிகா அரசு தனது ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளை சர்வதேச மட்டத்தில் அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்துவதென்பதில் மிகத் தீவிரமாக இயங்கிவந்தது. அதில் அரசு முன்னேற்றம் கண்டு வந்ததாகவே நம்பப்பட்டது. அரசின் இம்முயற்சிக்கு 'விடுதலைப் புலிகள் சமாதான விரும்பிகளல்ல, சமாதானம் மூலம் தமிழரின் பிரச்சினை தீர்க்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை, யுத்தத்தை நிறுத்தவோ, நிபந்தனையற்ற பேச்சுக்களில் ஈடுபடவோ அவர்கள் தயாரில்லை, இவர்கள் சமாதானத்தீர்வுக்கான தடையாக உள்ளனர், எனவே, சமாதானத்தை நிலைநாட்ட இவர்கள் மீதான யுத்தம் அவசியமானது, அதுவே 'சமாதானத்திற்கான யுத்தம்' என தனது யுத்தவாதக் கொள்கைக்கு அபத்தமான தர்க்கீக விளக்கமளித்திருந்தது அரசு. இதன் மூலம் தமிழ் மக்கள் மீதான இராணுவ மேலாதிக்கத்திற்கு 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற நியாயப்பாட்டையும், அதற்கான சர்வதேச ஆதரவையும் உதவியையும் பெற்றுவந்தது சந்திரிகா அரசாங்கம்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் வழிநடத்தப்பட்ட ஓயாத அலைகள்- 3 வெற்றியின் பிற்பாடு, விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள இராணுவத்தால் முடியப்போவதில்லை என்ற யதார்த்தம் சர்வதேசத்தினால் விளங்கப்பட்டது. அதன் பின்னான அரசியற் சூழலில் ஐரோப்பிய ஒன்றியமும், மேற்கு நாடுகளும் இரு தரப்பையும் சமாதான முயற்சியிலீடுபடுமாறு அழைப்புவிடுத்தன. நோர்வேயின் சமாதான முயற்சியில், அதன் விசேட பிரதிநிதியான திரு. எரிக் சொல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஆகிய இருதரப்புத் தலைவர்களையும் சந்தித்து, அவர்களின் நிலைப்பாடு தொடர்பாக பேச்சு நடாத்தினார். தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் எமது நிலைப்பாடு தொடர்பாக நோர்வே பிரதிநிதிக்கு எடுத்து விளக்கப்பட்டதோடு, தனது மாவீரர்நாள் உரையில் ஒரு இயல்புச்சூழலில், நல்லெண்ணப்புற நிலையில், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் ஈடுபட நாம் தயாரென அழைப்பும் விடுத்திருந்தார்.

சமாதானத் தீர்வில் ஆர்வங்கொண்ட அனைத்துத் தரப்பினரையும் இது நம்பிக்கை கொள்ளவைத்திருந்தது. விடுதலைப் புலிகளின் இவ்வறிவிப்பு திருப்தியளிப்பதாக சமாதான ஆர்வலர்கள் அறிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அரசு இவ்வறிவிப்பிற்கு ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை எடுப்பதை விடுத்து குழப்பியடிப்பதிலேயே முனைப்புக் காட்டியது. விடுதலைப் புலிகளின் அறிவிப்பில் தமக்கு குழப்பம் இருப்பதாக அது குட்டையைக் குழப்பியது. அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களும், தலைவர்களும் ஒன்றுக்கொன்று முரணான நிலைப்பாடுகளையே வெளிப்படுத்தினர். சமாதானம் பற்றிய பேச்சுக்களும், முயற்சிகளும் நோர்வே அரசின் ஈடுபாட்டுடன் நிகழும் இக்காலப்பகுதியில் அரசதரப்போ தமிழ் மக்களை அச்சுறுத்துவதான நடவடிக்கையில் ஈடுபட்டது. புனர்வாழ்வு முகாமான பிந்துநுவெவ படுகொலை, சிங்களத்தின் நீண்டநாள் ஆயத்தப்படுத்தலாகவும், திட்டமிட்டரீதியிலும், சிறை அதிகாரிகளே சம்பந்தப்பட்ட வகையிலும் ஆயிரக்கணக்கானோர் பங்கெடுத்ததாகவும் நிகழ்ந்தது. தொடர்ந்து கடற்படையினரால் 21.11.2000 அன்று திருகோணமலை கோபாலபுரத்தில் நிகழ்ந்த படுகொலையும், படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த நபர்கள் மீதான 13.12.2000 அன்றைய படுகொலையும், அதன்பின் மிருசுவிலில் புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் இனங்காணப்பட்டதும், அதை எடுக்க முயன்றவர்களை இராணுவ அதிகாரிகள் உட்பட்ட படையினர் படுகொலைசெய்து, புதைத்ததுமாக அரசின் படுகொலை இக்காலப் பகுதியில் விரிவடைந்தது. இயல்புச்சூழல் ஒன்றை ஏற்படுத்தாது, பிரச்சினையின் அடிப்படைகள் பற்றிய பேச்சுவார்த்தையில் ஈடுபடமுடியும் எனக்கூறும் அரசினுடைய சமரசப் பேச்சுக்கான நல்லெண்ணப்புறநிலையாக, பரஸ்பர நம்பிக்கையைக் கட்டிவளர்ப்பதாக இச்செயற்பாடுகளில் இவைமட்டுமே வெளிக்கிளம்புகின்றன.

நோர்வே பிரதிநிதி திரு. எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்தித்தபோது, போர்நெருக்கடி தளர்ந்து, இயல்புநிலை தோன்றுவதற்கு இருதரப்பிலிருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென சில யோசனைகளைத் தெரிவித்திருந்தார். 'இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலனை செய்துவருகின்றோம்' எனக்கூறிய தலைவர் அவர்கள் 'அதற்கான முன்முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்' எனத் தெரிவித்திருந்தார். ஆனால், அரசதரப்பிடமிருந்து வெளிப்படும் செயல்பூர்வமான சமிக்ஞைகள் கசப்பான அலைகளையே உருவாக்குவதாயுள்ளன.

ஆயினும், சமாதான வழிமுறைக்கு நாம் எதிரானவர்களல்ல என்பதையும், அதில் நாம்கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தவும், நோர்வேயின் ஈடுபாட்டுடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியிலான தீர்வு எட்டப்பட வேண்டுமென்ற மேற்குலக முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாயும், தலைவர் அவர்களால் ஒரு மாதகால ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. ஆனால், அரசாங்கமோ உள்நோக்கங்களின் அடிப்படையில் அதுபற்றிய தீவிர பரிசீலனையின்றி யுத்தநிறுத்தத்தை மறுத்து அறிக்கை விடுத்தது. ஆனாலும்கூட, விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணப் புறநிலையை கட்டிவளர்க்கும் பொருட்டு யுத்தநிறுத்தத்தை தாம் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாகவும், அரசை இதுதொடர்பாக மீள்பரிசீலனை செய்யுமாறும் கோரிக்கைவிடுத்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நயவஞ்சகமும்

தனர். ஆனால், அரசு அதற்குப் பாதகமான முடிவை வெளியிட்டு, தனது பலத்தால் சாதிக்க முடியாதுபோன யுத்தவாத முன்னெடுப்பிற்கு புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை தனக்குச் சாதகமான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டது.

முழு அளவிலான போரின் விரிவாக்கமாக புலிகள் ஓயாத அலைகள்- 3 மீட்புச்சமரை நடத்தியபோது சிறிலங்கா இராணுவத்தின் படைவலு சிதைவடைந்தது. இராணுவ ஆளணியில் பெரும் வீழ்ச்சியேற்பட்டதோடு படைத்துருப்பினர்கள் தாக்கும் மனநிலை இழந்தவர்களானார்கள்.

படைத்தலைமையால் ஒரு தாக்குபலத்தைக் கொண்ட அணிகளாக அவற்றை மீளொழுங்குபடுத்த முடியாமலேயே இருந்தது. புலிகளால் மீட்கப்பட்ட பரந்துபட்ட நிலப்பரப்பை மீளக் கைப்பற்றும் முயற்சியிற்கூட படைத்தரப்பால் ஈடுபடமுடியவில்லை. பின், தென்மராட்சியில் ஒரு புறப்படு தளப்பிரதேசத்தை புலிகள் ஏற்படுத்திக் கொண்டதோடு, நிறுத்தப்பட்ட ஓயாத அலைகள்- 3இன் முடிவுநாளிலிருந்து ஐந்து மாதகாலமாக தனது திரட்டக்கூடிய படைவலுவைக் கொண்டு, புதிய ஆயுதபலத்தோடு செய்த பல இராணுவ நடவடிக்கைகளாலும் இராணுவத்தால் அத்தளப்பகுதியை மீளக்கைப்பற்ற முடியாமல்போனது. அவையெல்லாமே இலக்கில் வெற்றியீட்டமுடியாத நடவடிக்கைகளாகவே முடிவடைந்தன. யாழ்ப்பாணத்தின் ஆக்கிரமிப்பிற்கு உடனடி அச்சுறுத்தலான புலிகளின் இத்தளப்பகுதியை இல்லாதொழிப்பதற்கான அந்நடவடிக்கைகள் வெற்றியீட்டாததோடு, பெரும் ஆளணி இழப்பையும் சந்திக்க நேர்ந்தது. ஆனால், தனது பலவீனத்தின் நிரப்பீட்டிற்கு புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பை சாதகமாக்கி தனது இலக்கில் வெற்றியீட்ட இராணுவம் முடிவுசெய்தது.

ஓயாத அலைகள்- 3ஐத் தொடர்ந்த காலப்பகுதியில் இராணுவீதியில் புலிகளே தொடர்ந்தும் முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும், வலுவையும் கொண்டிருந்தனர். அரச படைகளோ முற்றுமுழுதாகவே ஒரு தற்காப்பு நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தன. தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டியவர்களாகப் படைத்தரப்பே இருந்தது. வடக்கில் இராணுவத்தின் அனைத்து நிலைகளும் தாக்குதல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்தன. எனவே, இராணுவம் தனது வலுவை, தாக்குதலுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் தற்காப்புச் சமரில் பயன்படுத்தவேண்டியதாய் இருந்தது. அதிலும், குறிப்பாக, யாழ்ப்பாணம் புலிகளின் அரசியல், இராணுவ இலக்காக இருக்கும் என்பதாலும், புலிகளின் யுத்த வியூகத்தாலும் யாழ்ப்பாணத்தின் இராணுவ நிலைகளே பெருமளவு தாக்குதல் அச்சுறுத்தலை எதிர்கொள்ளவேண்டியிருக்கின்றது என இராணுவம் விளங்கியிருந்தது.

அரியாலை, கொழும்புத்துறை, கோப்பாய், கனகம்புளியடி, புத்தூர், சாவகச்சேரி மற்றும் கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் என்பவற்றுடன் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பிரதேசங்கள் என்பனவும் புலிகளின் முன்னேற்றம் அமைவதற்கான வாய்ப்புள்ளதாக படைத்தரப்பு உறுதிசெய்திருந்தது. எனவே, தனது சொற்ப படைவலுவையும், நீண்ட பரந்த பிரதேசத்தில் செறிவற்றவாறு தற்காப்பிற்காக நிலைகொள்ள வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் படைத்தரப்பிற்கு இருந்தது. இருக்கும் படைவலுவை ஒருங்கிணைக்க முடியாதவாறு புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல் சிங்களப் படையை முடக்கிவைத்திருந்தது. ஆனால், புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்ததும், இராணுவத்திற்கிருந்த தாக்குதல் அச்சுறுத்தல் நிச்சயப்படுத்தப்பட்டவகையில் இல்லாது போயிற்று. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி, படைவலுவை ஒருங்கிணைத்து முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியது அரச படைத்தரப்பு.

அரசின் கீழ்த்தரமான நாகரீகமற்ற இராணுவத் தந்திரத்தினால் புலிகள் தமது அனைத்துப் பகுதிகளிலும் தாக்குதல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகவேண்டிய நேர் எதிர்மாறான புதிய சூழல் தோன்றியது. புலிகளால் முறியடிப்பிற்கான ஒரு படை ஒருங்கிணைப்பை செய்யவோ, பிறிதொரு களமுனையைத் திறந்து சிங்களப் படையை திணறடிக்கவோ முடியாத சூழலில், இராணுவத்தின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பு நிலைகொள்ளலுக்கு அச்சுறுத்தலாக புலிகளால் தென்மராட்சிப் பகுதியில் தக்கவைக்கப்பட்டிருந்த புறப்படு தளம் மீது இராணுவம் படை நடவடிக்கையை செய்யத் தொடங்கியது. இத்தகைய நயவஞ்சகமான தந்திரத்தால் புலிகள் கைதடி, நாவற்குழி, தனங்கிளப்புப் பிரதேசத்தில் இருந்து ஒரு தந்திரோபாயப் பின்வாங்கலை செய்யவேண்டியதாயிற்று.

நாகரீகமற்ற அரசு இச்செயல் மூலம் யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்கான அச்சுறுத்தலை தவிர்க்கவும், சிதைக்கப்பட்ட படைத் துருப்புக்களின் மனோதிடத்தை மேம்படுத்தவும். சிங்கள தேசத்தில் தனது இராணுவம் இப்பொழுதும் வலிமையுடன் இருப்பதாகக் காட்டவும், சர்வதேசத்திற்கு தான் இராணுவ சமநிலையில் தனக்குரிய பலத்தை இழந்துவிடவில்லை என்ற தோற்றப்பாட்டை உருவாக்கவும் இதனைப் பயன்படுத்தியிருக்கின்றது.

எமது நல்லெண்ண சமிக்ஞைகள் யுத்தவாதிகளால் எவ்வாறு கையாளப்பட்டிருக்கின்றது என்பதை அனைத்துத் தரப்பும் இதிலிருந்துதான் புரிந்துகொள்ளவேண்டும். சமாதானம் பற்றிய பேச்சுக்கள் சந்திரிகா அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு சாணக்கிய மொழிவிரிப்பாகவே பயன்படுத்தப்படுகின்றது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். பௌத்த சிங்களப் பேரினவாதக் கோட்பாட்டு அடிப்படையிலான இத்தகைய குருட்டுத்தனமான அணுகுமுறைச் சிந்தனையிலிருந்து சிங்கள அரசு மாறிவிடப்போவதில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் வலுவாக மெய்ப்பித்திருக்கின்றது. சிறிலங்கா அரசு புலிகள் பற்றியும், விடுதலைப் போராட்டம் பற்றியும் தனது வலுவான பிரச்சார முனைப்புக்களால் சாதித்துவந்த பொய்மையையும், தமிழர் மீதான இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதையே இனப்பிரச்சினைத் தீர்வாக எண்ணும் சிங்கள அரசினது எண்ணப்போக்கின் மெய்மையையும் சர்வதேச சமூகத்திற்குத் தோலுரித்துக்காட்ட செலுத்தப்படவேண்டிய விலையாகவே இந்தப் படைப் பின்வாங்கல் அமைந்துபோயிற்று.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மாவுக்குத் தெரியும்

**ஆ.ந.பொற்கோ**

நான் போராட்டத்துக்கு வந்து ஏழு வருசமாப்போச்சு. ஆனா, இன்னும் அம்மாவைப் பாக்கேல்லை. இந்த இறுதி வேவையும் முடிச்சுப்போட்டு அம்மாட்டை ஒருக்காப் போட்டுவரோனுமெண்டுதான் இருந்தனான். ஆனா, அம்மா இண்டைக்குத்தான் செத்துப்போனாவாம். பெரிய மாமா என்னைக் கூட்டிக்கொண்டுபோக வந்திருந்தார். ஆனா, அவர் என்னைக்காணேல்லை. ஆள் இல்லையெண்டும் அறிவிச்சு விடுவமெண்டு மற்றப் பொடியளிட்டைச் சொல்லிச் சொல்லச் சொல்லி பெரிய மாமாவை அனுப்பிப்போட்டன். எப்படியும் இண்டைக்கு இறுதி வேவை முடிக்கவேணும். இல்லாட்டி இவ்வளவு நாளும் கஸ்ரப்பட்டதுக்குப் பலனில்லாமல் போடும். இரவு ஒரு சிக்கலுமில்லாமை வேவை முடிக்கவேணும். ஆனா, வேவைச் சொல்லிக் கொண்டே, சில நேரம் அவன் கண்டா கன நாளும் செல்லும். சில நேரம் முடிஞ்சாலும் முடியவேண்டிவரும். வேவுக்குப் போறதுக்கு நானும் மற்ற மூண்டு பேரும் தயாரானோம்.

இண்டைக்குச்சரியா பராலைற் அடிக்கிறான், சரியான அலேட்டா இருக்கிறான்போல கிடக்கு. முகாமின்ரை தடைக்குக்கிட்ட வந்திட்டம். செல்களும் அடிக்கிறான், ஊர்மனைக்குள்ள விழுந்து எத்தினை சனம் செத்துப்போச்சுதுகளோ தெரியேல்லை. அவங்கள் சிங்களத்திலை கதைச்சுச் சிரிக்கிறதும் பாட்டுப்பாடுறதும் தெளிவாக்கேக்குது. பராலைற் அடிக்கிறான். நாங்கள் நிலத்தோட நிலமா படுத்துக்கிடக்கிறம். போக்கஸ் லைற்றும் அடிக்கிறான். போக்கஸ் அடிக்கிறவன் அரைத்தூக்கம்போல கிடக்கு, அவன் போக்கஸ் அடிக்கிற நிதானத்திலை தெரியுது.

வழமையா நாங்கள் உள்ளுக்கை போற பாதையைப்பாக்கிறம் சிக்கலில்லை, நான் ஒருமாதிரி உள்ளுக்கை போட்டன். மற்ற மூண்டுபேரும் வருமட்டும் பார்க்கவேணும், என்ன இன்னும் ஆக்களைக் காணேல்லை.

தடைக்குள் மைன்ஸ் வெடிச்சுச் சத்தம் கேக்குது. ஆரோ காலைக் குடுத்திட்டான் போலகிடக்கு. அவன் உசாராகப் போறான். எதுக்கும் நான் மறைவம், பக்கத்திலை இருந்த பள்ளத்துக்க சேத்துத் தண்ணி நிற்குது, அதுக்கை மெதுவா இறங்கி மூக்கையும் கண்ணையும் மட்டும் வெளியிலைவைச்சுக்கொண்டிருந்தன்.

அவன் போக்கஸ்சை தடையைச் சுத்தி அடிச்சுச் சுடுறான். ஒரே அமர்க்களமாக்கிடக்கு, மற்றப்பொடியள் என்னபாடோ தெரியேல்லை. சேத்துப் பள்ளத்துக்குப் பக்கத்தாலை ஆமியள் ஓடுறாங்கள்.

துவக்குக்குப் பொலித்தீன் போட்டதால்லை துவக்கு நனையேல்லை, அவன் சந்தேகம் தீருமட்டும் சுத்திச்சுத்திச் சுடுறான், என்னாலை ஒரடிகூட அசைய முடியேல்லை பேசாமல்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கிறன்.

விடியக்கிடேல்லை வேற மறைவான இடத்துக்கு மாறவேணும். இல்லாட்டி விடிய அவன் என்னைக் கண்டிடுவான். அவங்கடை ஆரவாரம் ஓய மெதுவா வெளிக்கிட்டு ஊந்துபோய்ப் பத்தைக்குள்ளை இருந்திட்டன்.

விடிஞ்சுபோச்சு நான் இருக்கிற இடம் ஆமியள் பயிற்சி செய்யிற வெட்டைக்குப் பக்கத்திலை, அது எனக்கு வாய்ப்பாய்ப்போச்சு.

அங்காலை சமைக்கிறான், பள்ளிக்கூடக் கதிரை, மேசையளை உடைச்சு அடுப்புக்கு வைச்சிருக்கிறான். அங்க பிள்ளையள் மரங்களுக்குக் கீழை

## சிறுகதை

நிலத்திலை இருந்து படிக்குதுகள்.

மத்தியானமாப்போச்சு மேலெல்லாம் சேறு. கிடந்த றொட்டித்துண்டைச் சாப்பிட்டுத் தண்ணியைக் குடிச்சன். ஒருமாதிரி மூண்டு நாளாத் திரிஞ்சு முழுவேலையும் முடிச்சுப்போட்டன்.

வெளியிலை போகவேணும் என்னெண்டு போறதெண்டுதான் தெரியேல்லை. வந்த பாதையாலை போகேலாது. வேறபாதை பார்க்கவேணும். மைன்சுகளை அகற்றவேணும்.

என்ன அவன் திடீரெண்டு கண்டபாட்டிலை சுடுறான். என்னைக் கண்டிட்டானோ தெரியேல்லை. எதுக்கும் தயாரா இருப்பம்.

உவன் உப்பிடித்தான் பயந்தாங்கொள்ளி. சும்மா மிருகங்கள் ஊர்ந்தாலும் சுடுவான், அருண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்தானே.

நாலாம் நாள் இரவும் வந்திட்டுது. சாப்பிடவும் ஒண்டுமில்லை. எப்படியும் இண்டைக்கு வெளியிலை போகவேணும்.

ஒருமாதிரி போற பாதைக்கான இடத்தைத் தெரிவுசெய்து மைன்சுகளை அகற்றிப்போட்டன். ஆனா, விடிஞ்சு போச்சு இண்டைக்குப் போகேலாது.

பழையபடி, பத்தையை நோக்கி நடந்தன். நான் கவனிக்கேல்லை, தென்னையிலை இளனி பிடுங்க ஏறின ஆமி என்னைக் கண்டிட்டான். சத்தம் போடுறான், கீழ நிண்டவங்கள் என்ரை பக்கமாச் சுடுறாங்கள்.

காலிலை எனக்கு வெடிபட்டிட்டுது. ஒருமாதிரி இழுத்து இழுத்து ஒரு பத்தைக்குள் போட்டன். ரத்தம் சிந்தி தடயம் தெரியுது. அந்தப் பத்தையைவிட்டு வெளிக்கிட்டு தடயம்விடாமை, வேறபத்தைக்கு மாறியிட்டன்.

அவங்கள் என்ரை பக்கமாத்தான் வாறாங்கள். எதுக்கும் தயாரா இருப்பம். முன்னுக்குப் போனவங்கள் என்னைக் காணேல்லை, கடைசியாப் போனவன் என்னைக் கண்டிட்டான். மற்றவனுக்குச் சொன்னா சுடத்தயாரா இருந்தன். அவன் பேசாமல் போட்டான். அவன் பயத்திலைதான் மற்ற ஆமிக்குச் சொல்லேல்லைப்போல கிடக்கு.

ரெண்டு நாளா சாப்பிடேல்லை. இண்டைக்கு இரவு எப்பிடியும் வெளியாலை போறதெண்ட முடிவோடை இருந்தன்.

கால்லை பிடிச்ச வெடி முழங்காலுக்குக் கீழை சிதைச்சுப் போட்டுது. காயத்துக்கு சரியாகக் கட்டியிருந்ததாலை ரத்தம் வெளியேறேல்லை.

இரவு ஒருமாதிரி அவன்ரை முகாமைவிட்டு, வெளியிலை வந்திட்டன். ஒரு கிலோமீற்றர் சூனியப்பிரதேசத்தைக் கடக்க வேண்டியிருந்தது. உடல் தளர்ந்தாலும் மனம் தளரேல்லை. காயத்தின்ரை வலியையும் பாக்காமை வேகமா ஊந்தன். நான் செத்தாலும் பறவாயில்லை, இறுதி வேவு நிலமை எங்கடையாக்களுக்குக் கிடைக்கவேணும்.

என்னைக் கண்டோண்ணை எல்லாருக்கும் மகிழ்ச்சி. என்னோடை வேவுக்கு வந்த மூண்டு பேரும் வீரச்சாவடைஞ்சிட்டினை. ஆனா, நான் நினைச்சதைச் சாதிச்சுப்போட்டன்.

கால் காயம் மாற நாளாகிட்டுது. பெரிய மாமா பேந்தும் என்னைத்தேடி வந்திருந்தார். அம்மான்ரை அந்தியேட்டிக்கு வீட்டை போனன்.


எல்லாரும் என்னைத்தான் பார்க்கினை, ‘தாயின்ரை சாவீட்டுக்குக்கூட வரேலாத வேலையோ’ அந்தியேட்டிக்கு வந்த சனம் கதைக்கிறது எனக்குக் கேக்குது, தம்பியும் தங்கச்சியும் என்னைக் கண்டோண்ணை கட்டிப் பிடிச்சு அழுதினை.

அம்மான்ரை படம் மாலுக்கை வைச்சிருந்துது. அம்மா சிரிச்சுக்கொண்டிருந்தா. மற்றாக்கள் என்னை எப்பிடி நினைச்சாலும் பரவாயில்லை. அம்மாவுக்குத் தெரியும் போராட்டத்தின்ரை முக்கியத்துவம். இல்லாட்டி என்னை போராட்டத்துக்கு அனுப்பி வைச்சிருப்பாவே!

## தலைவர் மாமாவை ரொம்பப் பிடிக்கும்!

எனது பெயர் அருண்பிரசாத். வயது 12. எனக்கு ஓவியம் வரைவதில் ஆர்வம் அதிகம். நான் பிரான்சில் பிறந்தாலும் எனக்கு தமிழீழப் போராட்டத்திலும் தலைவர் மாமா அவர்கள் மீதும் விருப்பம் அதிகம். எனவே நான் தலைவர் மாமாவின் படத்தை வரைந்து அனுப்புகின்றேன்.

*மனோகரன் அருண்பிரசாத்*
*வில்நெவ் லா ஹரன்*
*பிரான்ஸ்*






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வே. பாலகுமாரன்

# "போரிடுங்கள் பேசுங்கள் பேசுங்கள் போரிடுங்கள்"



இது பேச்சுவார்த்தைக் காலம். பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சுக்களாலே காலம் கழியும் காலம். பல்வேறுதரப்பட்டவர்களுக்கிடையில், பல்வேறு நிலைகளில், பல்வேறு வடிவங்களில் பேச்சுக்கள் நடக்கின்றன. முன்னொரு காலத்திலே பெரும் பகைவர்களாகவிருந்த நாடுகளான அமெரிக்கா-வியட்நாம், அமெரிக்கா-வடகொரியா, வடகொரியா-தென்கொரியா, ஈரான்-மேற்குலகம், லிபியா-மேற்குலகம் எல்லாமே பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. போகிற போக்கில் இந்தியா-பாகிஸ்தான், சீனா-தைவான் ஆகியவையும் பேச்சுக்களில் ஈடுபட்டாலும் அதிசயப்படுவதற்கில்லை. தென்னமெரிக்காவில் மெக்சிக்கோ, கொலம்பியா, குவாத்தமாலா போன்ற நாடுகளில் போராட்ட அமைப்புக்களோடு நடக்கும் பேச்சுக்கள், ஆபிரிக்காவில் சியராலியோன், அங்கோலா, கொங்கோ போன்ற நாடுகளில் கிளர்ச்சி இனக் குழுக்களோடு நடக்கும் பேச்சுக்கள் அண்மையில் பெரும்போர் மூண்ட எதியோப்பியா-எரித்திரியாவிற்கு மிடையில் அமெரிக்க ஏற்பாட்டில் நடக்கும் பேச்சுக்கள், இவற்றினைவிட, இடைவிடாது வட அயர்லாந்து, பலஸ்தீனம் பற்றி நடக்கும் சர்வதேச மட்டப் பேச்சுக்கள், இவ்வாறாக எங்கும் பேச்சுவார்த்தைகள்.

பேச்சுவார்த்தைக் காலமாக இக்காலம் மாறியமைக்கான காரணங்களை ஆராய்வது எமது நோக்கமல்ல. என்றாலும், சில காரணங்களை பின்வருமாறு பட்டியலிடமுடியும். சோவியத் சாம்ராச்சியம் சிதறி, பனிப்போர் உருக, பொருண்மியம் உலகமயமாக, தகவல் தொழில்நுட்பம் பெரும் பாய்ச்சல் நிகழ்த்த, ஐ.நாவை துணைக்கழைத்து அமெரிக்கா அமைதி முகம் காட்டவெனப் பல காரணங்கள். இவைமட்டும்தானா கார



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணங்கள்? இவை புறக்காரணிகள். ஆனால் அகக்காரணியொன்றுமுண்டு. சகல விடுதலைப் போராட்ட வடிவங்களிலும் அதற்கெதிரான அமைவுகளிலும் பொதிந்துள்ள பொதுப்பண்பிது. இருவேறு முரண்பட்ட இலக்குகளைக் கொண்ட இருதரப்புமே தமது இலக்கினை அல்லது இலக்குநோக்கிய பயணத்தில் முன்னேற்றத்தினை இராசதந்திரம், அரசியல் பேச்சுக்கள் என்பவை மூலம் அடையமுடியுமா என முயன்று பார்க்கின்றமை இப்பண்பு. போரின் நோக்கம் பற்றி படைத்துறை வல்லுநரான கார்ள் வொண்குளோசுபிட்சு கூறியதை இங்கு தொடர்புபடுத்துகின்றோம். 'போர் என்பது மாற்று வழியில் தொடரப்படும் அரசியலின் நீட்சியைத் தவிர வேறில்லை' (war is nothing more than continuation of politics by other mean ) எனவே ஒன்றாகத் தொடங்கி இரு கிளைகளாகப் பிரிந்து மீண்டும் ஒன்று சேர்ந்து செல்லுமிடத்தை அடையும் பாதை

'இருதரப்புமே தமக்குக் கிட்டிய சகல வழிகளையும் பயன்படுத்தி, இராசதந்திரத்தையும் அமைதிப் பேச்சுக்களையும் (1) பரப்புரை வெற்றியை தமதாக்க (2) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆதரவைத் திரட்ட (3) எதிரி தரப்பில் குழப்பங்களை ஏற்படுத்த முழுமையாகப் பயன்படுத்தினர். இவர்களுக்கு இராசதந்திரமும் இராணுவ வழியைப் போலவே இலக்கை அடையப் பயன்பட்ட இன்னொரு வழியானது' இவ்வாறு வியட்நாமிய வரலாற்றினை ஆய்வு செய்தோர் அடித்துக் கூறுகின்றனர்.

போரும் பேச்சுவார்த்தைகளுமாகவே வியட்நாமிய விடுதலை வரலாறு நகர்ந்து முன் சென்றுள்ளது. 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் இந்தோசைனா (லாவோஸ்-வியட்நாம்-கம்போடியா) என பிரான்ஸ் தென்கிழக்காசியாவில் உருவாக்கிய குடியேற்ற வலயத்திற்கெதிராக 1930கள் தொட்டே கோ-சி-மின் தலைமையிலான விடுதலை


கோ-சி-மின்

யிது. ஆனால் இப்பாதையில் சென்று வழிதவறியோர் எத்தனை பேர்? செல்லுமிடம் சென்றவர் எத்தனை பேர்? இது வரலாற்றின் தீர்ப்பு. வரலாற்றின் போக்கினையறிந்த மாந்தர் தம் தெரிவு.

'Danh ran dam dam ran danh' என்கிற வியட்நாமிய சொற்றொடர் குறிப்பது 'போரிடுங்கள் பேசுங்கள், பேசுங்கள் போரிடுங்கள்' என்பதாகும். வியட்நாமின் போராளிகளிடையே ஒரு காலகட்டத்தில் புழக்கத்திலிருந்த இத்தொடரினை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது எளிமையானது. ஆனால், அன்று வியட்நாமில் மிக ஆழமான பொருள் தந்த அரசியல், இராசதந்திரத் தொடரிது. 'மிகச் சிக்கலான, மதிநுட்பமான, ஒன்றிணைக்கப்பட்ட இராணுவ இராசதந்திர அரசியல் மூலோபாயம் இது. அமெரிக்காவிலும், தென்வியட்நாமிலும் குழப்பங்களை ஏற்படுத்தி இவ்விரு கூட்டாளிகளிடையே பிளவுகளைத் தோற்றுவித்து, அமெரிக்காவிலே வியட்நாம் போருக்கெதிரான கடும் எதிர்ப்பு தோன்றவும் காரணமான பேரபாயமிது. 'இராசதந்திரம் என்பது இராணுவ வலிமைப் பிரயோகத்திற்கு அடுத்த நிலையிலிருந்து மட்டுமன்றி அதற்குத் துணையும் நின்றது'



யணி போராடிவந்துள்ளது. 2ஆம் உலகப் போரையடுத்து பிரான்சோடு பேச்சுக்கள் நடத்தியும் பயனளிக்காத நிலையில் பேச்சுவார்த்தைகள் மூலம் பெறமுடியாததை போர் மூலம் பெறுவதற்காக 1946களில் போரை ஆரம்பித்தார். எட்டு வருட தீவிர ஆயுதப் போராட்டத்தின் பின் 1954 மேயில் தியென்-பின்பூ வின் வீழ்ச்சியோடு பிரான்சியரின் ஆதிக்கம் அடங்கியது. எனினும், வியட்நாம் முழுமையாக விடுதலைபெற முடியவில்லை. அதேயாண்டு ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் வியட்நாம் துண்டாடப்பட்டது. வடவியட்நாம் முழுமையான விடுதலைபெற, தென்வியட்நாமில் சில காலம் இருந்து பின் பிரான்சியர் வெளியேற அமெரிக்கர் நுழைந்தனர். தென்வியட்நாமை விடுவிக்கப் போராடிய தேசிய விடுதலையணி சைகோனைக் கைப்பற்றும் நிலை உருவாகியபோது அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டது. வடவியட்நாம் மீது விமானக் குண்டு வீச்சினை தொடங்கியதோடு, தரைப் படையையும் தென்வியட்நாம் அனுப்பியது. இவ்வாறாகத்தான் பெரும் போருக்கான சூழல் அங்கு உருவாகி புகழ்மிக்க விடுதலை மலர் அங்கு பூத்தது.

இந்நிலையிலேதான் இரு முரண்பட்ட தரப்பினரும் தமது இலக்குகளை இவ்வாறு வரையறுத்துக் கூறினர். 1965ஆம் ஆண்டு ஏப்பிரல் 07ஆம் திகதி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் ஜோன்சன் கூறினார். (அ)தென்வியட்நாமின் சுதந்திரம் எப்போதும் பாதுகாக்கப்படும். (ஆ) நேரடியாக மோதியோ அல்லது பேச்சுவார்த்தைப் போர்வையிலோ அமெரிக்கப்படையை மீளப் பெறச்செய்ய எவராலும் முடியாது. அதே வேளை, அமைதிக் கதவை மூடவில்லை. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு நாம் தயார். இதற்கு மறுநாள் வட

வியட்நாம் பிரதமமந்திரி பாக் பான்டொங் தமது நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

(அ) போரை உடன் நிறுத்தி அமெரிக்கப் படைகள் உடன் வெளியேற வேண்டும். (ஆ) வெளியார் தலையீடின்றி வியட்நாமிய தேசிய விடுதலை முன்னணியின் முடிவிற்கேற்ப வியட்நாம் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறாக இரு தரப்பு நிலைப்பாடுகளும் வரையறுக்கப்பட்டபின் இவற்றினையடைய முயற்சிகள் தொடங்கின. இவ்வாறாக, உலகின் புகழ்மிக்க போராட்ட வரலாறு தொடங்கியது.

எமது வசதிக்காக வியட்நாமிய விடுதலை வரலாற்றினை மூன்று கட்டங்களாக வகுத்துக் கொள்ளலாம். முதற்காலகட்டம் 1965-1967இற்கு இடைப்பட்டது. மிகத்தீவிரமாக இரு தரப்பிற்கும் இடையில் போர் நடைபெற்றகாலம். எனினும், போப்பாண்டவர், ஐ.நா செயலர், வேறும் பல நாடுகளும் அமைதி முயற்சிகளை மேற்கொண்டன. பேச்சுக்கு தாம் தயார் எனக்கூறி அமெரிக்கா குண்டு வீச்சுக்களை இடைக்கிடை இடைநிறுத்தி, பாவனைகள் செய்தபோதும் பேச்சுவார்த்தைகளை குழப்பும் வகையில் செயற்பட்டது. அதேவேளை, நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்களுக்கு (குண்டு வீச்சுக்களை நிறுத்தல்) தாமும் தயாரென வடவியட்நாமும் கூறிக்கொண்டது.

உண்மையில் இரு தரப்புமே பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராகவில்லை. இக்கட்டத்தினை 'இராசதந்திர நிழல் மல்யுத்த காலம்' என்றும் 'அமெரிக்க இராசதந்திர வரலாற்றின் பயனற்ற பக்கங்கள்' எனவும் வரலாற்றாளர் விபரிக்கின்றனர்.

இதற்கடுத்த இரண்டாம் காலகட்டம் ஆழ்ந்த கவனிப்பிற்குரியது. 1968ஆம் ஆண்டு ஜனவரியின் இறுதியில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரிய தாக்குதலை வியட்நாமிய விடுதலையணி தொடுத்தது. ரெற் தாக்குதல் (Tet Offensive) என அழைக்கப்பட்ட இத்தாக்குதல் தென்வியட்நாம் எங்கும் பரவலாக நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதல் பாரிய அதிர்ச்சி அலைகளை அமெரிக்கத் தரப்பிலும், அமெரிக்க மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியது. இதனால் இரண்டு மாதகால அழிவிரக்க சிந்தனையின் பின் தாமாகவே பேச்சுவார்த்தைக்கு முன்வந்த ஜோன்சன், விமானக்குண்டு வீச்சினை மட்டுப்படுத்தினார். அதேவேளை, பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி சற்று ஓய்ந்திருந்த வடவியட்நாம் தரப்பும் சகலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தைகளுக்கு தாம் தயார் என்கிற முடிவினை அறிவித்தனர். இவ்வாறாகத்தான் பேச்சுக்கள் பாரிசில் 13 மே 1968இல் தொடங்கின. ஆனால், தொடக்கமே பெரும் சிக்கலில் சிக்கியது. யார் யார் பேச்சுக்களில் பங்குபற்றுவது என்பதிலிருந்து பேச்சுவார்த்தை மேசை எவ்வாறு அமைய வேண்டும் என்பதுவரை பெரும் இழுபறி. அப்போது அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் காலம். தனது கட்சி வேட்பாளர் நிக்சனை வெல்ல வைக்க ஜோன்சன் முயல, அவரது காலம் முடியுமுன்னர் பெறக்கூடியதை அவரிடமிருந்து பெற வடவியட்நாம் தரப்பு முயல, இராசதந்திர முனைப்புக்கள் தீவிரம் பெற்றன. இதேவேளை, அமெரிக்கா தன்னை கைகழுவி விடுமோ என வருந்திய தென் வியட்நாமிய பிரதம அமைச்சர் நிகுயென் வான்தியு 'அவமானம்' 'துரோகம்' 'தோல்வி' என அலறி ஜோன்சனுக்கு பெரும் எரிச்சலை ஊட்டினார். அதேவேளை, அமெரிக்கப் படை விலக வேண்டும் என்கிற முடிவில் உறுதியாக விடுதலைப் போராளிகள் நின்றனர். இவ்வாறாக, எதுவித முடிவுமின்றி இக்காலகட்ட இழுபறி முடிவிற்கு வந்தது.

அடுத்தது தீர்க்கமானதும் இறுதியுமான காலகட்டம். 1969இல் நிக்சனும் அவரது ஆலோசகரான கென்றி கீசிங்கரும் பதவியேற்போடு ஆரம்பமாகியது. ஜோன்சனால் செய்யமுடியாததை தம்மால் செய்யமுடியும் என நிக்சன் கூறிக்கொண்டார். கீசிங்கரோ இராசதந்திர முயற்சிகளில் வெகு தீவிரமாக செயற்பட்டு தமது இலக்கினை, அதாவது படைவிலகல், தென்வியட்நாமிய சுதந்திரம் பாதுகாக்கப்படல் என்பதனை அமைதிப் பேச்சுக்கள் என்கிற போர்வையில் அடைய முடியும் என நம்பி 'கௌரவத்துடன் அமைதி' எனக் கூறிக்கொண்டார். பாரிய அழுத்தங்களை டீ 52 விமானக் குண்டு வீச்சுக்களின் மூலமும் 1970இல் கம்போடியா மீதான படையெடுப்பின் மூலம் தொடுத்தவண்ணம் இரகசியப் பேச்சுக்களை வியட்நாம் தரப்போடு ஆரம்பித்தார். பேச்சுக்களில் ஈடுபட்டும், அதனை இடைநிறுத்தியும் வெளியேறியும் பாரிசில் வியட்நாம் தரப்பு இத்தகைய அழுத்தங்களை பயனற்றதாக்கியது. இதே வேளை, தொடர்ந்து ஈடுபடுவதன் மூலம் (பாரிசில் தங்கியிருந்த வியட்நாம் தரப்பு தாம் எத்தனை காலமானாலும் பேச்சுக்களில் ஈடுபடத்தயார் எனக் கூறியிருந்தனர்) அமெரிக்காவில் வியட்நாம் போருக்கெதிரான எதிர்ப்பு வலுக்கவும் வழிவகுத்தனர். அப்போதைய கருத்துக்கணிப்பொன்று வியட்நாமுக்கு படையனுப்பியது தவறு என 71 விழுக்காட்டினர் கருதியதாகத் தெரிவித்தது.

இவ்வாறாக, 1971 வரை 'ஆரியக் கூத்தாடி'ப் பார்த்தும் கீசிங்கரினால் தனது அரசியல் இராசதந்திர அணுகுமுறையால் எதனையும் பெறமுடியவில்லை. இக்கட்டத்திலே 1972ஆம் ஆண்டு மார்ச்சில் 'ஈஸ்டர் தாக்குதல்' எனப்படும் பாரிய தாக்குதலொன்றை வடவியட்நாம் தரப்பு தென் வியட்நாம் மீது தொடுத்து சைகோனுக்கு 60 மைல் தூரம்வரை உட்புகுந்தது. இதற்குப் பதிலடியாகத்தான் உலகமே அதிர்ந்து போன பேரளவிலான தொடர் குண்டு வீச்சுக்களை அமெரிக்கா 1972 மேயிலிருந்து ஒக்டோபர் வரையும் (Line Bicker லைன் பைக்கர்) டிசம்பரிலும் (லைன் பைக்கர் 11 'கிறிஸ்மஸ் குண்டு வீச்சுக்கள்') நிகழ்த்தி வடவியட்நாமில் பெருத்த அழிவுகளை ஏற்படுத்தியது. வடவியட்நாமின் கைபொங் துறைமுகத்தைச் சூழ கடற்கண்ணிகளை விதைத்து கடல் முற்றுகையிட்டது. அமெரிக்கத் தரப்பின் மூர்க்கத்தனமான இராசதந்திரத்தின் வெளிப்பாடான இக்குண்டு வீச்சுக்கள் அமெரிக்காவின் கறைபடிந்த காலமாகியது. பேச்சுக்களுக்கு வடவியட்நாமை தள்ளி மோசமானதொரு உடன்பாட்டினை திணித்து தனது படைகளை மீளப்பெற அமெரிக்கா துடியாய்த்துடித்தது. இக்காலகட்ட செயற்பாடுகளை கென்றி கீசிங்கர் யுகுலர் இராசதந்திரம் என்றார். (Jugular Diplomacy மூளையிலிருந்து இருதயத்திற்கு குருதியை கொண்டு செல்லும் பிரதான நாளம் யுகுலர் எனப்படும்) ஈற்றில் ஒருவாறாக இரு தரப்பும் தமது நிலைகளிலிருந்து இறங்கிவந்து 'பாரிஸ் உடன்படிக்கை' எனப்படும் உடன்பாட்டிற்கு 1973 ஜனவரியில் வந்தனர். அமெரிக்கக் கைதிகளை விடுவிக்கவும், அமெரிக்கப் படைகள் வெளியேறவும் அதே வேளை, வடவியட்நாம் துருப்புக்கள் ஒரு தொகை தென்வியட்நாமிலிருக்கவும், வியட்நாம் தேசிய விடுதலை முன்னணிக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கவும் வழி செய்த இவ்வுடன்பாடு போருக்குப் பிரதான காரணமான தென்வியட்நாமின் எதிர்காலம் பற்றிய முடிவினைத் தள்ளிப்போட்டது.

# "போரிடுங்கள் பேசுங்கள் பேசுங்கள் போரிடுங்கள்"

இப்போது, கீசிங்கருக்கு பெருத்த புகழாரம் சூட்டப்பட்டது. 'விண்ணாதி விண்ணன்' எனப் பாராட்டும் கிடைத்தது. அவருக்கும் 1969இல் இருந்து வியட்நாம் பிரதிநிதியாக பேச்சுக்களில் ஈடுபட்ட லீடக் தோவிற்கும் (Leedak Tho) நோபல் அமைதிக்கான விருதும் கிட்டியது. ஆனால், அமைதி இன்னமும் கிட்டவில்லை எனக்கூறி பரிசைப் பெற மறுத்த தோ தனது தாயகத்திற்குத் திரும்பிவிட்டார்.

ஆனால், அமைதிக்கனவு நீடிக்கவில்லை. தென்வியட்நாம் உடன்பாடு நிறைவேற ஒத்துழைக்கவில்லை. வடவியட்நாமோ தனது இலக்கினை கைவிடவுமில்லை. 1973 டிசம்பர் அளவில் உடன்பாட்டினை நிறைவேற்ற முடியாதநிலை தோன்றியது. அதிருப்தி அடைந்த அமெரிக்க செனெற் தென் வியட்நாமிற்கான நிதியுதவியை வெட்டித் தள்ளியது. 'வோட்டர் கேற்' மோசடியால் அவமானமுற்ற நிக்சன் பதவி விலக, 1975இல் போட் ஜனாதிபதியானபோது நிலைமைகள் தலைகீழானது. 1975 ஜனவரியில் பாரிய மரபுவழி படையெடுப்பினைத் தொடங்கிய விடுதலையணி 1975 ஏப்பிரல் 30ஆம் திகதியளவில் கடைசி அமெரிக்கப்படையை ஓட ஓட விரட்டியது. தனது இலக்கினை (1965இல் வெளியிட்ட வண்ணம்) அடைந்தது. 10 வருடங்களாக இருதரப்புமே வெகு கவனமாக தமது இராசதந்திர, அரசியல், இராணுவ நிலைப்பாடுகளை வரையறுத்துச் செயற்பட்டனர். முடிவில் வியட்நாமில் அமைதி இராணுவ வழியில், விடுதலைப் போராட்டத்தின், ஆயுதப்போராட்டத்தின் வெற்றியிலே கிட்டியது.

*ஆதாரம்: வியட்நாம் போரின் கலைக்களஞ்சியம்*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# போர்நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரிக்க விரும்புவது ஏன்?

முதலில் செயற்படுத்திய ஒருமாதகால போர்நிறுத்தத்தை சிங்கள அரசு நிராகரித்த நிலையிலும், தமது போர்நிறுத்த நடவடிக்கையை மேலும் ஒருமாதத்திற்குத் தொடரப்போவதாக புலிகள் இயக்கம் அறிவித்து விட்டது.

ஆயினும், போர்வெறி நிலைப்பாட்டிலிருந்து, சிங்கள அரசு மாறுவதாகத் தெரியவில்லை. போர்நிறுத்தத்திற்கு உடன்படுவது பேரினவாத நலன்களுக்குத் தீங்கிழைக்கும் என்று சிங்கள அரசு கருதுகின்றது.

சிங்கள அரசைப் பொறுத்தவரை, தமிழினத்தின் தேசிய இனப்பிரச்சினைக்குப் போர் மூலம் இராணுவத்தீர்வு காண்பதையே விரும்புகின்றது.

அமைதிவழியில் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணவேண்டிய சூழல் பிறந்தால், அது தமிழினத்தின் அரசியல் கோரிக்கைகளுக்குச் சார்பானதாக அமைந்துவிடும் என்று அஞ்சுகின்றது.

அதுவும், வெளிநாடொன்றின் மத்தியத்துவத்தின் கீழ் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறுமாயின் சிங்கள அரசு பாரிய சிக்கல்களில் மாட்டிக்கொள்ளும் என்றும் அது பயப்படுகின்றது.

அத்துடன், சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் அரசியல் இலட்சியமான 'இலங்கைத் தீவு சிங்களவர் பூமி' என்ற அதன் நீண்டகால அரசியல் நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைவித்துவிடும் என்றும் பீதியடைகின்றது.

அதேவேளை, நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும், அதைத் தொடர்ந்து தக்கவைக்கவும் போரே சுலபமான மார்க்கமாகவும் சிங்களத்து அரசியலிலே காணப்படுகின்றது.

இவை காரணமாகவே, புலிகள் இயக்கத்தின் போர்நிறுத்த அழைப்பை சந்திரிகா அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளாக தாயகம், தேசியம், தன்னாட்சி அமைந்துள்ளது. ஈழத்தமிழரின் பிறப்புரிமைகளான இந்த அரசியல் உரிமைகளை சிங்கள அரசு ஏற்கமறுக்கின்றது.

எனினும், இத்தகைய அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவாக சர்வதேச உலகம் கருத்துக்கூறி வருகின்றது. இந்த அரசியல் கோரிக்கைகளுக்கு ஒரு தார்மீக நியாயம் இருப்பதாக அவை ஒப்புக்கொள்கின்றன. இந்த நிலையில், போரை நிறுத்தி மூன்றாந் தரப்பு மத்தியத்துவத்தின் கீழ் புலிகளுடன் பேசமுயன்றால், பேச்சுவார்த்தை மேசையில், புலிகள் இயக்கத்தின் கை ஓங்கிவிடும் எனச் சிங்கள அரசு அஞ்சுகின்றது.

அத்துடன், புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச அங்கீகாரத்தையும், அதன் அரசியல் நிலைப்பாட்டிற்கு உலகநாடுகளின் ஆதரவையும் பெற்றுத்தந்துவிடும் என்றும் அது பயப்படுகின்றது.

அதேசமயம், பேச்சுமுறிவுக்கு இனிமேல் புலிகள் இயக்கத்தின் மீது பழிபோட முடியாது என்றும் அது எண்ணுகின்றது.

போர் இல்லாமல் சமாதானச் சூழலில் பேச்சுவார்த்தை நடைபெறுமானால், சர்வதேச தொடர்புச்சாதனங்கள் சுலபமாக புலிகள் இயக்கத்தையும், தமிழ் மக்களையும் அணுகும். அப்போது புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தின் அரசியல் வரலாற்றை எடுத்துவிளக்குவர். அதனால், தமிழினத்திற்கெதிராக சிங்கள அரசும், அதன்படைகளும் இழைத்த அநீதிகள், அழிவுகள் அம்பலமாகும். தமிழ் மக்களின் சோகக்கதைகள் சர்வதேசத்தின் இதயத்தைத்தொடும். சிங்கள அரசின் கோரமுகம் அம்பலமாகும். இவைகாரணமாக புலிகள் இயக்கத்தினது அரசியல் இலட்சியத்தின் நியாயப்பாடுகள் சர்வதேசத்திற்கும் தெரியவரும்.

இவற்றிற்குப் பதிலாக போர் தொடருமானால் அங்கீகரிக்கப்பட்ட அரசு என்ற சலுகையையும், வசதியையும் சிங்கள அரசு உபயோகித்து தமிழர்களுக்கு எதிராக அது இழைக்கும் இன்னல்களை மறைக்கவும், புலிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் பொய்களைப் புனையவும், செய்திகளை திரித்துக்கூறவும், உண்மைகளை மறைக்கவும் சிங்கள அரசுக்கு வாய்ப்பாக இருக்கும்.

போர்ச்செயற்பாட்டைக் காரணம் காட்டி, சிறீலங்காவின் அபிவிருத்தி-வேலைவாய்ப்பு-வறுமை போன்ற ஏனைய பிரச்சினைகளை கிடப்பில் போட சிங்கள அரசுக்கு வாய்ப்புள்ளது. இதனால், சிங்கள இளைஞர்களின் உயிரழிவில் சுலபமாக அரசியல் செய்து கொண்டு-ஆட்சியதிகாரத்தையும், அதனால் வரும் சலுகைகளையும்- வசதிகளையும் அனுபவித்தபடி ஆட்சிபுரியலாம் என்றும் சந்திரிகா அரசாங்கம் எண்ணுகின்றது.

இதேவேளை, புலிகள் இராணுவரீதியாகப் பலமிழந்துவிட்டனர் என்றும், போர்க்களத்தில் சிங்களப் படைகளின் கையோங்கியுள்ளது என்றும் சிங்கள அரசு கணிக்கின்றது. எனவே, போரைத் தொடர்ந்து நடாத்தி புலிகளைப் பூண்டோடு அழித்துவிடலாம் என்றும் ஆசைப்படுகின்றது. புலிகளின் ஒவ்வொரு சமாதான நல்லெண்ணத்தையும் அவர்களின் பலவீனமாக விளங்கிக்கொள்வது சிங்களத்தின் வழமையாகும்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையில் தீர்வு காண்பதென்ற சிங்களப் பேரினவாதத்தின் நிலைப்பாடே சந்திரிகா அரசின் நிலைப்பாடாகும்.

போர்நிறுத்தம்-அமைதிப்பேச்சு என்பதெல்லாம் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரானது. எனவே புலிகளின் போர்நிறுத்த அழைப்பை ஏற்காது, நிராகரிப்பதன்மூலம் போரைத் தொடர்ந்து நடாத்தி இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண விளைகின்றது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மிருசுவில் படுகொலை

# இனப்படுகொலையின் இன்னொரு காட்சி

படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் அகப்பட்டுள்ள மிருசுவில் படித்தமகளிர் குடியிருப்புப் பகுதியில் 19.12.2000 அன்று தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற எட்டுத் தமிழர்கள் சிங்களப் படையினரால் கோரமாகக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டனர்.

கூரிய ஆயுதத்தினால், குரல்வளை அறுக்கப்பட்டு அவர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். கொலைவலைக்குள்ளிருந்து சாதுரியமாகத் தப்பிக்கொண்ட இளைஞனொருவரால் (பொ.மகேஸ்வரன்) படையினரின் இப்படுகொலை அம்பலத்திற்கு வந்தது.

கொல்லப்பட்டவர்களுள் பாலர்களும் அடங்குகின்றனர். ஐந்து வயதுப் பாலகன் ஒருவன் (பிரசாந்) கால் எலும்பு முழங்காலுக்குக்கீழ் அறுந்து தொங்கிய நிலையில் புதைகுழியிலிருந்து சடலமாகக் கண்டெடுக்கப்பட்டான். அப்பாலகனின் கைகள் வயர் ஒன்றினால் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் இருந்தது.

தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் மக்கள் குடியிருக்கவும், வீடுகளைப் பார்வையிடவும் வரலாம் என அறிவித்து, மக்களைக் கொலை வலைக்குள் விழவைத்து இத்தகைய படுபாதகச் செயல்களைப் படையினர் புரிந்தனர்.

இவ்வாறுதான், படையினரின் கொலை வெறிக்கு அஞ்சி 1995 ஒக்டோபரில் வலிகாமத்தைவிட்டு இடம்பெயர்ந்தோடிய மக்களை மீளக்குடியிருக்க அழைத்த படையினர், வந்தவர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை கொன்றொழித்தனர். இவர்களில் சிலரது சடலங்களை செம்மணியிலும், அரியாலையிலுமிருந்த புதைகுழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

தமிழர்கள் என்ற காரணத்திற்காக மட்டும் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக கொல்லப்பட்டும் அவர்களது சடலங்களை கண் காணாதவகையில் புதைப்பதும், எரித்தழிப்பதும் சிங்களப்படையினரதும், சிங்களக் காடையர்களினதும் தொடர்செயற்பாடாகவுள்ளது.

1956இல் தொடங்கிய இப்படுகொலை முயற்சி வரவரத் தீவிரம்பெற்று இன்றுவரை தொடர்கின்றது. இனவெறிபிடித்த நிலையில் சிங்களப்படையினரும், காடையர்களும் புரியும் இத்தகைய வெறியாட்டத்தில் குழந்தைகளும், பெண்களும், முதியோர்களும், கர்ப்பிணிகளும் இரையாக்கப்பட்டுள்ளனர்.

புலிகளின் குரல்

ஒவ்வொரு படுகொலைச் செயலிலும் கொலைஞர்கள் காட்டிவரும் கொலைப்பாணி நெஞ்சைப் பிழியத்தக்கது. இரத்தத்தை உறையவைக்கவல்லது.

கொதிக்கும் தார்ப் பீப்பாக்குள் போடுவதிலிருந்து, உயிருடன் கொழுத்துவது, புதைப்பது, கண்களைத்தோண்டுவது, கண்டதுண்டமாக வெட்டிக்கொல்வது, குண்டு வைத்துக்கொல்வது, குரல்வளை அறுத்துக் கொல்வது, பாலியல்வல்லுறவுகொண்டு கொல்வது என காட்டுமிராண்டித்தனமான வகையில் தமிழர்கள் திட்டமிட்டுப்படு கொலை செய்யப்படுகின்றனர்.

நிலத்தை அபகரிக்கவும், இராணுவத் தோல்விகளுக்குப் பழிவாங்கவும், பயமுறுத்திப் பணியவைக்கவும் என பலநோக்கங்களுடன் தமிழர்கள் இனக்கொலை செய்யப்படுகின்றனர்.

இவ்விதம் இனக்கொலைபுரியும் படையினரும், சிங்களக் காடையர்களும் சிங்கள அரசின் ஆசீர்வாதத்தையும், சட்டப் பாதுகாப்பையும், வெகுமதிகளையும் பெற்றுவருகின்றனர்.

காலத்திற்குக்காலம் இத்தகைய இனப்படுகொலைகளை ஆட்சியில் இருப்போரே தூபமிட்டு நடாத்துகின்றனர். கொலையாளிகளை ஏவிவிட்டு தமிழர்களை இனப்படுகொலை புரிகின்றனர். படுகொலைகளுக்குக் காரணங்களைக் கூறி அவற்றை நியாயப்படுத்தவும் முனைகின்றனர்.

இத்தகைய இனப்படுகொலையில் இன்றுவரை எண்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டுள்ளனர். ஈழத்தமிழரின் சனத்தொகையில் இதுவொரு கணிசமானபகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

குமுதினிப்படகில் 30 பேர், வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் 170 பேர், பிள்ளையாரடி-சத்துருக்கொண்டானில் 184 பேர், வெலிக்கடையில் 58 பேர், பிந்துநுவெவவில் 40 பேர், யாழ்ப்பாணத்தில் 1000த்திற்கு மேற்பட்டோர் என தமிழர்களை கூட்டம் கூட்டமாகக் கொன்றவர்கள் எவரும் தண்டிக்கப்பட்டதாக வரலாறு இல்லை. படுகொலைகளுக்குக் காரணமான படையதிகாரிகள் பதவியுயர்வு பெற்றதற்கு வரலாறு உண்டு.

தமிழர்களை இனப்படுகொலை செய்து, அவர்களது இருப்பை இலங்கைத்தீவில் இல்லாது செய்வது சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் குரூரத்திட்டம். இந்த நயவஞ்சகத்திட்டத்தை சிங்கள அரசு தீவிரமாக நடைமுறைப்படுத்துகின்றது.

இந்நிலையில், இத்தகைய படுகொலைகளுக்கு நீதிவிசாரணை வேண்டுமென்றோ, குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென்றோ சிங்கள அரசைக் கோருவது அர்த்தமற்றது.

சிங்களப்படைகளின் ஆக்கிரமிப்பிற்குள் தமிழர்கள் இருக்கும்வரை இத்தகைய படுகொலைகள் எதிர்பார்க்கக்கூடியதே. கொலையை நோக்காகக் கொண்ட இப்படுகொலைகளைத் தடுக்க ஒரேவழி சிங்களப் படைகளை தமிழர் தாயகத்திலிருந்து அப்புறப்படுத்துவதுதான்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கரைந்து போன உங்களுக்கு

நீ யாரென்று தெரியாமல் உனக்கு என்றில்லாமல்
உங்களுக்கு வீர வணக்கம்
நீங்கள் தந்த உயிரை கண்ணுள் சுமந்த போது
இதயத்தில் பூமியின் அகலமாய்
விடுதலை உணர்ச்சி வந்தெம்மை தாக்குதையா.
நீ விட்ட இடத்தில் நானும் தொடர
கால்கள் துடித்ததையா-
சிங்களத்தின் செருக்கடக்க கெடு நரிக் கூட்டத்தினுள்
'கரும்புலியாய்' கொடியவன் படை அழிக்க
புலிக்கொடி கொண்டு சென்றவர்களே!
நீங்கள் நடந்த தடம் பார்த்து
தமிழீழம் மௌனமாய் நிற்குதையா-
கடல் மீன்களும் கரும்புலி வீரம் கண்டு
நீர் மேல் எழுந்து தலைவணங்கிச் சென்றதையா-
பிறப்பும் இறப்பும் அவன் செயல் என்ற
முறைமை கடந்தவர்களே.
சாவுக்கு சவுக்கடி கொடுத்து சாகாவரம் பெற்று
பகை முடித்து தமிழுக்கோர் தலை நிமிர்வு கொடுத்த
தவப்புதல்வர்களே வையகம் வணங்கிச் சென்றதையா
உங்கள் வீரம் கண்டு.

– திருநகர் எஸ்.ஆர். செல்வி
லெபனான்

## ஓயாது போராட்டம் ஓயாது.

வீரம் வீசும் எங்கள் மண்ணை
எண்ணும் எந்தன் நெஞ்சம்
தேசம் தமிழ்தேசம் அங்கே
ரத்தம் எங்கும் ரத்தம் நித்தம் செல்லும்
வான் பறவை கொட்டும்
குண்டுமழை என்உறவின்
வாழ்வியலைக் கொல்லுதே!
வெள்ளைச் சீருடையுடன்
பள்ளிக்குச் சென்ற பிள்ளைப்புறாக்கள்
சிங்களத்தைச் சீண்டியதா சொல்லடி.
நாகர்கோவில் மண்ணிலே நாகரீகமின்றியே- உன்
நாடறியச் செய்ததுதான் என்னடி.
தத்தித்தத்திச் சென்ற தமிழ்ச்
சிட்டுக்களின் தேகங்கள்
வான் தழுவும் வேம்பின் கிளையில்
துண்டுகளாய்த் தொங்கியதைப் பார்த்தோமே....
ஆண்டவனே தஞ்சமென்று
ஆலயத்துள் ஓடிச்சென்றும்...
உந்தன் கண்ணில் தப்பவில்லை நாமடி.
நவாலி மண்ணிலன்று நரபலி ஏனெடுத்தாய்
ரத்த வெறி தானுனக்கா சொல்லடி..?
தள்ளுவண்டி மீதில் தமிழ்ச்
சொந்தங்களைத் துண்டுகளாய்
அள்ளிச் சென்ற சோகங்களை
செந்நீர் சிந்தப் பார்த்தோமே.
தாங்காது தாங்காது தமிழீழம் தாங்காது.
ஓயாது ஓயாது போராட்டம் ஓயாது.

–ஆழியவளையூர் எஸ்.ரி.சிங்கன்
நோர்வே

## அகிலம் எங்கும் சொல்லி விடு

ஈழம் எந்தன் தாய்நாடு
வீரம் தியாகம் இரு கண்கள்
தமிழன் என்ற பெயரெனக்கு
அகிலம் எங்கும் சொல்லி விடு
அலைகடல் சூழ்ந்தது எம் நாடு
மலையுடன் நதியும் சூழ்ந்திருக்கும்
அருவிகள் குளங்கள் நீர் தருமாம்
குருவிகள் பறவைகள் வாழ்ந்திடுமாம்
ஈழம் எங்கள் தாய்நாடு
தியாகம் எங்கள் பண்பாடு
கோணமலை தான் தலைநகரம்
மாநிலங்கள் இருபதுண்டாம்
புத்தளம் சிலாபம் குச்சவெளி
மாங்குளம் மற்றும் பூநகரி
மாந்தை வாகரை மூதூர்
நல்லூர் வரணி கரைச்சி
முல்லைத்தீவுடன் வவுனியா
பொத்துவில் மடு வெல்லாவெளி
மட்டக்களப்பு அக்கரைப்பற்று
அறுவாக்காட்டுடன் இருபது
சுதந்திரக்காற்று வீசுதிங்கே
சமத்துவம் பேசுவர் மக்களெல்லாம்
கல்வியும் செல்வமும் பெருகுதிங்கே
செந்தமிழ் நாதம் ஒலிக்குதெங்கும்
ஈழம் எங்கள் தாய்நாடு
தியாகம் வீரம் எம் கண்கள்
தமிழர் என்ற பெயரெமக்கு
அகிலம் எங்கும் சொல்லிவிடு

– மாதினி சிறீதரன்
பெதெஸ்டா–ஐக்கிய அமெரிக்கா.

## சின்னச் சின்னப் பிள்ளைகள்

சின்னச் சின்னப் பிள்ளைகள் நாம்- ஈழ
மண்ணின் வித்துக்கள் நாம்
அகிலம் எங்கு விழுந்தாலும்- தமிழர்
பண்பால் தழைத்தோம் நாம்
இரவும் பகலும் உழைத்திட்டார்- தம்
கண்ணைப் போலே காத்திட்டார்
மானம் உள்ள எம் பெற்றோர்- மதிப்பாய்
வாழப் பழக்கி விட்டார்
எண்ணும் எழுத்தும் படிக்கின்றோம்- தமிழை
நன்றாய்க் கதைக்கின்றோம்
ஈழ விடுதலைப் போர் பற்றி- முற்றும்
முழுதாய் சொல்லிடுவோம்
மண்ணில் அழியாத் தியாகிகள்- இவர்
விண்ணை மிஞ்சும் வீரர்கள்
நுண்மதி படைத்த தலைவர்கள்
எங்களின் இடையே வாழ்கின்றார்
மானமுள்ள தமிழ் மக்கள் - எம்
ஈழ மண்ணில் இருக்கின்றார்
எண்ணில் அடங்கா அழிவுகளை
தாங்கி வாழும் தகைமையுடன்
அந்நிய நாட்டில் வளர்ந்தாலும்- தமிழ்தன்
மேன்மை போற்றிடுவோம்
வந்திடும் ஈழநாட்டினையே- விழுதுகள்
போலத் தாங்கிடுவோம்
"எங்கள் மண்ணில் நிற்கின்றோம்- நம்
முன்னோர் உரிமையை எடுக்கின்றோம்"
சொன்னவர் எங்கள் பெரும் தலைவர்- அவர்
நல்கிய வழியைப் பற்றிடுவோம்

– பரஞானம் சதாசிவம்
வாசிங்டன்–அமெரிக்கா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசனின் வருகை

*சிங்கள அரசு தமிழர்களின் கிராமங்களுக்குத் தீ மூட்டுகின்றது. தமிழ் மக்களைப் படுகொலை செய்கின்றது. தமிழர் வாழ்வைப் பலியெடுக்கின்றது. தமிழர் நிலத்தில் யுத்தம் செய்கின்றது. ஆனால், வெளியுலகில் அது புனருத்தாரணம் என்றும், புதிய நிர்மாணம் என்றும் சமாதானம், ஒற்றுமை என்றும் பொய்வேசமிட்டு நடிக்கின்றது. இந்த யதார்த்தத்தை அங்கதச்சுவை ததும்ப புதிய மொழியில், புதிய சொல் முறைமையில் விபரிக்கின்றது 'அரசனின் வருகை'*

**-உமா வரதராஜன்-**

மூடுண்ட அந்த நகரத்துக்கு அரசன் வரும் நாள் அண்மித்துக் கொண்டிருந்தது. யுத்தத்தில் இடிந்துபோன கோவிலைக் கட்டும் பணிகளை ஆரம்பித்து வைக்க அவன் வருவதாகச் சொன்னார்கள். அரசனின் வருகை பற்றிய அறிவிப்புக்களை உடம்பில் ஒட்டிக்கொண்டு எருமைகள் எல்லாம் நகரத்து வீதிகளில் அலைந்து திரிந்தன. முரசுகள் சந்து பொந்துகளெங்கும் சென்று அதிர்ந்தன.

ரத்த ஆற்றின் கரையில் அந்த நகரம் இருந்தது. சிறுகாற்றுக்கு உரசி, தீப்பற்றி எங்கும் மூளும் மூங்கில்கள் நிறைந்த நகரம் அது. கடைசி யுத்தத்தில் மூன்று வருஷங்களின் முன்னால் நடந்தது. யானைகளின் பிளிறல், குதிரைகளின் கனைப்பு, வாட்கள் ஒன்றோடொன்று உரசுமொலி, மனிதர்களின் அவலக் குரல் எல்லாம் இன்றைக்கும் செவிகளில் குடியிருந்தன. அப்போதைய பிணங்களின் எரிந்த வாடை இன்னமும் அகலாமல் நகரத்தின் வானத்தில் தேங்கிப்போய் நின்றது. அண்மைக் காடுகளை உதறிவிட்டும், பிணந்தின்பதற்காக இங்கே வந்த பட்சிகள் யாவும் நகரத்தின் பெரிய விருட்சங்களில் தங்கி இன்னொரு தருணத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தன. கூரை இழந்த வீடுகள், கரி படிந்த சுவர்கள், அந்நகர் தன் அழகு முகத்தின் மூக்கை இழந்த விதம் சொல்லும். ஆந்தைகளின் இடைவிடாத அலறல்களுடனும், நாய்களின் அவ்வப்போதைய ஊளைகளுடனும் நகரத்தின் இரவுகள் கழிகின்றன. முகிலுக்குள் பதுங்கிக்கொண்ட நிலவு வெளியே வருவதில்லை. பால் கேட்டுக் குழந்தைகள் அழவில்லை. நடு இரவில் குதிரைகளின் குளம்பொலிகளும் சிப்பாய்களின் சிரிப்பொலிகளும் கேட்கும். நெஞ்சறை காய்ந்து, செவிகள் நீண்டு, கூரையில் கண்களைப் புதைத்து பாயில் கிடப்பான் ஊமையன்.

ஊமையனும் இன்னும் சிலரும் அந்த நகரத்தில் எஞ்சியிருந்தனர். உயிர் தப்பிய சிலரும், உயிர் தப்ப பலரும் ஆற்றைக் கடந்து வேறு பகுதிகளுக்குச் சென்றார்கள். கரையில் நின்று கையசைத்த பெண்களின் துளிர்த்த நீரில் அந்தப் படகுகள் மறைந்து போயின. ஊமையனுக்கு அம்மாவை விட்டுப்போக மனமில்லை.

ஊமையனின் உண்மையான பெயர் பலருக்கு மறந்துபோய்விட்டது. அதிகம் எதுவும் பேசாததால் அவனுக்கு அந்தப் பெயர் வந்தது. அவன் பேச்சு எவ்விதம் மெல்ல மெல்லக் குறைந்தது என்பதுபற்றி அம்மா அறிவாள்.

கலகக்காரர்களை ஒடுக்க இந்த நகரத்துக்கு அரசன் அனுப்பிய படையுடன் கூடவே ஆயிரமாயிரம் பிணந்தின்னிக் கழுகுகளும் தம் சிறகுகளால் சூரியனை மறைத்தபடி இங்கே நுழைந்தன. கோயிலின் சிலை, பெண்ணின் முலை, குழந்தைகளின் தலை என்ற வெறியாட்டம். மதயானைகள் துவம்சம் செய்த கரும்புத் தோட்டமாயிற்று அந்நாட்களில் இந்த நகரம்.

ஊமையனும் ஒருநாள் பிடிபட்டவன்தான். முகத்து மயிரை வழிக்க அவன் வைத்திருந்த சவரக்கத்திகூட ஓர் ஆயுதம் எனக் குற்றம்சாட்டி, அவனுடைய கைகளைப் பின்புறம் கட்டி பாதணிகள் இல்லாத அவனை கொதி மணலில் அழைத்துச் சென்றனர். நடுவெய்யிலில், நடுத்தெருவில் முழங்காலில் நிற்கவைத்து சூரிய நமஸ்காரம் பண்ணச் சொன்னார்கள். வாயில் கல்லைத்திணித்து, வயிற்றில் குத்தினார்கள். 'அம்மா' என்ற அவனுடைய சத்தம் கல்லைத்தாண்டி வெளியே வரவில்லை.

மாலையில் வெறிச்சோடிய தெருவழியாக தளர்ந்த நடையும், வெளிறிய முகமுமாக ஊமையனும் இன்னும் சிலரும் நகரத்துக்குத் திரும்பிவந்தனர். மரணத்தின் தூதுவன் மறுபடியும் கைதட்டிக் கூப்பிடுவான் என்ற அச்சத்தில் திரும்பிப் பாராமல் நிழல்கள் இழுபடத் தள்ளாடித் தள்ளாடி அவர்கள் வந்தனர். தெருமுனையில் அவர்கள் தோன்றியதும் பெண்கள் ஓட்டமும் நடையுமாக அவர்களிடம் வந்தனர். ஓடி ஓடி ஒவ்வொரு முகமாகத் தேடி அலைந்தனர். வராத முகங்கள் தந்த பதற்றத்தில் நடுங்கினார்கள். ஒப்பாரி வைத்து அழுதார்கள். 'என்ன நடந்தது என்ன நடந்தது' என்று ஓலமிட்டார்கள். தனதப்பன் போய்ச் சேர்ந்துவிட்டான் என்ற சேதி தெரியாமல் ஒருத்தியின் இடுப்பிலிருந்த குழந்தை விரல்சூப்பிச் சிரிக்கின்றது. 'என்ன நடந்தது என்ன நடந்தது' என்று ஒருத்தி ஊமையனின் தோளைப்போட்டு உலுக்கி ஒப்பாரி வைக்கின்றாள். பேய்க்காற்றின் உரசலில் கன்னியர் மடத்தின் சவுக்கு மரங்கள் இன்னும் துயரத்தின் பாடல்களைப் பரப்புகின்றன.

வாழ்வதற்கான வரமும் அதிர்ஷ்டமும் தனக்கிருப்பதாக எண்ணி ஒரு சிறுகணம் உள்ளம் துள்ளிய சிறுபிள்ளைத் தனத்துக்காக வெட்கப்பட்ட ஊமையன், தன் தலைமேல் கத்தி தொங்கும் வாழ்க்கை விதிக்கப்பட்டிருப்பதை மெல்ல உணர்ந்தான். மௌனத்தில் அவன் காலம் நகர்ந்தது. வீட்டுக்குள் முடங்கிய அவனை நான்கு சுவர்களும் நெரித்தன. வீட்டின் கூரை பல சமயங்களில் நெஞ்சில் இறங்கிற்று. ஒளியைத் தவறவிட்ட தாவரம் போல ஊமையன் வெளிறிப்போயிருந்தான். தேவாங்கின் மிரட்சியுடன் தடுமாறிக்கொண்டிருந்தான்.

பகலிலும் இரவிலும் கனவுகளில் அலைந்தான். கண்கள் தோண்டப்பட்ட, நகங்கள் பிடுங்கப்பட்ட மனிதர்கள் 'எங்களுக்கோர் நீதி சொல்' என்று தள்ளாடித் தள்ளாடி அங்கே வந்தனர். அரைகுறையாக எரிந்த தெருச் சடலங்கள் வளைந்தெழுந்து 'நாங்கள் என்ன



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தோம்' என்று முனகின. நீர் அள்ள உள்ளே இறங்கிய வாளியைக் கிணற்றில் கிடந்த பிணங்களின் கையொன்று மெல்லப் பற்றிக்கொண்டது. கழுத்தை இழந்த கோழியொன்று துடிதுடித்து, உயிரைத்தேடி அங்குமிங்கும் அலைந்து மண்ணில் சாயும். குட்டித்தாச்சி ஆட்டின் வயிறு மீது குதிரை வண்டிச் சக்கரங்கள் செல்லும். மயிர் உதிர்ந்த தெரு நாய்களின் வாய்கள் மனிதர்களின் கையையோ காலையோ கவ்வி இருக்கும்.

ஊமையனின் கனவில் அரசனும் வந்திருக்கின்றான். சாந்தசொருபனாய், கடைவாய் கெழிந்த புன்னகையுடன் அந்தக் கனவில் அவன் வந்தான். கடைவாய் கெழிந்த இந்தப் புன்னகைக்குப் பின்னால் முதலைகள் நிறைந்த அகழியும், நச்சுப் பாம்புகள் பதுங்கிக்கொண்ட புற்றொன்றும், விஷ விருட்சங்களைக்கொண்ட வனாந்தரமும் ஒளிந்திருப்பதாகப் பலர் பேசிக்கொண்டனர். இதைப் போல் அரசனைப் பற்றிப் பல கதைகள், வெண்புறாக்களை வளர்ப்பதில் அவன் பிரியம் கொண்டவன் என்றும், மண்டையோடுகளை மாலையாக்கி அணிவதில் மோகமுள்ளவன் என்றும் ஒன்றுக்கொன்று முரணான கதைகள், பல நூற்றாண்டுகள் மண்ணுக்குள் யாத்திரை செய்து புதையுண்டு கிடந்த தன் முன்னோரின் கிரீடத்தைக் கண்டெடுத்து தலையில் சூடிக்கொண்டான் அவன் எனவும், செல்லுமிடமெல்லாம் சிம்மாசனத்தையும் கொண்டு திரிந்தான் என்றும் காற்றில் வந்தன பல கதைகள்.

அரசவை ஓவியர்கள் வெகு சிரத்தையுடன் உருவாக்கியிருந்த அந்தப் புன்னகை சிந்தும் முகத்துடனேயேதான் ஊமையனின் கனவிலும் அரசன் வந்தான். கோவில் மணி விட்டு விட்டொலிக்கின்றது. பாட்டம் பாட்டமாக வானத்தில் பறவைகள் அலைகின்றன. வேதம் ஓதுகின்றனர் முனிவர்கள். அது ஒரு நதிக்கரையோரம், பனி அகலாத புல்வெளியில் அரசன் வெண்ணிற ஆடைகளுடன் தன் கையிலிருந்த வெண்புறாவைத் தடவியபடி நடந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் ஊமையன். அரசனின் சௌந்தர்யத்தைக் கண்டு சூரியன் சற்றுத் தயங்கித் தடுமாறிவந்த ஓர் இளங்காலை.

அரசன் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

'மேகங்கள் அகன்று கொண்டிருகின்றன, இன்னும் கொஞ்சக் காலம், வெளிச்சம் வந்துவிடும்' அரசனின் குதூகலமான மனநிலை ஊமையனுக்கு ஓரளவு தைரியத்தைத் தந்தது. 'அரசே வெளிச்சம் வருவதற்குள் நாங்கள் இறந்துவிட மாட்டோமா, இப்போதும் என்ன நாங்கள் நடைப்பிணங்கள் அல்லவா'


ஊமையனைத் திரும்பிப் பார்த்து அரசன் சிரித்தான்.

'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'

ஊமையன் வார்த்தைகளை மென்று விழுங்கிச் சொன்னான்.

'போர் என்றால் தர்மமில்லையா அரசே? குடிமக்கள் செய்த பாவம் என்ன? சிசுக்கள், நோயாளிகள், முனிவர்கள், பெண்கள் இவர்களைக் கொல்வது யுத்த தர்மமா?'

அரசன் புன்னகைத்தான்.



'தேர் ஒன்று நகரும் போது புற்கள், புழுக்கள் பற்றி முனகுகின்றாய் நீ, எனக்குத் தெரியும் எல்லாம் தெரியும்'

'நீங்கள் மனது வைத்தால் எதுவும் முடியும்' என்றான் ஊமையன். அரசனின் நடை திடீரென்று நின்றது.

'ஆம் நான் நினைத்தால் எதுவும் சாத்தியம்.. இதோ பார்' என்றான் அவன். அரசனின் கையிலிருந்த வெண்புறா சட்டென்று மாயமாக மறைய, முயலின் அறுபட்ட தலை ரத்தத்தில் தோய்ந்து அங்கேயிருந்தது.

அரசனின் வருகை நெருங்க நகரம் அமர்க்களப்பட்டது. காவல்பரண்கள் புதிது புதிதாய் முளைத்தன. இரவு பகலாய் வேலைகள் நடந்தன. சவக்கிடங்குகளின் முன்னால் பூச்செடிகள் நட்டு நீருற்றினார்கள். இலையுதிர் காலம் நிரந்தரமாகிவிட்ட இந்த நகரத்தின் வாயில்களில் வேற்றூர்களிலிருந்து மரங்களை வேர்களுடன் பெயர்த்துக் கொணர்ந்து நட்டார்கள். நூறு வருஷத் தொடர் மழையாலும் கழுவமுடியாத ரத்தக்கறை கொண்ட மதில்களுக்குப் புது வர்ணம் பூசினார்கள். புன்னகை சிந்தும் அரசனின் ஓவியங்கள் சுவரெங்கும் நிறைந்தன.

சோதனைச் சாவடிகளில் மாட்டு வண்டிகள் நீளத்துக்கு நின்றன. கொட்டும் மழையில் ஆடைகள் நனைய பொதிகளைத் தூக்கி தலையில் வைத்தபடி மௌனமாக ஊர்ந்தனர் ஜனங்கள். நாக்குகளை நீட்டச்சொல்லி அங்கே புதைந்திருக்கக்கூடிய அரச விரோத சொற்களை அவர்கள் தேடிப் பார்த்தனர். நகரத்துக்கு வேளை தெரியாமல் வந்த பசுவொன்றின் வயிற்றைக் கீறி அதன் பெருங்குடலை ஆராய்ந்து பார்த்தனர். எருமையின் குதத்தினுள் கைவிட்டு ஏதேனும் கிடைக்குமா என்று துழாவினார்கள்.

மீசை நுரை அகலாத கள்ளுக்குடியர்கள் தப்பட்டம் அடித்து வீதிகளில் ஆட்டம் போட்டனர்.

'கோயில் தந்தான்
எங்கள் மன்னன்
கோயில் தந்தான்
இன்னுந் தருவான்
கேட்கும் எல்லாம் தருவான்
தில்லாலங்கடி... தில்லா...'

திண்ணையிலிருந்த ஊமையனின் தாத்தா வெற்றிலை இடிப்பதை நிறுத்திவிட்டு, பாட்டுவந்த திக்கைப் பார்த்தார். பார்வை தெரியாத அவருக்கு ஓசைகளே உலகம். கள்ளுக்குடியனின் பாடல் தாத்தாவுக்குக் கோபத்தைத் தந்திருக்கவேண்டும். கையுரலில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்த வெற்றிலையை வேகமாக இடித்தவாறிருந்தார்.

'கோவிலைத் தருபவனுக்கு மறுபடி இடிக்க எவ்வளவு நேரமாகும்' என்று முனகிக்கொண்ட தாத்தா, மேலே எதுவும் பேச விரும்பாமல் வெற்றிலையை வாய்க்குள் போட்டுக் குதப்பிக் கொண்டார்.

அரசன் வருவதற்கு ஒரு தினம் இடையிலிருந்தது கண்ணயர்ந்து கொண்டிருந்த தாத்தா, குதிரைகளின் கனைப்பொலியால் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். வீட்டு வாசலுக்கு வந்த பெண்கள் வெளியே எட்டிப் பார்த்துவிட்டு மறைந்தனர். பதற்றத்துடன் வந்த அம்மாவை ஊமையன் வெறித்துப் பார்த்தான். அம்மாவின் உதடுகள் உலர்ந்து, விழிகள் வெகுண்டிருந்தன. வானத்தை அண்ணாந்து பார்த்து இரு கைகளாலும் கும்பிட்டான்.

வழக்கம் போல் எல்லாம் நிகழ்ந்தன. அந்தக்குடியிருப்பின் ஒவ்வொரு வீட்டினுள்ளும் சிப்பாய்கள் நுழைந்து புறப்பட்டனர். ஊமையனை அவர்கள் கூட்டிச் சென்றபோது, அம்மா என்னென்னவோ சொல்லி அழுது பார்த்தாள். மனித பாஷை புரிந்த குதிரைகள் மாத்திரம் தலைகளை அசைத்துக் கனைத்துக் கொண்டன. சிப்பாய்களை நோக்கிக் குரைத்தவாறு, ஊமையனின் கால்களை மறித்தபடி தெருமுனை வரை வந்தது அவனுடைய நாய். சிப்பாய்கள் அதை எட்டி உதைத்து விரட்டினார்கள். பிடிபட்ட ஆண்களின் பின்னால் பெண்கள் தங்கள் வாய்களிலும், வயிறுகளிலும் அடித்துக்கொண்டு பெருங்குரலில் ஒப்பாரி வைத்துத் தொடர்ந்து சென்றனர். குதிரை வீரர்கள் அவர்கள் பக்கமாக ஈட்டிகளை ஓங்கி அச்சம் காட்டி விரட்டினார்கள். குதிரைகள் கிளப்பிய புழுதிப் படலத்தினூடாக தங்கள்



ஆண்பிள்ளைகள் சென்று மறைவதைத் தெருமுனையில் செய்வதறியாது நின்றுவிட்ட பெண்கள் கண்டனர். சுவரில் முதுகை முட்டக் கொடுத்தபடி நின்ற தாத்தா அங்கு நின்றவர்களுக்கு ஆறுதல் தரும் விதத்தில் சொன்னார். 'ஒன்றும் ஆகாது நாளைக்கு அரசன் வருகிறான் அல்லவா? அதற்கு ஆள் சேர்க்கிறார்கள்' சுவரிலிருந்த பல்லியொன்று அவ்வேளை பார்த்துச் சத்தமிட்டது. தாத்தாவுக்கு மிகுந்த சந்தோஷத்தைத்தந்தது.

பிடிபட்ட அனைவரும் நகரத்து சத்திரங்களில் அடைக்கப்பட்டனர். இவர்களைப் போன்ற சுற்றியுள்ள ஊர்களிலிருந்தெல்லாம் கொண்டுவரப்பட்டவர்களால் சத்திரங்கள் நிரம்பி வழிந்தன. ஒருவரோடொருவர் பேசாமல் தங்கள் தலைவிதியை எண்ணி நொந்தவர்களாக அங்கு எல்லோருமிருந்தார்கள். சிப்பாய்களின் சிரிப்பொலி அவ்வப்போது பழுக்கக் காய்ச்சிய இரும்பாக இவர்களின் காதுகளில் இறங்கிற்று.

ஊமையன் அந்தக் குளிர்ந்த சுவரில் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டான். இருள் நிறைந்த பலிபீடத்தில் வெட்டரிவாள் ஒன்று பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. காதுகளில் ஊளையிடும் காற்றில் சுருக்குக் கயிறொன்று அங்குமிங்குமாக அசைந்து ஊஞ்சலாடுகின்றது. கழுத்துவரை மண்ணில் புதையுண்ட அவனை நோக்கி யானையின் தடித்த பாதங்கள் முன்னேறி வருகின்றன. அவனுடைய நிர்வாண உடம்பில் புதிது புதிதாய் ரத்தவரிகளை எழுதுகின்றன சாட்டைகள்.

கனவுமற்ற நினைவுமற்ற இரண்டுங்கெட்டான் பெருவெளியில் அவனுடைய வீடு வந்தது. கூட்டிப் பெருக்காத வாடிய பூக்களும், சருகுகளும் வாசலில் கிடக்கின்றன. உற்சாகமிழந்த நாய் வாசற்படியை மறித்துப் படுத்திருக்கின்றது. சாம்பல் அள்ளாத அடுப்படியில் சோம்பல் பூனை. சமையலறையில் குளிர்ந்து போயிருக்கும் பாத்திரங்கள். ஒரு கருநிற வண்டைப்போல சுவர்களிலே முட்டிமோதித் திரிவார் தூக்கம் வராத தாத்தா. உண்ணாமல், உறங்காமல் கண்களின் ஈரம் காயாமல் அம்மா சுருண்டு கிடப்பாள்.

நிமிஷங்களைப் பெரும் பாறைகளாய் தன் தலையில் சுமந்து இருட்டினில் அலைந்தான் ஊமையன். சத்திரத்துக்கதவு திறபட்டதும் உள்ளே புகும் காற்றுக்காகவும், வெளிச்சத்துக்காகவும் அவன் காத்துக் கிடந்தான்.

விடிந்தது, வெளிச்சத்தை முந்திக்கொண்டு கதவு வழியாக சிப்பாய்களின் தலைவன் உள்ளே நுழைந்தான்.

'ஏய் எழும்புங்கள்... எழும்புங்கள்..' என்று அதட்டினான்.

அவர்களை ஏற்றிக்கொண்டு நகரத்து வீதிகளில் மாட்டுவண்டிகள் விரைந்துசென்றன. மாட்டுவண்டிகளின் தொடர்ச்சியான ஜல் ஜல் சத்தத்தைக்கேட்டு அங்காடிகளைத் திறந்து கொண்டிருந்த வணிகர்கள் அப்படியே நின்றார்கள். எண்ணெய் வழியும் முகங்களுடனும், தூக்கம் நிறைந்த கண்களுடனும், வாரப்படாத தலைகளுடன், பசிகொண்ட வயிறுகளுடன் உலகத்தின் மிகக் கேவலமான விலங்குகளைப் போல் இப்படிப் போவது ஊமையனுக்குப் பெரும் வெட்கத்தைத் தந்தது.

இடியுண்ட கோயிலின் அருகிலிருந்த




குளக்கரையில் அனைவரும் இறக்கப்பட்டனர். சிப்பாய்களினால் வரிசையாக அமர்த்தப்பட்டனர்.

வானம் இருண்டிருந்தது. மழையையும் அரசன் கையோடு கூட்டிவந்துவிட்டதாக சிப்பாய்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

'ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ கம்பீர....' என்று ஒரு குரல் திடீரென வாத்தியங்கள் முழங்கின. மகுடிவாத்திய விற்பன்னர்கள் நகரத்து சிறுமிகளை பாம்பாட்டம் ஆட்டுவித்தார்கள். கள்ளுக்குடியர்கள் குஸ்தியடித்தவாறு வந்தனர். பின்னால் அரசன் வந்துகொண்டிருந்தான். அவன் வருகின்ற வழியெல்லாம் மலர் தூவினார்கள். முனிவர்கள் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

உயரமானதோர் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலை அடைந்த அரசன் அனைவருக்கும் கையசைத்தான். தொண்டை பெருத்த கவிஞர்கள் அந்தக் குளிர் வேளையிலும் பனையோலைச் சுவடிகளால் அரசனுக்கு சாமரம் வீசினார்கள். ஒருபக்க மீசையை மழித்துக் கொண்ட எடுபிடிகள் அரசனின் பின்புறமாக உட்கார்ந்து, அவனுக்கு அரிப்பெடுக்கையில் முதுகைச் சொறிந்து கொடுத்தனர்.

ஊமையன் அண்ணாந்து பார்த்தான். கறுப்பு ஆடையைக் கழற்றி வீசி அம்மணங்கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தது வானம். வானத்துப் பறவையொன்றின் எச்சம் போல ஒரு சொட்டுக் கண்ணீர் ஊமையனின் முகத்தில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதலில் விழுந்தது. பின்னர் வேகமான பல சொட்டுகள், இரைச்சல், காற்று திசைகாட்ட மழை தொடுக்கும் யுத்தம்.

பலத்த மழையின் நடுவே அரசன் பேச எழுந்தான். கொட்டுகின்ற மழையிலும் அசையாமலிருக்கும் மக்கள் அவனுக்கு வியப்பளித்திருக்கவேண்டும்.

'என் உயிரிலும் மேலான மக்களே...'

மழையோசையை வெல்ல முயலும் அரசனின் குரல். குலைதள்ளிய வாழைகளாலும், குருத்தோலைகளாலும், செந்நிறப் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ்நின்று மழையில் நனையாத அரசனின் குரல். ஊமையன் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தான். பேய் பிடித்த பெண்ணாக வாயிலும், வயிற்றிலும், முதுகிலும், முகத்திலும் மாறி மாறி அறைகின்ற மழை.

'இடியுண்ட கோவிலைப் புதுப்பிக்க இன்றைக்கு வந்திருக்கின்றேன். இன்னும் என்னென்ன வேண்டும் சொல்லுங்கள்'

காற்றும் மழையும் பதில் குரல் எழுப்பின. சிப்பாய்களின் ஈட்டி முனைகளுக்கும் உருட்டும் விழிகளுக்கும் பயந்து, அசையாமல் மௌனமாயிருந்தனர் ஜனங்கள்.

'கொட்டுகின்ற மழையிலும் என்னைப் பார்க்க இவ்விதம் கூடியிருப்பது என்னை உணர்ச்சி கொள்ளச் செய்கின்றது. உங்களுக்கு என்ன வேண்டும்? கேளுங்கள்'

ஊமையன் மீண்டும் அண்ணாந்து பார்க்கின்றான். வருணபகவான் பற்களை நறநறவென்று கடிக்கின்றான். நீரேணி வழியாக இறங்கும் அவன் கைகளில் மின்னல் சாட்டைகள். சுழித்துச் சுழித்துப் பாதையெடுத்து ஓடுகின்றது தண்ணீர். நெருப்புப் பாம்புகள் வானமெங்கும் நெளிகின்றன.

'மாட மாளிகைகள் கட்டித் தருகின்றேன். வீதிகளைச் செப்பனிட இன்றே ஆணையிடுகின்றேன். குளங்களைத் திருத்தச் சொல்கின்றேன். இன்னும் என்ன வேண்டும்? அரங்குகள் வேண்டுமா? தானியங்கள் தேவையா? பட்டாடைகள் வேண்டுமா? என்ன வேண்டும் சொல்லுங்கள்... இவற்றையெல்லாம் நான் தரத்தயார். ஆனால் ஒருபோதும்...'

அரசன் தன் வாக்கியத்தை முடிப்பதற்குள் ஒரு பெரிய மின்னல், வானத்திற்கும் பூமிக்குமாக கோடிழுத்த ஒரு நீண்ட மின்னல். ஒருகணம் கண்ணொளி மங்க அதிர்ந்து போனான் ஊமையன். கண்களைக் கசக்கிவிட்டு அவன் உயரத்தே பார்த்தான்.

பேசிக்கொண்டிருந்த அரசன் மாயமாக மறைந்து போயிருந்தான்.

# தமிழர் வரலாற்றில் பெப்ரவரி மாதம்

### சிங்களம் மட்டும் சட்டம்

மூத்த சிங்கள இனவாதியான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டம் 08.02.1956 அன்று கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தால் இலங்கைத்தீவில் தமிழ் இரண்டாம்பட்ச மொழியாக்கப்பட்டது.

### தியாகி திருமலை நடராஜன் நினைவு நாள்

04.02.1957அன்று சிங்ளச் சிறீ சட்டத்தை எதிர்த்து தமிழர் தேசமெங்கும் சிறீலங்காவின் சுதந்திரதினத்தை தமிழர்கள் பகிஸ்கரித்தனர். திருமலையில் சிங்கக்கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற 22 வயது நிரம்பிய இளைஞனான திருமலை நடராாஜன் சுட்டுக் கொல்லப்பட்டான். இனப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய தியாகி நடராஜன், எவ்.ஜி.மனுவல். டீ. சில்வா என்ற சிங்களக் காடையனால் கோழைத்தனமான முறையில் சுடப்பட்டான்.

### சிறீலங்காப் பொலிஸார் மீதான முதல் தாக்குதல்

14.02.1977 அன்று காங்கேசன்துறை மாவிட்டபுரப் பகுதியில் சிறீலங்காப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோத்தர் ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

### சிறீலங்காவின் காவல்துறைப் பரிசோதகர் கொல்லப்பட்டார்

தமிழின அழிப்பில் முன்னின்ற பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியான பரிசோதகர் விஜயவர்தனாவும் அவரது சாரதியும் விடுதலைப் புலிகளால் 18.02.1983 அன்று சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### குருநகர் இராணுவ முகாம் தகர்ப்பு

பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் வதை முகாமாக விளங்கியதும், சிறீலங்கா இராணுவத்தின் பிராந்தியக் காரியாலயமாக விளங்கியதுமான குருநகர் இராணுவ முகாம் கட்டிடங்கள் விடுதலைப் புலிகளால் 24.02.1984 அன்று வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன.

### கொக்கிளாய் இராணுவ முகாம் மீதான தாக்குதல்

13.02.1985 அன்று கொக்கிளாய் சிறீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே தமிழீழ விடுதலை வரலாற்றில் முதலாவது இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சி ஆகும். இத்தாக்குதல் 5 மணித்தியாலங்கள் நீடித்தது. இத்தாக்குதலில் நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், முப்பதிற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இதே வேளை நாயாற்று முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத் தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் நடவடிக்கையின் விளைவாக சிறீலங்கா இராணுவம் திரியாய், கொக்கிளாய் பகுதிகளிலிருந்து பின்வாங்கி பதவியாவில் நிலைகொண்டது.

### உடும்பன்குளப் படுகொலை

தென்தமிழீழத்தின் உடும்பன்குளப் பகுதியில் வயல் வேலை செய்துகொண்டிருந்த 60 தமிழர்கள் சிறீலங்கா அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வைக்கோலுக்குள் வைத்து எரியூட்டப்பட்டனர். இச்சம்பவம் 19.02.1986 அன்று இடம்பெற்றது.

### லெப்.கேணல் பொன்னம்மான் வீரச்சாவு

விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் மூத்த தளபதியுமான லெப்.கேணல் பொன்னம்மான் 14.02.1987 அன்று கைதடியில் இடம்பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். ஆயிரக்கணக்கான புலிவீரர்களை உருவாக்கிய பயிற்சி முகாம்களுக்கு பொறுப்பாளராகவும், இராணுவத் தொழில்நுட்பப் பிரிவில் பலசாதனைகளையும் இவர் படைத்தார். இவருடன் மேஜர் கேடில்ஸ் உட்பட 7 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

### வன்னிவிக்கிரம முறியடிப்பும் உலங்குவானூர்தி தகர்ப்பும்

வவுனியா பூவரசங்குள வழியாக வன்னி விக்கிரம என்ற குறியீட்டுப் பெயருடன் முன்னேற முற்பட்ட சிறீலங்கா இராணுவம் வந்த வழியே திருப்பி அனுப்பப்பட்டது. இதன் போது 10.02.1991 அன்று உலங்குவானூர்தி ஒன்று விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டது.

### மீனவர் படுகொலை

18.02.1994 அன்று முல்லை பூனைத் தொடுவாய் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டனர்.

### கிளிநொச்சியின் மையப்பகுதி மீட்பு

கிளிநொச்சியூடாக யாழ் குடாநாட்டிலிருந்து பேரூந்தில் சுதந்திரதினத்திற்கு தமிழர்களைக் கண்டிக்குக் கொண்டு வருவேன் எனச் சபதம் செய்த ரத்வத்தையின் பேராசை, 01.02.1998 அன்று கிளிநொச்சியின் மையப் பகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டதையடுத்து நிராசையானது. அதன் போது விடுதலைப் புலிகளால் 5 கி.மீ நீள நகரப்பகுதி மீட்கப்பட்டது, அத்துடன் பலநூற்றுக்கணக்கான முன்னணி சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் காய மடைந்தனர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'எல்லாம் அவன் செயல்'

நவமும் நண்பர்களும் அன்றைக்கு அப்பு வருவதற்கு முன்னதாகவே ஆலமரத்தடியில் கூடிவிட்டிருந்தார்கள்.

'என்ன அப்புவை இன்னும் காணேல்லை? வழமையா இந்த நேரத்துக் கெல்லாம் தன்ரை செல்லக்குஞ்சு செவிவளைஞ்சானோடை வந்து சேர்ந்திடுவாரே....?' குமரன் கேட்டான்.

'இந்தாளுக்கு ஏதன் சுகமில்லையோ...? அவனுடைய கேள்வியில் கவலை தொனித்தது. 'அல்லது பெரிசு மாசிப்பனிக்கு இழுத்துப் போர்த்துக்கொண்டு இன்னும் மூசிமூசி நித்திரை கொள்ளுதோ?' காந்தன் சொன்னான்.

அவர்களின் பொறுமையை மேலும் சோதிக்காமல் கடைசியில் அப்புவே வந்து சேர்ந்தார். அப்புவின் செல்லப்பிராணியோ அப்புவை முந்திக்கொண்டு ஓட்டத்தில் வந்தது.

நவம் கேட்டான். 'அதெல்லாம் கிடக்கட்டும், இண்டைக்கு இவ்வளவு நேரம் பிந்தி வாறியள்... ஏன் என்ன நடந்தது? நாங்கள் உங்களுக்கு என்னவோ ஏதோ எண்டு பயந்து போய்ட்டம்'

'என்னடாம்பி செய்யிறது? என்ரை பேத்திக்கு பால் இல்லாட்டிக்கும் பறவாயில்லை. சீனி போட்டுக் கொஞ்சம் தேத்தண்ணி குடுப்பம் எண்டு கடை கடையா ஏறி இறங்கினன். ஒருதரும் இல்லையெண்டிட்டாங்கள். கடைசியா உவள் அன்னபாக்கியம் குழந்தைக் கெண்டாப்போலை இரக்கம் பாத்து தன்னட்டை இருந்ததெண்டு கொஞ்சம் சரையிலை மடிச்சுத் தந்தாள். வாங்கி மேளிட்டைக் குடுத்துப் போட்டு நேரை இஞ்சைதான் வாறன்' அப்பு ஏதோ நினைவில் கண்கலங்கினார்.

'என்னப்பு?' நவம் ஆதரவாகக் கேட்டான். 'இல்லையடாம்பி... இந்தச் சண்டைக் குள்ளை ஆப்பிட்ட சின்னனுகள்தான் பாவம். ஆமிக்காறன் ஏன் அடிக்கிறான்... நாங்கள் ஏன் இப்பிடிப் பட்டினி கிடக்கிறம்... ஏன் வீடு வாசலிலை இருக்க முடியாமல் இப்பிடிக் காடுமேடெல்லாம் அலையிறம் எண்டதுகூடத் தெரியாத பிஞ்சுப் பாலனுகள்... அதுகளையும் பொருளாதாரத் தடை எண்ட பேரிலை இந்த அழிஞ்சுபோவானுகள் சித்திரவதை செய்யிறாங்கள்' அப்பு மீண்டும் கலங்கினார்.

'உங்களுக்கொரு சங்கதி தெரியுமே அப்பு... வன்னியிலை பொருளாதாரத் தடையாலை சாமானுகளெல்லாம் ஆனைவிலை, குதிரைவிலையெண்டு பாத்தா.. தெற்கிலை பொருளாதாரச் சீர்கேட்டாலை விலையள் ஜெட் வேகத்திலையெல்லே ஏறிக்கொண்டு போகுதாம்' அப்புவைத் தேற்றுவதுபோல சொன்னான் நவம்.

'எல்லாம் அவன் செயல்' அப்பு விழிகளைத் துடைத்துக்கொண்டு சொன்னார். 'என்னப்பு நான் என்னவோ சொல்லுறன் நீங்கள் என்னவோ எல்லாம் அவன் செயல் எண்டு சொல்லுறியள்... எல்லாம் அவள் செயல் எண்டு சொல்லுங்கோ சந்திரிகாவாலை தானே இவ்வளவு சீர்கேடும்' நவம் எரிச்சலோடு கேட்டான்.

'இல்லையடா தம்பி! நம்மடையாக்கள் போர்நிறுத்தம் செய்ய சிறீலங்கா அரசாங்கத்திலை உள்ளவை என்ன சொன்னவை? புலியள் பலவீனப்பட்டுப் போனாங்கள். அவையளாலை இனிச் சண்டை பிடிக்கேலாது. அதுதான் தணிஞ்சு போச்சினம் எண்டு வாய் புசத்தினவை'

'புலி சும்மா இலையானைக் கலைக்கப் பாயாது கண்டியோ... அதுக்குத் தோதான இரை வருமளவுக்கும் அது பதுங்கித்தான் இருக்கும். இப்ப அரசியல் எண்ட பற்றைக்குள்ளை அது பதுங்கியிருக்கு. அது பதுங்கியிருக்கிறதைப் பாத்திட்டு உந்தப் பேயனுகள் நினைக்கிறாங்கள் அது களைச்சுப் போய்ப் படுத்திருக்கெண்டு... ஆனா, சரியான இரை வரேக்குள்ளை சரியான தருணம் பாத்து, அது பாயுமெண்டது அரசியலை நல்லா அவதானிச்சுக் கொண்டிருக்கிறவைக்குத்தான் விளங்கும்' அப்பு விளக்கினார்.

'அது சரியப்பு! எல்லாம் அவன் செயல் எண்டு ஏன் சொன்னீங்கள்?' குணம் அவசரப்பட்டான்.

'எட பொடியா! எங்கடை தலைவர் நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார் எண்டு எப்ப அறிவிச்சவர் தெரியுமோ? இலங்கைக்கு உதவி வழங்கிற நாடுகளின்ரை கூட்டம் பரீசிலை நடக்கிறதுக்கு முந்தி, அப்பிடி நாங்கள் சமாதானக் கொடியைத் தூக்க இவள் சந்திரிகா வாளேந்தின சிங்கம் மாதிரிச் சண்டைக்கு நிக்கிறாளேயெண்ட காரணத்தினாலைதான் சிறீலங்கா அரசாங்கத்துக்கு அது எதிர்பார்த்த நிதியுதவி கிட்டேல்லை. இருந்த காசையெல்லாம் சண்டையிலை விட்டுப்போட்டு மற்ற நாடுகளின்ரை கையை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தவைக்கு இது பேரிடியாப்போச்சுது. நாட்டிலை பணப்புழக்கம் குறைஞ்சு வறுமைக்கோட்டுக்குக் கீழை பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிப் பாய்ஞ்சடிச்சுக்கொண்டு போகத் தொடங்கிட்டுது. இதைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியேல்லை. அம்மையாரைப் பெத்தவவின்ரை காலத்திலையும், பாணுக்கு கியூ விலை காத்துக் கிடந்தனாங்கள்தானே... அந்த நிலைமையை நோக்கி நாடு போய்க் கொண்டிருக்குது'

'சும்மா பாணில்லையப்பு! புழுவும் பூச்சியும் கூடு கட்டின பாண்' நவத்திற்கு ஆறு வயதில் விடிகாலையில் எழுந்திருந்து வரிசையில் பாணுக்கு நின்ற வயிற்றெரிச்சல் இன்னமும் போகவில்லை. 'இப்படியொரு தட்டுப்பாடான நிலைமையைக் கட்டுப்பாட்டிலை வைச்சிருக்க முடியாத மத்தியவங்கி என்ன செய்துதெண்டா நாணயத்தை மிதக்கவிட்டுது'

'இப்ப விளங்குதப்பு! எல்லாம் அவன் செயல்தான்' இளைஞர்கள் ஒரே குரலில் சொன்னார்கள்.

'அப்பு, இனி வெளிநாட்டிலை இருக்கிற ஆக்கள் கொஞ்ச டொலர் அனுப்பினா இஞ்சை நிறைய ரூபா கிடைக்கும் எண்டிறியள்?' குமரன் கேட்டான்.

'ஆனா, ஒண்டு எங்கடையாக்கள் இனி காசு அனுப்பிறபோது எங்கடை இனசனத்தை நேரடியாப் போய்ச் சேருற மாதிரித்தான் அனுப்பவேணும். அரசாங்கத்துக்கு அவை அனுப்பிற காசாலை நிறையப் பணப்புழக்கம் வாற மாதிரிப் பண்ணப்படாது'

'ஓமப்பு தென்னாபிரிக்க கறுப்பின மக்களுக்குச் சுதந்திரம் கிடைக்க முக்கியமான காரணங்களிலை ஒண்டா இருந்தது அப்போதை இனவாத அரசுக்கெதிரான பொருளாதாரத் தடைதான். அப்பிடிப் பொருளாதாரரீதியா ஒரு வீழ்ச்சி வந்தாத்தான் எங்கடை பக்கத்து நாட்டுக்காறன் திருந்துவான்' நவம் கோபத்தோடு கூறினான்.

'ஓமடாம்பி அப்பிடி அந்நியச் செலாவணி வருமானத்தை சிறீலங்கா அரசாங்கத்துக்குக் கொடுக்காமல் எங்கடை சனம் கைகழுவி விட்டால் அது சண்டைக் களத்திலை எதிரியின்ரை கை கீழை இறங்க ஒரு காரணமாய் அமையும்' அப்பு ஆமோதித்தார்.

'அது ஒருபக்கமிருக்க, எங்கடை யூனிவேர்சிற்றிப் பொடியள் 'பொங்குதமிழ்' எழுச்சி எண்ட ஒண்டை வைச்சாலும் வைச்சாங்கள். அது பெரிய காட்டுத் தீ மாதிரி தென்பகுதியெல்லாம் பரவியிட்டுது' குமரன் பெருமை பொங்கச் சொன்னான்.

'அது காட்டுத்தீ இல்லை, காட்டுத் தீ அழிக்கும். அது புரட்சித் தீ, ஒரு தேசத்தை ஆக்கும்' என்றார் அப்பு.

'அங்கை தென்பகுதியளிலை இந்தச் சாமான்களின்ரை விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இதுகளை எதிர்த்து ஊர்வலங்கள் எல்லாம் நடக்குதாமே?' குணம் கேட்டான்.

'எதிர்க்கட்சியாய் இருக்கிற ஐ.தே.க. ஆளுங்கட்சியின்ரை பொருளாதாரச் சரிவுகளைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஆளுங்கட்சிக்கு எதிராய் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எண்டு நடத்தித் தலையிடியைக் குடுக்குது'

'ஏன் ஜே.வி.பி. எண்டாப்போலை என்ன செய்யுது? அதுவும் தன்ரை பங்குக்குப் பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு ஏற்றம் இதுகளைக் கண்டிச்சு 10 இலட்சம் மக்களிட்டைக் கையெழுத்து வாங்கிற வேட்டையிலை இறங்கியிருக்காம்' அப்பு புன்முறுவலோடு கூறினார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆலமரத்தடி அப்பு...

'எங்கடை ஊரிலை பொங்குதமிழ் எழுச்சி! சிங்கள தேசத்திலை பொங்குவிலை எழுச்சி' குணம் இருந்தாற்போல கூறினான்.

'சீனி, மா இப்பிடியான அத்தியாவசியப் பொருட்களின்ரை விலையெல்லாம் அஞ்சாறு ரூபாயாலை கூடிப்போச்சுதாம். வன்னியிலை சும்மா சாதாரண நேரங்களிலையே இதைவிட விலையள் கூடத்தான். அதுவும் பொருளாதாரத் தடையாலை கையிலை காசு இருந்தாலும் சாமான் வாங்கேலாத நிலைமை' அப்பு பேத்தியை நினைத்துக்கொண்டவராகச் சொன்னார்.

'எங்கடையாக்கள் ஒருபக்கம் போராட்டம் எண்டு இருக்க, சந்திரிகா அரசாங்கம் இன்னொரு பக்கம் போராட்டக்களத்திலை குதிச்சிருக்காம் தெரியுமோ உங்களுக்கு?' காந்தன் கேள்வியொன்றைப் போட்டான்.

'போராட்டமோ? சந்திரிகா அரசாங்கமோ? உன்னாணை சத்தியமா எனக்குத் தெரியாதடாம்பி... என்னவாம் அது?' அப்பு கேட்டார்.

'அதெணையப்பு எதிர்க்கட்சியளின்ரை போராட்டத்துக்கு சிங்கள மக்கள் மத்தியிலை ஆதரவு பெருகி வாறதாலை, அதைத் திசை திருப்புறதுக்காக தங்கடை இராணுவ வெற்றியளைத் தம்பட்டமடிக்கிற மாதிரியான சுவரொட்டியளை ஒட்டி, பாரிய சுவரொட்டிப் போராட்டம் நடக்குதாம்' காந்தன் விளக்கினான்.

அப்பு தனது பொக்கை வாயைத் திறந்து பகபகவென்று சிரித்தார்.

'ஏன்னப்பு சிரிக்கிறியள்?' நவத்தையும் அப்புவின் சிரிப்புத் தொற்றிக்கொள்ளக் கேட்டான். 'குழம்புதடா! சிங்களம் குழம்புதடா!' அப்பு கைதட்டிச் சிரித்தார்.

'நீங்கள் சிரிக்கிறியள்... அவன் பல்குழல் எறிகணையளாலையும், மிக் 27 பிளேனுகளாலையும் மொங்கு மொங்கெண்டு மொங்கித் தள்ளுறான்' குணம் குறைப்பட்டுக்கொண்டான்.

'தம்பி குணம் அவசரப்படக்கூடாது, நான் முதலிலையோ சொன்னனான் எல்லோ... அரசியல் பற்றைக்குள்ளை புலி பதுங்கியிருக்குதெண்டு... இப்பிடிப் பதுங்கியிருக்கிறதுதான் சிங்கள தேசம் குழம்புறதுக்கான முக்கிய காரணம். விலையேற்றம், அதுக்கெதிரா எதிர்க்கட்சியளின்ரை போராட்டம், அதைவிட பேச்சுவார்த்தைக்கெதிரான கொடிபிடிப்புகள், கொடும்பாவி எரிப்புகள், பௌத்தபிக்குகளின்ரை போர்க்குரல், வெளிநாடுகள் கடன் குடுக்காமல் கையை விரிச்சது, சமாதானத்துக்குப் போ எண்டு வெளிநாடுகள் குடுக்கிற அழுத்தம், இதையெல்லாத்தையும்விட புலியளின்ரை சமாதான முயற்சியளை ஆதரிச்சு, மக்கள் போராட்டமாக நடந்த பொங்குதமிழ் எழுச்சி இப்பிடி எங்கை திரும்பினாலும் தலையெடுக்க முடியாதபடிக்கு பிரச்சினையள்!'

'கொழும்புப் பேப்பருகள் வேறை வெளுத்து வாங்குதுகள்' நவம் கிண்டலடித்தான்.

'என்னவாம்?' குணம் கேட்டான்.

'ஆயிரத்துக்கு மேற்பட்ட பல்குழல் பீரங்கிக் குண்டுகளை ஏவித்தானாம் உந்த உசுக்குட்டியோண்டு இடங்களைப் பிடிச்சவங்கள். அதுகும் எந்த நிலைமையிலை... புலியள் திருப்பித் தாக்காமல் விட்டிட்டுப் போனவை... அதாலை ஆயிரத்தோட போச்சுது. அதோடை அப்பிடிப் பிடிச்சுந்தானென்ன பிரயோசனம் எப்ப பறிபோகுமோ எண்டு வயித்தைக் கலக்குதாம்' நவம் உரத்துச் சிரித்தான்.

'உந்தக் குண்டுகள் ஒவ்வொண்டின் விலையும் எவ்வளவு தெரியுமோ?' அப்பு கேட்டார்.

குணம் தலையை ஆட்டினான்.

'ஒவ்வொரு குண்டும் ஆயிரம் டொலர் பெறுமதியாம். நிமிசத்துக்கு 35 இலட்சம் ரூபாய் கோவிந்தா!' அப்பு கையை உயர்த்திக் காட்டினார்.

'இவ்வளவு செலவு செய்து பிடிச்ச இடங்கள் அவையிட்டைத்தான் தொடர்ந்தும் இருக்குமா?' குணம் அப்பாவித்தனமாகக் கேட்டான்.

'என்ரை சிவனே! இவனுக்கு எத்தினைதரம் சொன்னாலும் விளங்காதடா' காந்தன் அலுத்துக்கொண்டான்.

'தம்பி தலைவர் சொன்னதுபோலை, 'வரலாறு ஒரு வழிகாட்டி', வரலாற்றிலை இருந்து நீ பாடம் படிக்கேல்லைப்போலை... இப்பிடி உள்ளுக்கை விடுற மாதிரி விட்டுப்போட்டு ஓயாத அலை மூண்டிலை வெளுத்து வாங்கினதுபோலை எங்கடையாக்கள் வெளுத்து வாங்காட்டில் இருந்துபார். அப்பிடியே ஓங்கி ஒரு அடி அடிச்சா... அது சிறீலங்காவின்ரை அரசியல், இராணுவம், பொருளாதாரம் மூண்டிலையும் பேரிடியா விழும்' அப்பு சொல்லியபடி எழுந்தார்.

'எல்லாம் அவன் செயல்' என்றபடி நவமும் எழ நண்பர்களும் எழுந்தார்கள்.

'அவன் நாங்கள் எதிர்பார்க்கிறதைச் செய்யிறதாய் இருந்தால் அது வெளிநாடுகளிலை இருக்கிற எங்கடையாக்களின்ரை ஒத்துழைப்போடைதான் முடியும். அவையெல்லாம் அவன்ரை செயலுக்குக் கைகுடுக்க வேணும்' அப்பு சால்வையை எடுத்து உதறி மீண்டும் தோளில் போட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்.

செவிவளைந்தானை அழைக்கவேண்டியதில்லையே..! அது அப்புவுக்கு முன்னால் பாய்ந்தோடியது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீண்டு நெடிதுயர்ந்த காடு மிக அடர்த்தியான, பலமான மரங்கள் கரிப்பட்டமுறிப்புச் சந்தியிலிருந்து வட்டக்கச்சி-இராமநாதபுரத்தை வந்து சந்திக்கும் பழைய கண்டிவீதியின் இரு மருங்கும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது அந்தக்காடு.

வெய்யில் ஒருதுளியும் எம்மீது விழாவண்ணம் குடை பிடித்து, மழைபெய்து ஓய்ந்துவிட்டதே என்று மறைவிடங் களிலிருந்து வெளிவரும் எம்மீது தன்முடியை ஒருமுறை சிலிர்த்து நீர்த்துளிகளைத் தெளித்து எம்மை நனைத்து, கீச்சிடும் குரலுக்குரிய குருவிகளை அண்ணாந்து தேடியவாறு நாங்கள் நடந்த ஒவ்வொரு முறையும் தவறாமல் தன் வேர்க் காலை நீட்டி எம்மைத் தடக்கி விழவைத்து, நேரம் குறிக்கப் பட்ட ஒன்றுகூடல்களுக்காகப் புறப்பட்டு அவசரமாகப் போய்க் கொண்டிருக்கின்றபோதுதான் உடைகளைக் கொழுவி இழுப் பதுவும், சிலவேளை கிழித்து மரியாதையைக் கெடுப்பதுவும், படியவாரிய தலைமுடியைக் கலைப்பதுவும், பாதணியை

# அடைகாத்த வனமும் அலை எழுந்த விதமும்

அறுத்து மானத்தை வாங்குவதுவும், கோபத் தோடு நிமிர்ந்து பார்த்தால் தன்னிடமிருக் கும் ஏதோ ஒரு பழக்குலையை நீட்டிச் சிரித் துச் சமாளிப்பதுமாக ஒரு இனிய குறும்புக் கார நண்பனாக இரண்டு வருடங்கள் அம்ப காமக் காடு எங்களோடு வாழ்ந்தது. எங்கள் வாழ்வின் மறக்கவே முடியாத காலப்பகுதி ஒன்று அந்தக் காட்டிடையே கழிந்தது.

உண்மையில் மறக்கமுடியாத நாட்கள் அவை. அன்னை மண்ணில் மூன்றாவது முறை எழுந்த பேரலை பகையை வேரடி மண்ணோடு தூக்கி விசியெறிந்தபின், விட்டு விடுதலையாகி புத்துணர்வோடு, புன்னகை யோடு எமை வரவேற்ற அந்தக் காட்டினுள் கால்கள் நடக்கும் வேகத்தை அலட்சியப் படுத்தியவாறு மனம் தன் பாட்டுக்கும் புறப் பட்டு முன்னே முன்னே போய்க்கொண்டி ருந்தது. காடெங்கும் நாம் வாழ்ந்த வாழ்வின் தடங்கள் ஒவ்வொன்றையும் கண்டதும், தடங் களுக்குரியவர்களின் நினைவில் நெகிழ்ந்து கொண்டது.

தேய்ந்து அறுந்ததால் கைவிடப்பட்ட பாதணிகள், வாகனத்தில் வரும் சாப்பாட்டை இறக்கி வைப்பதற்காக இடையிடையே அமைக்கப்பட்டிருந்த தட்டிகள், கைகள் காய்த்து இறுக இறுக நாம் வெட் டியமைத்திருந்த சிறு சிறு பின்னணி விநி யோகப் பாதைகள், வளைந்து நெளிந்து சுழிந்து நீண்டு செல்லும் தொடர் காவ லரண்கள்.

காவலரண்கள் என்று பெயர்தான், உண் மையில் அவை எங்கள் அந்தப்புரமாகவும் காவற்கோபுரமாகவும் இரட்டைப் பணியைச் செய்திருந்தன. காவலரண்களினுள்ளே உடை வைக்க ஒரு தட்டு, எதையாவது ஒளித்து வைக்க ஒரு பொந்து, ஆயுதம் வைக்க ஒரு தாங்கி, வெளியே தனியாக ஒரு அடுப்பு, அதற்கு ஒரு மறைப்புவேலி, வேலிக்குள் உணவுப் பாத்திரம் வைக்க ஒரு தட்டு.

இதிலிருந்த அனைவரும் எங்கே?

கொஞ்ச நாட்களின் முன்புவரை பொதி களையும், தண்ணீர்க் கொள்கலன்களையும் கடந்து இந்தப் பாதைவழியே நடந்து திரிந்த வர்கள் எங்கே?

வருவது பொதியாயிருந்தால்கூட அதை ஒருமுறை சுடவைத்து, கறிக்குள் வருகின்ற கருவாட்டையும் இறைச்சியையும் எடுத்துப் பொரித்து (மீள் சமையல்) சட்டியில் ஒட்டிக் கொண்டிருக்கும் எண்ணெயையும் வீணாக்க வேண்டாமே என்று சோற்றைப் போட்டுப் பிரட்டி எடுத்து இரவுணவு உண்டபின்னும் எஞ்சியிருக்கின்ற கறி, சொதி, சோறுகளை யெல்லாம் குழைத்துச் சூடாக்கிவைத்து, அதிகாலை இருள் பிரியமுன்னரே எழும்பி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-நதி-

எல்லோரும் மளமளவென்று சாப்பிட்டுவிட்டு, ஒருவருடத்துக்கு முன்புவரை இந்த இடத்தில் எதிரி வரவைக் கூர்ந்து பார்த்திருந்தார்களே சுட்டித்தனம் மிகுந்த பெண்கள் சிலர். எல்லோரும் எங்கே?

முன்னேறி வந்த ஜெயசிக்குறு மேலும் முன்னகர முடியாமல் இறுகிப்போய் நின்றது, அம்பகாமத்தில் நாம் அடியெடுத்து வைத்த பின்னர்தான். மாங்குளம் சந்தியிலிருந்து 700 மீற்றர் பின்னால் நின்ற எதிரிப் படைகளுக்குச் சந்தியை நெருங்குவது அசாதாரணமான காரியமாகத் தோன்றவே, கடும் முயற்சிகள் பலவற்றைச் செய்தும், சரிவராமல் போகவே, பகை தன் வலது காலை அம்பகாமம் நோக்கியும், இடது காலை வன்னிவிளாங்குளம் நோக்கியும் அகட்டத் தொடங்க, நாமும் பரந்து விரியத் தொடங்கினோம்.

அம்பகாமக்காட்டை எங்கள் வீராங்கனைகள் தங்கள் வீடுகளாக்கிக் கொண்டார்கள்.

அடர் காட்டுப்பகுதி, இடையிடையே மக்கள் வாழ்ந்து கைவிட்டுப் போன குடியிருப்புக்கள் என்று எல்லாவற்றினூடாகவும் எங்கள் காவலரண் வரிசை நீண்டது. இந்தத் தொங்கலிலிருந்து அந்தத் தொங்கல் வரை ஏதோவொரு தேவைக்காக எல்லோரும் நடந்து திரியவேண்டியிருந்ததால், காட்டை நாங்களும் எங்களைக் காடும் நன்கு புரிந்துகொண்டோம். மனம்விட்டுப் பழகிக் கொண்டோம். எத்தனையோ விடயங்களை நாங்கள் பகிர்ந்து கொண்டோம். எங்களுக்குத் தேவையற்ற பொருட்களை, குப்பைகளை, கழிவுகளைக் காடு விழுங்கிக்கொண்டது. எங்களுக்கோ காலத்துக்குக்காலம் உலுவிந்தம்பழம், வீரைப்பழம், சூரைப்பழம் என்று சிறு உணவுகளைத் தாராளமாகத் தந்துகொண்டிருந்தது.

ஏ! எங்கள் அழகிய அம்பகாமக் காடே! நினைவிருக்கிறதா? (1998-06-03) எங்கிருந்தெல்லாமோ ஏதேதோ வேலைகளுக்காக அவ்விடத்துக்கு வந்தவர்கள். நீண்ட காலத்தின்பின் எல்லோரும் தற்செயலாக ஒன்றான சந்தோஷத்தில் உன்மடியில் குதித்துக் குதூகலித்துக் கொண்டிருந்தார்களே சில நிமிடங்களுக்கு.

பொல்லாத நிமிடங்கள் அவை. திடீரென நிகழ்ந்தது அது. உனக்குக்கூடவா உள்ளுணர்வில் ஒன்றும் தெரியவில்லை. உன்னில் ஒரு வித்தியாசமும் தெரிந்ததாக நினைவிலில்லை. நீ தென்றலோடு கைகோர்த்து சிறுபிள்ளை விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்த போதல்லவா அது நடந்தது. ஒருவராலும் நம்பமுடியவில்லை. நம்பவே முடியவில்லை. ஒருநிமிடத்தின் முன்பு உன்னை அதில் வைத்துக்கொண்டிருந்தது அவர்களின் சிரிப்பு. கணநேரத்தில் சிரிப்பு உறைந்து, உன் உடலெங்கும் அவர் குருதி நனைந்து.

எங்கள் மூத்த போராளி மேஜர் தணிகா அடிப்படைப் பயிற்சி முடித்தபின் கண்ணிவெடி வேலைகளில் தேர்ச்சிபெற்று, பின்னர் வெடிமருந்து வேலை பயிற்றும் ஆசிரியராகி, பின்னர் மிகச் சிறந்த பதுங்கிச்சுடும் வீராங்கனையாகப் பணியாற்றினார். 1996 ஓயாத அலைகள்-1 இல் ஒரு மதிலோரம் வசதியாக நிலையெடுத்துக்கொண்ட தணிகாவின் பதுங்கிச்சுடும் துப்பாக்கி பல பகைவருக்கு முடிவைத் தேடிக்கொடுத்தது. அனைத்துக் கனரக ஆயுதங்களையும் மிக இலகுவாக இயக்கும் வல்லமைகொண்ட தணிகா அம்பகாமத்தில் எங்கள் கொம்பனியின் பொறுப்பாளராக உயர்ந்திருந்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்தஇடமாகக் கொண்ட மேஜர் மனோகரி அநேகமாக எல்லோருடனும் ஒத்துப் போகக்கூடிய ஒரு பம்பல்காய். 1993இல் மட்டக்களப்பிலிருந்து வந்த நாளிலிருந்து எங்களோடு களங்களைப் பகிர்ந்து கொண்டார். ஜெயசிக்குறுவை நாம் புதூரில் எதிர்கொண்ட சண்டையில் வயிற்றிலே பெரிய காயம் ஏற்பட, வயிற்றைப் பிடித்தபடியே நடந்துபோய், FN MAGக் குரிய மேலதிக ரவைக்கூடுகளை எடுத்து வந்து A9 வீதியில் நின்று சண்டைபிடித்துக் கொண்டிருந்த FN MAG காரரிடம் கொடுத்த பின்னரேயே களத்தை விட்டகன்றார். எங்கள் கொம்பனியின் 3வது பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

*(தொடரும்)*





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**மேஜர் கேடில்ஸ்**
மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை
14.05.1966 – 14.02.1987

பனை, தெங்கு தோப்பாய் அணி வகுத்திருக்க கனி மரங்கள் நிரை கட்டி நிற்கும் பிரதேசம் யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசம். இப்பிரதேசத்தில் ஆனையிறவும், நாவற்குழியும் என கடனீரேரியும் சதுப்பு நிலங்களும் நிறைந்த புவியியல் அம்சங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இப்பிரதேசத்தின் முதலாவது பொறுப்பாளனாக மேஜர் கேடில்ஸ் விளங்கினார். பதினெட்டு வயதிலேயே இப்பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

கண்டாவளையில் மகாலிங்கம் தம்பதியரின் புதல்வனாக அவதரித்த கேடில்சிற்கு பெற்றோர் இட்ட பெயர் திலீபன். இயல்பாய் சுறுசுறுப்பும், துரு துரு வென இருந்த கேடில்ஸ் புலமைப் பரிசில் தேர்வில் சித்தியடைந்து யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றார். பாடசாலைநாட்களில் கல்வியில் மாத்திரமன்றி விளையாட்டுத் துறையிலும் பிரகாசித்தார். தடகள விளையாட்டுக்களில் பல சாதனைகளைப்படைத்தார். க.பொ.த உயர்தரம் வரை கல்வி பயின்ற கேடில்ஸ் சிறீலங்கா இராணுவத்தின் கொடூரத்தனங்கள் கண்டு உள்ளங் கொதித்து, தாயக விடுதலையை இலட்சியமாக வரித்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்.

1980களின் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட கேடில்சின், எதையும் இலகுவில் விளங்கிக் கொள்ளும் ஆற்றலையும், நிர்வாகத் திறனையும், ஆளுமையையும் இனங்கண்ட மூத்த தளபதி கேணல் கிட்டண்ணா, அவரைத் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான பொறுப்பாளராக நியமித்தார். நாவற்குழியிலிருந்தும் ஆனையிறவிலிருந்தும் சிறீலங்கா இராணுவம் புறப்படுகின்ற வேளைகளிலெல்லாம் எண்ணிச் சில தோழரோடு எண்ணற்ற சிங்களப்படையை எளிதாய் விரட்டியடிப்பார். தென்மராட்சிப் பிராந்தியத்தில் மாத்திரமன்றி சிங்கள இராணுவம் யாழ் குடாநாட்டில் எப்பகுதியால் முன்னேறினாலும் அங்கு கிட்டண்ணாவோடு இந்த இளைய பொறுப்பாளனும் தனது குழுவினரோடு நிற்பார். களமுனைகளில் தேர்ந்த தாக்குதல் தலைவனாக விளங்கினார்.

அதுமாத்திரமன்றி தென்மராட்சிப்பகுதியில் மக்கள் மத்தியில் இருந்து செவ்வனே அரசியல் கடமைகளை ஆற்றினார். தேர்ந்த போராளிகளை போராட்டத்திற்கு தென்மராட்சியிலிருந்து எடுத்துத் தந்தார். மக்களோடு மக்களாக நின்று மக்களின் பிள்ளையாகக் கடமையாற்றிய கேடில்ஸ் மக்களின் பிரச்சினைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னின்று உழைத்தார்.

தென்மராட்சி வாழ் மக்களின் நல்வாழ்விற்காக தும்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்தார். எமது தாயகம் தன்னிறைவுள்ள, பொருண்மிய மேம்பாடுள்ள நாடாக மலர வேண்டும் என்ற தலைவரின் கனவை நனவாக்க அல்லும் பகலும் பாடுபட்டார். நெருக்கடியான சூழ்நிலைகளிலும் கடமை தவறாத நிதானம் பிசகாது தாயகப்பணியாற்றியவர் கேடில்ஸ். இன்றும் இவர் பெயரோடு விளங்கும் கேடில்ஸ் தும்புத் தொழில் நிறுவனம் தமிழீழ கயிற்றுத் தேவையை பூர்த்தி செய்வதில் முன்னின்று செயற்படுகிறது.

தாயகத்தின் விடுதலையை நேசித்த இந்த இளைய பொறுப்பாளன் எதிர்காலத்தில் தேர்ந்த பொறுப்பாளனாக சிறந்த தளபதியாக வருவானென விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தளபதிகள் இவனை ஆர்வத்தோடும் எதிர்பார்ப்போடும் காத்திருந்த நேரத்தில் நாவற்குழி முகாம் தகர்ப்பிற்குத் திட்டமிடப்பட்டது. தனது பிரதேசத்தில் வருகின்ற முகாமாகையால் கண் துஞ்சாது மெய்வருத்தம் பாராது முகாம் தகர்ப்பிற்கான ஏற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டார். விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்.கேணல் பொன்னம்மான், விடுதலைப் புலிகளின் தொழில்நுட்பப் பிரிவுப் பொறுப்பாளர் கப்டன் வாசு ஆகியோரோடு இணைந்து இராணுவத்திற்கு குடிநீர் கொண்டு செல்லும் பவுசரைப் பயன்படுத்தி இராணுவத்தைத் தகர்ப்பதில் முன்னின்று ஈடுபட்டார். அதன் போது ஏற்பட்ட விபத்தில் லெப். கேணல் பொன்னம்மானோடு, கப்டன் வாசு, லெப்.சித்தார்த்தன் உட்பட ஏழு போராளிகளோடு காற்றோடு காற்றாகிப் போனார்.

தமிழீழ மலர்விற்காய் அயராது உழைத்த இவ் வீரமறவனதும், இச் சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிய ஏனைய ஏழு மாவீரர்களினதும் 14ஆம் ஆண்டு நினைவில் நினைந்துருகி நின்று தாயக விடுதலைப்பணியில் எம்மை இணைத்து எம்பணி தொடர்வோம்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு தரப்பினரையும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க ஊக்குவிக்க வேண்டும்.

**விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.**

"முக்கியமான ஐரோப்பிய நாடான பிரித்தானியா விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்குமாயின் நோர்வேயின் நடுநிலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் கடுமையாகப் பாதிக்கப்படும்" என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆலோசகரும் தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 12.02.2001 அன்று தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். அச்செவ்வியின் சாரம் வருமாறு.



நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அனுசரணையாக, பக்கபலமாக நிற்கும் பிரித்தானியா, இரு தரப்பினரையும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க ஊக்குவிக்க வேண்டும். அதைவிடுத்து ஒரு சாரார் மீது அபாண்டமான பழியைப் போட்டு அவர்கள் மீது பயங்கரவாதக் குற்றத்தை பிரித்தானிய அரசு சுமத்துமேயானால், அது தமிழரின் இனப்பிரச்சினையில் பாரபட்சமாக நிகழ்த்தப்பட்ட ஒரு தலையீடாகவே கருத இடமுண்டு . அதேவேளை, நோர்வேயின் நடுநிலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

நோர்வேயின் நடுநிலையில் எமக்குள்ள நம்பிக்கையையும் அது தகர்த்துவிடும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் சண்டை முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு. அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளே பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக இருக்கும் என சந்திரிகா அரசு தெரிவித்த கருத்தை நாம் நிராகரிக்கின்றோம். வரலாற்றுரீதியாக அமைந்த தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாடு, தமிழ் மக்களின் தேசியத் தகைமை, அவர்களின் சுயநிர்ணய உரிமை ஆகியனவே இனப்பிரச்சினையின் அடிப்படைகளாக, மையக்கூறுகளாகக் காணமுடியும். இதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை அமைய முடியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வையும், நிரந்தர சமாதானத்தையும் காணவிரும்புபவர்கள் அனைவருமே பிரச்சினையின் அடிப்படைகளை மையக்கூறுகளை புரிந்து கொள்ளவேண்டும். இதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை அமையமுடியும் என்பதை திரு. அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியுள்ளார்.

## மடுத்திருப்பதியில் புலிகள்- தென்னிலங்கை சர்வமதக்குழுவினர் சந்திப்பு



18.02.2001 அன்று கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்ற சர்வமதக் குழுவினர் 19.02.2001 அன்று மடுத்திருப்பதியை அடைந்தனர். 36பேர் அடங்கிய இக்குழு வினரில் 30பேர் பௌத்த பிக்குகள் ஆவர். இதன்போது சர்வமதக்குழுவினர் விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியல்துறையைச் சேர்ந்த சுதா, புலித்தேவன், ஜெயன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## புலிகளைத் தடைசெய்ய வேண்டாம் களுத்துறைச் சிறைக் கைதிகள்

சமாதான முயற்சிகள் நடைபெற்று வரும் இன்றைய சூழலில் விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடைசெய்யக் கூடாது என களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். 500ற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் கையொப்பமிட்டு பிரிட்டன் தூதரகத்திற்கு விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாதெனக் கோரி மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர். விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு இலங்கை அரசாங்கம் கொடுத்து வரும் அழுத்தங்களுக்கு அடிபணியாது பிரித்தானிய அரசாங்கம் நல்லதொரு முடிவினை எடுக்கவேண்டும் என்று தமிழ் அரசியல் கைதிகள் பிரித்தானிய அரசிற்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர். இம்மகஜரில் கைதிகளின் பெயர், இலக்கம் என்பன குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது.

## அதிகரித்துச் செல்லும் சிறீலங்காவின் யுத்தச்செலவீடுகள்

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் 08.02.2001 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் பிரகாரம் பாதுகாப்புச் செலவீனத்திற்கென 6300 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீடானது, கடந்த ஆண்டு மேற்கொண்ட மேலதிக ஒதுக்கீட்டைத் தவிர்த்துப் பார்ப்பின்- கடந்த ஆண்டைவிட சுமார் 1000 கோடி ரூபா அதிகமாகும்.

அதாவது கடந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் 5300 கோடி ரூபா யுத்தத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்தபோதும். பின்னர் சிறீலங்கா இராணுவம் யுத்தத்தில் சந்தித்த பெரும் தோல்விகளைத் தொடர்ந்து பெரும்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் ஆயுதப்படை நவீனப்படுத்தப்பட்டது. இந்நிலையில் கடந்த ஆண்டில் யுத்தச் செலவீடானது 8400 கோடி ரூபாவையும் தாண்டிச் சென்றது. கடந்த ஆண்டு இராணுவச் செலவீனத்தைப் பார்க்கின்றபோது அது சந்திரிகா அம்மையார் பதவிக்கு வந்தபோது இருந்த செலவீட்டைவிட 32.5வீதம் அதிகமாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

Liberation Tigers Of TAMIL EELAM

**URGENT PRESS RELEASE**

**LTTE Headquarters**
**Vanni,**
**Tamil Eelam**
**28th Feb. 2001**

## THE BAN WILL IMPOSE SEVERE RESTRAINTS ON THE PEACE PROCESS – BALASINGHAM

The British decision to include the LTTE on the list of proscribed 'terrorist' organisations will impose severe restraints on the current peace initiatives undertaken by the Norwegian

# ஆங்கிலேயர்–தமிழர் உறவில் நிகழ்ந்த துக்க நாள்

'பயங்கரவாத அமைப்புகள்' என்ற பட்டியலில், பிரித்தானிய அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் சேர்ந்திருப்பது தமிழ் மக்களுக்கு ஆழ்ந்த கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுக்கும். அத்தோடு நோர்வே அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிக்கும் இது பெரிய பாதிப்பை இழைக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான திரு. அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். பிரித்தானிய உள்த்துறை அமைச்சு இன்று மாலை பாராளுமன்றத்தில் வெளியிட்ட 'பயங்கரவாத அமைப்புக்களின்' பெயர்ப்பட்டியலில் விடுதலைப் புலிகளையும் இணைத்திருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த திரு.பாலசிங்கம், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடிவரும் உண்மையான மக்கள் இயக்கமான எமது விடுதலை அமைப்பிற்கு பிரித்தானிய அரசினால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டிருப்பது எமக்கு வேதனையைத் தருகிறது எனக் கூறினார்.

"இன்றைய நாள், ஒரு சோகநாள். ஆங்கிலேயர்தமிழர் உறவில் நிகழ்ந்த துக்க நாள். விடுதலைப் புலிகளின் உத்தேசத் தடைக்கு எதிராக ஒன்றுதிரண்டு எழுந்து, ஒருமித்த குரல் எழுப்பிவந்த தமிழீழ மக்கள் பிரித்தானிய அரசின் முடிவினால் ஆழ்ந்த கவலையும் ஏமாற்றமும் அடைவர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை தமிழரின் நலன்களுக்குப் பெரும் குந்தகமாக அமையும். சமாதான முயற்சிகளையும் பெரிதாகப் பாதிக்கும். பிரித்தானிய அரசின் இந்த முடிவு சிங்கள இனவாத அரசின் விட்டுக்கொடாத கடும் போக்கை மேலும் தீவிரப்படுத்தும். இராணுவப் பாதையில் சென்று போரையும் வன்முறையையும் அரச பயங்கரவாதத்தையும் முன்னெடுக்கும். அதன் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்" என்று திரு.பாலசிங்கம் குறிப்பிட்டார்.

"பிரித்தானிய தடைச் சட்டத்தில், பயங்கரவாதம் என்ற பதத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் மிகவும் அகற்சியான, தெளிவற்ற வரைவிலக்கணத்தின்படி, சுதந்திரத்திற்கும் கௌரவத்திற்குமாக நிகழும் நியாயமான அரசியற் போராட்டங்கள் அனைத்துமே பயங்கரவாதமாகக் கருதப்படுகிறது. இந்த வரைவிலக்கணத்தின் தர்க்கத்திற்கு அமையவே விடுதலைப் புலிகளுக்கும் பயங்கரவாதப் பட்டம் சூட்டப்பட்டிருக்கின்றது. தமிழரின் அரசியற் போராட்டத்தின் நீண்ட சிக்கலான வரலாற்றையோ, அன்றி இனக்கொலைப் பரிமாணத்தில் விஸ்வரூபம் பெற்றுநிற்கும் சிங்கள அரசுகளின் ஒடுக்குமுறை வரலாற்றையோ அல்லது அடக்குமுறைக்கு எதிராகத் தோற்றம்கொண்ட ஆயுதப்போராட்டத்தின் மகத்துவமான வரலாற்றையோ இந்தத் தடைச்சட்டத்தை இயற்றியவர்கள் அறியவில்லைப் போலும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரித்தானிய தடைச்சட்டமானது பௌத்த இனவாதத்திற்குக் கிட்டிய பெரும் வெற்றியாகும். அத்தோடு நீதிக்கும் சமாதானத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்" என்று குறிப்பிட்டார் புலிகளின் அரசியல் ஆலோசகர்.

"பிரித்தானிய அரசு எமது விடுதலை இயக்கம் மீது தடை விதித்தபோதும் நாம் எமது சமாதான முயற்சியை விடாது தொடருவோம். நோர்வே அரசுக்கு எம்மாலான ஒத்துழைப்புக்கள் அனைத்தையும் வழங்குவோம். பிரித்தானிய அரசு, எந்த வகையில்- மென்முறையிலா அல்லது கடும் போக்கிலா- இப்பயங்கரவாதச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதில் தான் சமாதான முயற்சியின் எதிர்காலம் தங்கியிருக்கிறது" என்று கூறினார் திரு.பாலசிங்கம்.



initiatives depend precariously on the leniency or the harshness in which this draconian **legislation will be implemented by the law enforcing agencies in Britain", Mr Balasingham said.**

www.tamilarangam.net




# ஜனவரி 2001

**05.01.01**

கிளிநொச்சி காத்தான் நகர்ப் பகுதியில் சிங்களப் படை ஆக்கிரமித்து நின்ற காலத்தில் காணாமல் போனதாகக் கருதப்படும் 180 பொதுமக்களில் இருவரது எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

**09.01.01**

வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவனான சோமசுந்தரம் முகுந்தன் என்பவர் சிறீலங்காப் படைகளோடு சேர்ந்தியங்கும் கூலிக்குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டார்.

**10.01.01**

சிறீலங்கா அதிரடிப்படையினர் பரமேஸ்வரன் ஆனந்தமூர்த்தி என்ற இளங்குடும்பஸ்தரை வவுனியா வைரவர்புளியங்குளம் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளால் மோதிக் கொன்றனர்.

**14.01.01**

வவுனியா வைரவர்புளியங்குளப் பகுதியில் சிறீலங்காப் படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் பலியானார்.

**16.01.01**

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி சிறீலங்காப்படையினர் தென்மராட்சிப் பகுதியில் கினிகீர-9 என்ற குறியீட்டுப் பெயருடன், விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளைத் தகர்த்து முன்னேற முற்பட்ட வேளையில் விடுதலைப் புலிகள் தொடுத்த தற்காப்புச் சமரில் 18 படையினர் கொல்லப்பட்டனர். 90ற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**17.01.01**

கினிகீர-9 என்ற குறியீட்டுப் பெயருடன் சிங்களப் படையினர் மேற்கொண்ட படைநடவடிக்கையானது விடுதலைப் புலிகளின் உக்கிரமான தற்காப்புத் தாக்குதல்களால் இரு நாட்களில் கைவிடப்பட்டது. இரு நாட்களில் இடம்பெற்ற சமரில் நூறிற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதோடு, ஐநூறிற்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கடுங்காயங்களுக்குள்ளாகினர்.

**23.01.01**

24ஆம் திகதி முடிவடைய இருந்த ஒரு மாதகால ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம் மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கப்படுவதாக விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டது. நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு மேலும் கால அவகாசம் அளிக்கும் நோக்குடனும், ஒட்டுமொத்த தமிழீழ சமூகம் சமாதானம் வேண்டி விடுக்கும் அறைகூவலாகவும் மேலும் ஒரு மாதகாலத்திற்கு ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம் கடைபிடிக்கப்படவுள்ளதாக வன்னியிலிருந்து விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் விடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**04.01.01**



களுத்துறைச் சிறைச்சாலையில் 27 வயதான சண்முகராசா நித்தியதாஸ் என்ற இளைஞர் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டார்.

**17.01.01**



யாழ் பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்திருந்த பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட இடையூறுகள், தடைகள், அச்சுறுத்தல்கள் என்பன வற்றைத் தாண்டி வெகு எழுச்சிகரமாக நடைபெற்றது. சிறீலங்காப் படையினர் பல்கலைகழகத்திற்குச் செல்கின்ற பாதைகள் அனைத்தையும் கம்பி வேலி கொண்டு மூடியபோதும் குறுக்கு வழிகளால் மதிலேறிப் பாய்ந்து சென்று பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் பல்கலைக்கழக மைதானத்தில் திரண்டனர். பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையவர்கள் சுதந்திர தீபத்தை ஏற்றி வைக்க நிகழ்வு உணர்வுபூர்வமாக நடந்தேறியது. இந்நிகழ்விற்கு ஆதரவாக கிழக்குப் பல்கலைகழக சமூகமும், வவுனியா வளாகமும் எழுச்சி நிகழ்வுகளை நடாத்தின. உலகப்பரப்பெங்கும் பரந்து வாழும் தமிழீழ மாணவர்களும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்விற்குத் தமது ஆதரவை நல்கினர்.

**23.01.01**

முகமாலைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளுக்குள் ஊடுருவ முயன்ற சிறீலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு இளநிலை அதிகாரிகள் உட்பட11 சிங்களப்படையினர் கொல்லப்பட்டனர். மேலும் ஐவர் காயமடைந்தனர்.

**24.01.01**

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் 'விடுதலைப் புலிகளின் போர் நிறுத்தத்தை ஏற்று, போர்நிறுத்தம் செய்வதுடன் அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை உடன் மேற்கொள்ளவேண்டும்' எனக் கோரி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் வாகரைப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக சந்திரிகா, பிரதமர் ரட்ணசிறீ விக்கிரமநாயக்கா, ரத்வத்தை ஆகியோரது கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

மட்டு- தாண்டவன்வெளி மைதானத்தில் இடம்பெற்ற சர்வமதப் பிரார்த்தனை நிகழ்வில் படையினரின் அச்சுறுத்தல்களையும் மீறி இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவக் குருமார் கலந்து கொண்டனர்.

**30.01.01**



கல்முனை தமிழ்ப் பிரிவு உபபிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாக தரமுயர்த்தக் கோரி கல்முனை கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றிய ஏற்பாட்டில் கல்முனை வாழ் தமிழ் மக்கள் ஒரு வாரகால உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

**31.01.01**

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் பிரித்தானியாவைச் சேர்ந்த அரசசார்பற்ற தொண்டர் நிறுவனமான ஒக்ஸ்பாமின் பிரதான அலுவலகத்தின் மீது சிங்களப் பேரினவாதிகளால் கைக்குண்டொன்று வீசப்பட்டது. இதன்போது வாகனங்கள் பல சேதமடைந்தன, பல கட்டிடக் கண்ணாடிகள் நொறுங்கின. இக்குண்டுத் தாக்குதலுக்கு புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி என்ற பேரினவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது..



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “கண்கள் கூறும் வார்த்தைகள்”

**காணும் கண்களே, கூறும் வார்த்தை என்ன?**
**அஞ்சல் ஊடாக எரிமலைக்கு...**

குறிப்பு:
உங்கள்
ஆக்கங்களை
பத்து வரிகளுக்கு
மேற்படாமல்
எழுதவும்.





**எரிமலை**
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
FRANCE.

எனதும் உனதும் இறைமையை ஈட்டுதற்கு
அனைத்தும் கொடுத்து- இவர்கள்
துன்ப அகராதியை அனுபவித்து,
தெளிந்தவர்கள்.
பொருளாதார அகதிகளாய் 'ஏறியவர்களல்ல'
பொருள் இழந்து ஏதிலிகளாய் ஒதுங்கியவர்கள்.
சுதந்திரத்திற்காய் பிள்ளைகள்
போர்க்களத்தில்,
கட்டுமானத்திற்காய் பிதாவும் அன்னையும்
உலைக்களத்தில்.
நாளைய விடியலிற்குக் காத்திருக்கும் தேசத்தின்
இன்றைய சுமைதாங்கிகள்-
ஆழப்பதிந்த அழியாத தடங்கள்.

**ந.கேமராஜ்**
**இலண்டன் , ஐக்கியராச்சியம்**

வேர்விட்ட ஊர்விட்டு வெளியாலை
வந்தாச்சு.
பாழ்பட்ட ஆமியின்ரை பயம் விட்டுப் போச்சு.
நெல்லரிசிச் சோத்தாலை நிறைச்ச கும்பிக்கு
நீர் விட்டு எத்தனை நாள் நிரப்பிறது?
முழங்காலில் முகம்புதைச்சு முடங்கி
மூச்சுவிட்டு
நீள்துயரை நினைச்சழாத பொம்பிளையும்
ஆர் செய்த பாவமெண்டு அடிமனசில்
குமையாமல்
அறிஞ்ச தொழிலோடை அடி வச்ச
ஆம்பிளையும்
இணைஞ்சு பாடுபட்டால் இனி என்ன கிடக்கு
இருட்டு இனியில்லை இப்ப விடியும் கிழக்கு
நம்பிக்கை இவையின்ரை நாளை நகர்த்துது
அஸ்த்தமனம் ஆகாமல் சீவியம்
அர்த்தப்படுகுது.

**சி.சிவஞானசுந்தரம்**
**நூறன்பேக், ஜேர்மனி**

மாடி மனையாவும் மாற்றான்
மண்மேடாக்கியதால்
ஓடி வந்த விடத்தும் நாம்
ஓய்ந்திருக்கலாகாதென்று
சோடி சேர்ந்துழைக்கின்றோம்
சோற்றுக்கடிமையில்லை
வாடி வதங்கிடோம் தமிழர்
வளநாட்டின் விடுதலைக்காய் (போர்)
ஆடியே அரிந்திடுவோம்
சிங்க(ள)த்தின்
சி(அ)ரசையும் தான்.

**திருமதி.அ.றிச்சேட்**
**சின்டெல்பிங்கன், ஜேர்மனி**

ஆயுதம் செய்வோம் ஆலைகள் எங்கனும் ஓயுதல்
கொள்ளோம் தொழிற்சாலைகள் அமைப்போம்
பாயும் புலியும் பட்டறைக்குள் பவனிவரும்
காயும் நிலவும் கதிரொளியும் காடும், கடலும்
தாயும் சேயும் சேர்ந்தே உழைப்போம்
தேயும் தேசம் கண்டு கலங்கிடும் புலம்பெயர் உறவு
கையும் மெய்யும் வலிக்கும் வரை வாரிவழங்கிட
முன்வரும் போது
எரிபொருள் தடை, உணவுத் தடை
எத்தனை தடைகள் வந்திட்ட போதும்
எங்களின் தேசம் எங்களின் கைகளில்.

**யாழினி**
**யூலிச், ஜேர்மனி**

ஒழுக்குக் கூரைக்கு சேலைக்கிற்றும்
கட்டைச்சில்லுக்கு அச்சாணியும்
வெட்டைக் காணிக்கு கம்பி வேலியும்
கறுத்த முகங்களில் புன்முறுவல் சிரிப்பும்
வரப் போகும் பொன்னாட்கள்
இன்றும் வெகுதூரத்தே இல்லையென்று
காதோரம் சொருகிய எழுதுகோலும்
காரிகையின் கையுதவியும்
கூர் கொண்ட நேர்வாள் நகர்வும்
கட்டியம் சொல்கின்றனவே!

**சு.செங்கிரியான்**
**சூரிச், சுவிஸ்**

“வெங்களத்தினில் வாடா விரல்
நுனியால் சுண்டிடுவார்”
என்று விண்ணதிர வீரரெலாம்
முழங்கிடும் தேசத்தில்
பொறிகள் வருவதற்கு மாற்றானின்
தடையாம்
தடைகள் தகர்த்திட தாயும்
தந்தையும் பட்டறையில்
தனயனும் தங்கையும் களத்தினில்
எல்லையைக் காத்திட.

**வி.கண்ணன்**
**பாரிஸ், பிரான்ஸ்**

துருத்தியோடு பட்டறை- உடல்
வருத்தி மக்கள் பட்டதை
கருத்தில் உள்ளம் தொட்டதை-
நெஞ்சில்
இருத்தி வைத்த தேட்டத்தை
துரத்தி வந்த எதிரியை-அது
பருத்திடாமல் செய்யவே
அடித்துச் செய்வீர் ஆயுதம்.
வக்கிரங்கள் உடைப்பதற்கு
பக்கம் இரு சக்கரம்.
சொரிந்த கண்ணீர் துடைத்து- மரம்
அரிந்து வாழ்க்கை நடத்தினாலும்
பிரிந்து போன குடிசை போல
சரிந்திடும் எம் சங்கடங்கள்.

**எம்.கிருஸ்ணர்**
**சூரிச், சுவிஸ்**

**2000 டிசம்பருக்கான...**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசக்குரல்
போர்க்கால இலக்கியத்தின் யதார்த்தப் பதிவு
விடுதலை வேட்கை மிக்க எழுச்சிப் படைப்புக்கள்
மண்ணின் மணத்தோடு மனஉணர்வுகளை வெளிப்படுத்தும்
உன்னத இலக்கியமாக

சிறுகதைகள்
கவிதைகள்
மற்றும்

சமூகவியல், வரலாறு, தத்துவம்,
மொழியியல் இலக்கியக் கட்டுரைகள்
எல்லாவற்றையும்
தாங்கிவரும்

எரிமலை

கலை பண்பாட்டு அரசியல்
சமூக சஞ்சிகை.
இவ்விதழ் சார்ந்த தொடர்புகளுக்கு

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.


Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr



# எரிமலை

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்